# இன்றும் பேசும் இறைவன்

கடவுள் மனிதனுடன்
உரையாடின உண்மைச் சம்பவங்கள்

*ஆசிரியர்*

**வில்லியம் மெக்டொனால்டு**

மோரியா
ஊழியங்கள்

**God Still Speaks** *in Tamil*
William MacDonald
© William MacDonald 2013

**இன்றும் பேசும் இறைவன்**
வில்லியம் மெக்டொனால்டு
© காப்புரிமை: வில்லியம் மெக்டொனால்டு 2013

ISBN 978-93-81016-30-5
Publication No. 50

*Published by*
Moriah Ministries
Email: <moriahministries@gmail.com>
Phone: 91-044-2664 5010/9962133135

*Address*
Moriah Ministries,
57/51, East Park Road
Post Box No. 2540,
Shenoy Nagar,
Chennai - 600 030

*Branch Address*
Moriah Ministries,
C/o Bethany Gospel Hall,
16, North Street,
Mannarpuram,
Tiruchirapalli, 620 020, India.

Typeset & Cover Design: Moriah Ministries
Printed in India

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்பகத்தார் உரை | V |
| 1. தேவன் பேசும் முறைகள் | 1 |
| 2. சாட்சி சொல்ல கிடைத்த இரண்டாம் வாய்ப்பு | 8 |
| 3 நாஷ்விலியில் உருவான திருச்சபை | 13 |
| 4. அந்நிய நுகம் | 17 |
| 5. உறுதிப்படுத்திக்கொள்ளுதல் | 22 |
| 6. அந்நாட்டில் குடியிரு | 25 |
| 7. வயது ஒரு பொருட்டன்று | 28 |
| 8. ஈக்குவடாருக்குப் போ | 31 |
| 9. விடியற்காலைக் களிப்பு | 35 |
| 10. விருதாவாக உழைக்கிறேனே! | 39 |
| 11. இவ்வியாதி மரணத்திற்கு ஏதுவானதல்ல | 42 |
| 12. கர்த்தரிடமிருந்து பெற்ற ஏழு வார்த்தைகள் | 45 |
| 13. இரட்சிப்பும் நீண்ட ஆயுளும் | 54 |
| 14. மயிரிழையில் தப்பினான் | 57 |
| 15. அளவுக்கு மீறிய தாழ்வு மனப்பான்மை | 61 |
| 16. மரணத்திலிருந்து மீட்கப்பட்ட ஸ்டீபன் | 64 |

17. ஒழுக்கங்கெட்ட நடத்தையால் வந்த வினை 69

18. மக்களின் இரட்சிப்பை முன்னுரைத்த இறைவாக்கு 73

19. அருட்காட்சி நிறைவேறும் 77

20. தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம் 80

21. நீர் ஒருவரே சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர் 87

22. மேன்மை பாராட்டலுக்கு இடமில்லை 92

23. ஜப்பானிய சுவிசேஷகர் மாட்சுசாக்கி 95

24. சொந்தமாக்கிக்கொள்ளுதல் 99

25. அடிமையின் கோரம் 103

26. மலர் கொள்முதலில் உதவிய தேவன் 106

27. புத்திக்கு எட்டாத சமாதானம் 110

28. திரும்பி வா! 114

29. தவறாகப் புரிந்துகொள்ளுதல் 120

30. மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் செய்யட்டும் 124

31. நற்செய்தி நவின்ற பொருத்தமற்ற இறைவாக்கு 129

32. மகிழ்ச்சியுடன் கர்த்தரைச் சேவியுங்கள் 133

33. முடிவுரை 138

பிற்சேர்க்கை:
உன் வாளைத் திரும்ப அதன் உறையில் போடு 141

# பதிப்பகத்தார் உரை

இந்நூல் ஒரு சிறுகதைத் தொகுப்பல்ல. இவை கர்த்தருடைய மக்களின் வாழ்க்கையில் நடைபெற்ற உண்மை அனுபவங்களேயாகும். கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் போதிக்க விரும்பும் பாடங்களாக இவ்வுண்மை சம்பவங்கள் அமைந்துள்ளன.

கர்த்தருடைய ஊழியத்திற்குத் தன்னை ஒப்புவித்துள்ள வாலிப சகோதரன் ஒருவர் இந்நூலைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்ற உந்துதலைப் பெற்றார். அவர் எடுத்த முயற்சியை நிறைவு செய்துள்ளோம்.

இதைப் படிக்கையில் பற்பல உணர்வுகள் எழுகின்றன. உடல் சிலிர்த்து, உள்ளம் உருகி, சிந்தை கலங்குகிறது. தேவன் நம்மோடும் பேசுகிறார், அவர் கரம் நம்மேல் அமருகிறது. அவர் நம்மையும் எச்சரித்து உற்சாகப்படுத்துகிறார். நாம் புதிய பாடங்களைக் கற்றுக் கொள்ளுகிறோம். நம் விசுவாசம் வளர்கிறது. நம் ஒவ்வொருவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் மட்டும் அல்ல, அன்றாட வாழ்வில் எதிர்ப்படும் சூழல்கள் எவையாயினும் அவற்றை எவ்வாறு சந்திக்க வேண்டும் என்பதை இவ்வனுபவங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இதில் துக்கவேளையில் கடந்து செல்லுவோருக்கு ஆறுதல் தரும் அனுபவங்களும் உள்ளன. வாழ்க்கைப் போராட்டங்களில் சிக்கியிருப்போருக்கும், சொந்தத் தொழிலும், வியாபாரத்திலும், அலுவலகங்களிலும் பிரச்சினைகளை எதிர்கொள்வோருக்கும் ஏற்ற ஆலோசனைகள் இதில் உள்ளன. அருட்பணி ஊழியர்களுக்கு தேவையான நல்ல பாடங்கள் உள்ளன.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக தேவன் எழுதிக் கொடுத்த திருவார்த்தைகள், அதில் அடங்கியிருக்கும் சந்தர்ப்ப சூழல்கள், இந்த இருபத்து ஒன்றாம் நூற்றாண்டிலும், விஞ்ஞானமும் நாகரீகமும் வளர்ச்சியடைந்திருக்கும் நாட்களிலும் தனிப்பட்ட தேவைகளைச் சந்திக்கின்றன. இது விந்தையே!

இறைவன் நம்முடன் நேர்முகமாகப் பேசும்போது நாம் மன அமைதியையும், மகிழ்வையும் அடைகிறோம். தோல்வியின் எல்லையிலிருந்து வெற்றியின் உயர் நிலைக்கு வருகிறோம். வாழ்க்கையில் அற்புதங்கள் நிகழ்கின்றன. இவ்வற்புதச் சம்பவங்கள் இயற்கை நியதிகளுக்கு உட்பட்ட அன்றாட நிகழ்வுகளாக உள்ளனவே தவிர, மாயஜால வித்தைகளாக இருப்பதில்லை. ஏறெடுக்கும் விண்ணப்பங்கள், ஜெபங்கள் எவையாயினும் பதில் கிடைக்கிறது. ஒருவேளை அது 'ஆம்' என்றோ, 'இல்லை' என்றோ இருக்கும். சில விண்ணப்பங்களுக்கு உடனே பதில் கிடைப்பது உண்டு; மற்றும் சிலவற்றிற்கு ஆண்டுகள் பல ஆவதும் உண்டு. தேவன் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்தக்கூடியவராக இருக்கிறார். மனித அறிவால் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் தேவதயவால் எளிதாகத் தீர்க்கப்படுகின்றன.

இவ்வுண்மைச் சம்பவங்களின் மூலம் நாம் நமது விண்ணகத் தந்தையைப் பற்றிய ஒரு முழுமையான வெளிப்பாட்டைப் பெறுகிறோம். அவர் சமீபத்திற்கும், தூரத்திற்கும்

ஆண்டவர். அவர் நமக்கு சமீபத்தில் நின்று உதவுகிறார். அதே சமயத்தில் நாம் காணாத தூரத்தில் உள்ளவர்களுக்கும் செயலாற்ற வல்லவராக இருக்கிறார். ஒரே நேரத்தில் இரு எல்லைகளில் உள்ளவர்களிடம் அவர் பேசுகிறார். அவர் கடந்த காலத்திற்கும் நிகழ் காலத்திற்கும் ஆண்டவராக இருக்கிறார். இன்று நமது அனுதின வாழ்க்கைச் சூழலுக்குப் பொருத்தமான ஆலோசனைகளைத் தமது திருமறையில் பதிவு செய்து வைத்திருக்கிறார். அவருடைய முன் அறிவும், பின் அறிவும் நமது பார்வைக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

நமது தேவன் தமது சொந்தப் பிள்ளைகளிடம் பேசி, அவர்களுக்காகக் காரியங் களைச் சாதிக்கிறார். அவ்வாறே தமக்குத் துரோகிகளாக உள்ள பாவிகளிடமும் பேசி செயலாற்றித் தம்மண்டை அழைத்துக்கொள்கிறர்.

சில சமயங்களில் அவர் சாந்தமாகக் கிரியை செய்கிறார்; மற்றும் சில சமயங்களில் கடுமையாக ஈடுபடுகிறார். இச்செயல்களுக்குப் பின்னாக உள்ளவை அவர் காட்டும் அருமையான அன்பும் கிருமையுமாகும்.

ஆம்! நமது தேவன் இறையாண்மை உடைய கர்த்தர். அவர் நம்மிடம் ஈடுபடும் போது அவருடைய நோக்கத்தை நாம் அறிந்துகொள்ளுகிறோம். மனஅமைதியையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்கிறோம். பிறருக்கு நாம் ஆறுதலைக் கொண்டு வரக் கூடியவர்களாகிறோம்.

இத்தகைய அனுபவங்கள் ஊடாகக் கடந்து செல்லும்போது, நமது விசுவாசம் வளர்கிறது. தேவ அன்பால் கனமும் பக்தியும் பெருகுகிறது. நாம் நமது தாழ்வை உணருகிறோம். அவரை உள்ளான இருதயத்துடன் துதிக்கிறோம், போற்றுகிறோம் அவரை உயர்த்துகிறோம்!

மேலே இவ்வுரையில் எழுதப்பட்டுள்ள விவரங்களை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இந்நூல் முழுவதையும் படித்து முடித்தப் பின்னர், மீண்டும் ஒருமுறை இவ்வுரையை படிக்கும் போது ஏற்ற விதமாகப் புரிந்துகொள்ள இயலும்.

பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ள சம்பவம் நமது தமிழ் நாட்டில் நடைபெற்ற சம்பவமாகும். இது இந்நூலாசியர் திருவாளர் வில்லியம் மெக்டோனால்டு எழுதிய தன்று. ஆங்கில நூல் உரிமையாளர்களின் அனுமதியுடன் இது சேர்க்கப்பட்டிருக் கிறது.

இந்நூலினை மொழிபெயர்த்து வெளியிட அனுமதியளித்த காப்புரிமையாளர் களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இன்று இறைவன் உங்களுடன் பேசுவாராக.

1



# தேவன் பேசும் முறைகள்

மனிதனுடைய கவனத்தைக் கவரக்கூடிய பற்பல முறைகளில் தேவன் பேசிவருகின்றார். அவர் ஒரு போதும் தன்னைக் குறித்த சாட்சியை மக்கள் மத்தியில் விளங்கப்பண்ணாமல் இருந்ததில்லை (அப். 14:17). நாம் கடவுளை அறிய முடியாது என்பதற்கு ஏற்ற காரணம் ஒன்றையும் கற்பிக்க முடியாது. தேவன் மனுமக்களை அப்படிப்பட்ட ஒரு அவல நிலையில் விட்டுவிடவில்லை.

முற்காலத்தில் தேவன் **தீர்க்கதரிசிகளின்** (எபி. 1:1–2) மூலமாக வெவ்வேறு வகையான காலகட்டங்களில், வெவ்வேறு முறைகளில் வெளிப்பாடுகளை அருளி வந்தார். ஆயின், இப்பொழுது அவர் தம்மைக்குறித்த இறுதியும் முழுமையுமான வெளிப்பாட்டை தமது திருக்குமாரனாகிய கிறிஸ்துவின் வழியாக அருளியுள்ளார் (யோவான் 1:18). ஆம், அவர் **தமது குமாரன்** இயேசு கிறிஸ்து மூலமாய்ப் பேசுகின்றார்.

இறை வார்த்தைகள் அடங்கிய தூய **வேதாகமத்திலிருந்து** தேவனுடைய குரலை நாம் கேட்கிறோம். தூய ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டதும், பிழையற்றதுமான இந்நூலின் மூலம், நமது வாழ்வுக்கும் தேவபக்திக்குத் தேவையான அனைத்தையும் அவர் வழங்கி வருகிறார் (2 பேதுரு 1:3). பல சங்கீதங்களை இயற்றிய தாவீது அரசர், **"உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்"** (சங். 138:2)

*என்று கூறியிருக்கிறார். அதாவது, தன்னைக் குறித்த அனைத்து வெளிப்படுத்தல்களுக்கும் மேலாக தேவன் தமது திருவார்த்தை யையை உயர்த்தியுள்ளார் என்று இவ்வசனம் எடுத்துரைக்கிறது. இவ்விறை வார்த்தை உயிருள்ளது. இது எழுதப்பட்டு நமது கரங் களில் வழங்கப்பட்டிருக்கிறது.*

*கடவுள் தம் **படைப்பின் மூலமாய்** பேசி வருகின்றார்.*

வானங்கள் கடவுளின் மகிமையை வெளிப்படுத்துகின்றன;
விண்மண்டலம் அவர் கரங்களின் கிரியையை விவரிக்கிறது.
பகலுக்குப் பகல் வார்த்தைகளை உரைக்கிறது;
இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது.
அவைகளுக்குச் சத்தமுமில்லை, மொழியுமில்லை,
அவற்றின் தொனி கேட்கப்படுவதுமில்லை.
ஆயினும், அவைகளின் அளவுநூல் உலகமெங்கும்
அவைகளின் வசனங்கள்
பூமியின் கடை எல்லை வரைக்கும் செல்கின்றன.

(சங். 19:1–4 திருத்திய பதிப்பு)

*கர்த்தர் மனிதனுடைய **மனசாட்சியின் மூலமாய்** பேசுகின் றார். சரியானது எது, தவறானது எது என்பதையும் அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டையும் அறிந்துகொள்ள உதவுவது இந்த மனசாட்சியே. இது மனிதனின் உடன்பிறந்த உள்ளுணர் வாகும். **"மனிதனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க் கும்"** என்று நீதிமொழிகள் 20:27 -இல் சொல்லப்பட்டுள்ளது. இவ் வசனத்தில் மனிதனுடைய மனசாட்சி அவனுடைய ஆவியுடன் தொடர்புபடுத்திச் சொல்லப்படுகிறது. பவுல் அப்போஸ்தலர், மன சாட்சியே மனிதர்களுக்கு சாட்சியாக நிற்கிறது என்று விளக்க மளிக்கிறார்: **"குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறது"** (ரோமர் 2:15).*

*தேவன் தமது **பரிசுத்த ஆவியானவர் மூலமாய்** பேசிவரு கின்றார். ஆவியானவர் வேத வசனத்தைக் கொண்டே பெருமள வில் நம்முடன் தொடர்புகொண்டு பேசிவருகிறார். அதே வேளை யில், தேவன் நமது சிந்தனைகளையும், மனவெழுச்சிகளையும், அறிவுத்திறனையும் ஆட்கொண்டு, தமது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்தக்கூடியவராயும் உள்ளார் (அப். 16:6–7).*

*தேவன் கூற விரும்பும் தகவல்களை நமக்குத் தெரியப்படுத்த, அவர் பல வேளைகளில்* ***மற்ற மனிதர்களையும்*** *பயன்படுத்தி வருகின்றார். இறைபக்தியுள்ள பிரசங்கிமார்கள், போதகர்கள் மற்றும் உள்ளூர் சபையின் மூப்பர்கள் ஆகியோரின் மூலமாய் அவர் பேசுகிறார். விதிவிலக்காக சில வேளைகளில் இரட்சிக்கப் படாத மனிதர்களைக் கொண்டும் அவர் பேசக்கூடும்.*

***கனவுகளையும் தரிசனங்களையும்*** *பயன்படுத்தி தேவன் நம்முடன் பேசக்கூடுமா? யோபுவை சந்தித்த எலிகூ என்பவன் பின்வருமாறு உரைத்துள்ளான்.*

> கடவுள் ஒருமுறை பேசுவார், இருமுறையும் பேசுவார்.
> மானிடரோ அதைக் கவனிக்கிறதில்லை.
> சொப்பனத்தில், இராக்காலத்தின் தரிசனத்தில்,
> மனிதர் அயர்ந்து நித்திரைக்குட்படுங்கால்
> படுக்கையின்மேல் அவர்கள் உறங்கும் சமயத்தில்,
> அப்பொழுது, மனிதர் செவியைத் திறந்தருளி,
> அவர்களை எச்சரித்து பயங்கொள்ளச் செய்கிறார்.
> (யோபு 33:14–16; திருத்திய பதிப்பு)

*பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த யாக்கோபு, யோசேப்பு, பார்வோனின் பணியாட்களாகிய சுயம்பாகி மற்றும் பானபாத் திரக்காரன், நேபுகாத்நேச்சார் மற்றும் தானியேல் ஆகியோரு டைய வாழ்விலும், புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்ற மரி யாளின் கணவன் யோசேப்பு, பவுல் ஆகியோருடைய வாழ் விலும் இது உண்மையாய் நிகழ்ந்துள்ளது.*

**தேவ தூதரால்** *உரைக்கப்பட்ட தேவசெய்தியையும் மக்கள் பலமுறை கேட்டுள்ளனர். பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்ற கர்த்தருடைய தூதனானவரைக் கொண்டு தேவன் பேசியது சிறப்பான ஒன்றாகும். ஆண்டவர் இயேசு மனுவுரு எடுப்பதற்கு முன்பாக மனிதர்களுக்குத் தோன்றியதையே "கர்த்தருடைய தூதனானவர்" என்னும் சொற்றொடர் குறிக்கின்றது.*

***இயற்கை நிகழ்வுகளின் மூலம்*** *இறைவன் பேசுவதை நாம் கேட்கக்கூடும். இடி முழக்கத்தைக் கொண்டும் (யோபு 37:1–5; சங். 29:109; 77:18; 104:7), நோவா காலத்து பெருவெள்ளம் மற்றும் சோதோம் கொமோரா பட்டணங்களின் நாசம் போன்ற பேரழிவுகளைக் கொண்டும் தேவன் மனிதர்களிடம் பேசியதை நாம் கேட்டிருக்கிறோம்.*

தேவன் **அடையாளங்கள், அற்புதங்கள்** மூலமாகவும் பேசு கிறார். ஒன்றை குறிப்பிட்டுக் காண்பிப்பதற்காகச் செய்யப்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளே அடையாளங்கள் எனப்படும். ஆச்சரிய உணர்வைத் தூண்டும் வண்ணமாகச் செய்யப்படும் அதிசயச் செயல்களே அற்புதங்கள் எனப்படும்.

பரவசமூட்டும் வகையில் ஒரேயொரு நிகழ்வில் மட்டும் அவர் ஒரு **மிருகத்தின்** மூலமாய்ப் பேசினார். இறைவனுக்குக் கீழ்ப்படியாத பிலேயாம் தீர்க்கதரிசி தன்னைச் சுமந்துசென்ற கழுதையை நியாயமின்றி அடித்துத் துன்புறுத்தியதால் அது அவனைக் கடிந்துகொண்டதை நாம் வேதத்தில் படிக்கிறோம் (எண். 22:28,30).

ஆச்சரியமான விதங்களில் **ஒன்றுகூடிவரும் சூழ்நிலைகளின்** மூலமாய் இறைவன் நம்முடன் பேசக்கூடியவராய் இருக்கிறார். அசாதாரணமான முறையில் பல நிகழ்வுகள் ஒரே நேரத்தில் கைகூடிவரும்போது, இறைவன் நம்மிடம் ஏதோ ஒரு தகவலைத் தெரிவிக்கின்றார் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். எடுத்துக்காட்டாக எஸ்தர் 6:1–4; 2 இராஜாக்கள் 8:1–6 ஆகிய வேதபகுதிகளைக் காண்க.

மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள பலமுறைகளில் விண் இறைவன் மனுமக்களுடன் பேசி வருகிறார் என்பதைத் திருமறை நமக்குத் தெளிவாகப் போதிக்கிறது. இப்பொழுது, வேத வசனங்களின் மூலமாய் கர்த்தர் தம் மக்களிடம் பேசியுள்ள உற்சாகமூட்டும் அனுபவங்களைக் குறித்து பின்வரும் பக்கங்களில் நாம் பார்க்கப் போகின்றோம். பிறர் அவற்றை அவ்வாறே ஏற்றுக்கொள்ளாதிருப்பினும், தேவனுடைய வார்த்தையைக் கேட்ட இவர்கள், மெய்யாகவே தேவன் தங்களிடம் நேரடியாகப் பேசினார் என்பதை மிக உறுதியாக அறிந்திருந்தனர். தேவன் தங்களுடன் பேசினதாக அவர்கள் எடுத்துக்கொண்டுள்ள அவ்வேதபகுதிகள், அதன் சந்தர்ப்ப சூழலிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்திருப்பினும், அது அவர்களுக்கு எவ்வித பாதிப்பையும் உண்டாக்கவில்லை. இதில் நாம் கவனிக்கக் கூடியது யாதெனில், இந்த வசனங்களைக் கேட்டோர் அதனைத் தங்கள் வாழ்வில் செயல்படுத்த வேண்டியதொன்றே அவசியமாக இருந்தது. அதன் அர்த்தத்தைத் குறித்து எண்ணித் தயங்கவோ, ஐயப்படவோ தேவையில்லாதிருந்தது.

இந்நூலை தொடர்ந்து வாசிக்கும் முன், ஓர் எச்சரிப்பின் வார்த்தையைச் சொல்லவேண்டியது அவசியமாயிருக்கிறது. என்னவெனில், தேவன் வேதாகமத்தின் மூலமாய் தங்களிடம் பேசியுள்ளார் என்று சிலர் சிலவேளைகளில் தவறாக எண்ணிக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டான ஒரு சம்பவம் இதோ. ஒரு மனிதர் மரணத்திற்கு ஏதுவான நோயினால் உடல்நலம் குன்றி யிருந்தார். அவருடைய குடும்பங்களில் சிலரை அந்நோய் முன்ன தாகவே பலிகொண்டிருந்தது. அந்நோயாளியின் மரணத்தைக் குறித்து கர்த்தரும் முன்பே தம் சித்தத்தையும் வெளிப்படுத்திவிட் டார் என்பது அவரது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெளிவாகக் காணப்பட்டது. தேவன் நோயுற்ற அம்மனிதரை தன் பரம வீட்டிற்கு அழைத்துக்கொள்ளப்போகிறார். இப்படி இருக் கும் வேளையில், அவரும் அவருடைய மனைவியும் காலை குடும்ப ஜெபத்தில் வேதாகமத்தை வாசித்தனர். அப்பொழுது, **“நான் சாவாமல், பிழைத்திருந்து கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்”** சங்கீதம் 118:17 -என்ற வேத வசனத்தை அவர்கள் வாசிக்க நேர்ந்தது. நோயுற்ற அவருக்கு முழுசுகம் கிடைக்கும் என்பதாக தேவன் தங்களுக்கு அருளிய வாக்குத்தத்தமே இவ் வசனம் என்று கூறி அவர்கள் இருவரும் உரிமைபாராட்டினார் கள். ஆயினும் சில வாரங்களுக்குள்ளாகவே நோயுற்ற அம்மனிதர் இறந்துவிட்டார். இப்பொழுது நம் முன் ஒரு கேள்வி எழுகின்றது. ஏன் அவர்களுடைய விசுவாசத்திற்கு பலன் கிடைக்கவில்லை? மெய்யாகவே, நாம் அதன் பதிலை அறியமாட்டோம். நாம் செய் யக்கூடியதெல்லாம் தன் வழிகளில் பூரணராயிருக்கிற தேவனி டத்தில் அதனை விட்டுவிடுவதுதான் (சங். 18:30).

இது இவ்வாறு இருக்க, ஒரு வாக்குத்தத்தத்தை உரிமை பாராட்டிய பின்னர், அதனைத் தவறான முறையில் நமக்கென்று பயன்படுத்தியுள்ளோம் என்று அறியவரும் வேளையில், நாம் என்ன செய்யக்கூடும்? தானியேல் நூலில் வரும் அம்மூன்று எபிரெய வாலிபர்களையும் அக்கினி சூளையிலிட்டுக் கொல்லும் படி தீர்ப்பளிக்கப்பட்ட வேளையில், அவர்கள் உரைத்த இறுதி வார்த்தைகளையே நாமும் நமது வாழ்வின் அப்படிப்பட்ட வேளைகளில் எடுத்துரைக்க வேண்டும். தேவன் தங்களை விடு விப்பார் என்று அவர்கள் முற்றிலும் விசுவாசித்தனர். “நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவரா

*யிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்" என்று அவர்கள் கூறினர் (தானி. 3:17).*

இதை அவர்கள் கூறிய பின்பு, தேவன் தங்களுக்கென்று வேறொரு திட்டத்தைக்கூட வைத்திருக்கக்கூடும் என்பதை உணர்ந்தவர்களாய், ***"அவர் எங்களை விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது இராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது"*** *(தானி. 3:18)* என்று உறுதியுடன் கூறினர். அவர்களைப் போன்றே நாமும், "அப்படி ஆகாமற்போனாலும்" என்ற வாசகத்தை எப்பொழுதும் சேர்த்துச் சொல்லக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

குலுக்கல் சீட்டை எடுக்கும் முறையைப் போல் கருத்தற்ற மனதுடன் வேதாகமத்தை பயன்படுத்துவதை நாங்கள் சிறிதும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதை வாசிப்போர் அறிந்துகொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, விசுவாசி ஒருவன் தன் வாழ்வில் கர்த்தருடைய வழிநடத்துதலைத் தேடுகிறான். ஆதலால் வேதாகமத்திலிருந்து ஏதாவது ஒரு பக்கத்தைத் திறந்து வாசித்து அதைத் தெரிந்துகொள்ளலாம் என யோசிக்கிறான். தன் கண்ணில் படும் முதல் வசனம் எதுவோ, அதுவே தேவன் தன்னை வழிநடத்துவதற்கென்று அளித்த வார்த்தை என எண்ணுகிறான். தேவனுடைய வழிநடத்துதலை அறிவதற்கு இது சரியான முறையன்று. அனைவரும் நன்றாய் அறியப்படுகிற கதை ஒன்று உண்டு. தேவன் தன்னை என்ன செய்யச் சொல்கிறார் என்று அறிந்திட முன் சொன்ன வண்ணமாகவே ஒருவன் வேதாகமத்தைத் திறக்கிறான்; திறந்தவுடன் "(யூதாஸ்) போய் நான்று கொண்டு செத்தான்" (மத். 27:5) என்று வாசித்தான். அதை அவன் விரும்பாததால் மீண்டும் முயன்று பார்க்க யோசித்தவனாய் வேதத்தைத் திறந்தான். இம்முறை "நீயும் போய் அவ்விதமாகவே செய்" (லூக். 10:37) என்ற வசனம் காணப்பட்டது. அந்த அறிவுரையை ஏற்க மறுத்து அவன் மூன்றாம் முறையும் முயன்று பார்த்தான். இம்முறை "செய்ய வேண்டியதைச் சீக்கிரமாய்ச் செய்" (யோவான் 13:27) என்ற வசனத்தை வாசித்தான். தனது வாழ்வைக் குறித்த தேவசித்தத்தை அறிய இவ்விதமாய் இறை ஆலோசனையைத் தேடும் முறையை

விட்டுவிட வேண்டும் என்பதை இந்த அனுபவம் அவனுக்கு கற்றுக் கொடுத்திருக்கும் என நாம் உறுதியாய் நம்புகிறோம்.

இவ்வகையான நகைக்சுவை கட்டுக்கதைகளை நாம் கேட்டிருப்பினும், எழுதப்பட்டுள்ள தனது வசனத்தின் மூலமாய் தேவன் நேரடியாகத் தம் மக்களிடம் பேசக்கூடியவராய் உள்ளார் என்பது உண்மையே. தமது திருவசனத்தைக் கொண்டு தம் மக்களிடம் இன்றும் தேவன் பேசி வருகிறார் என்ற உண்மையை நாம் மறுத்துரைக்க முடியாது. அவ்வாறு அவர் தன்னோடு பேச விரும்புகிற விசுவாசி உண்மையான வாஞ்சையுடன் இருக்க வேண்டும். அவனுடைய தேவையும் உண்மையானதாய் இருக்க வேண்டும். அதோடுகூட தேவனிடமிருந்து வழிநடத்துதலைப் பெற விரும்புகிறவன் உண்மையுள்ள மனதோடு வேதத்தை வாசித்து, ஜெபத்தில் நேரத்தைச் செலவிடவும் வேண்டும். இந்த நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்போது, ஏற்ற நேரத்தில் ஏற்ற வசனத்தைக் கொண்டு, கர்த்தர் நம்மை நடத்து வதை மீண்டும் மீண்டும் நம்மால் காணமுடியும். இத்தகைய அனுபவம் மிகவும் இனிமையான ஓர் அனுபவமாக அமையும். MM

# 2

# சாட்சி சொல்ல கிடைத்த இரண்டாம் வாய்ப்பு

நமது கதைநாயகன் மாற்கு ஒரு கிறித்தவ விசுவாசி. அவன் சுவிட்சர்லாந்து நாட்டில் பிறந்தவன். சூரிக் (zurich) பகுதியில் இருந்த அமெரிக்க விமான நிறுவனத்தில் அவன் பணியாற்றிக் கொண்டிருந்தான். அந்த நிறுவனம் நியூயார்க் நகரில் தினசரி பயணிகள் விமானசேவையை நிறுத்தும் வரை அவன் அந்த அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தான். அந்த விமானசேவை நிறுத்தப்பட்ட காரணத்தால் மாற்கு உட்பட முப்பது பணியாளர்களை அந்நிறுவனம் பணிநீக்கம் செய்ய வேண்டிய சூழல் உருவாயிற்று.

பின்னர், சுவிஸ் விமானத்துறையுடன் இணைந்து செயலாற்றும் மற்றொரு விமான நிலையத்தில் மாற்குவிற்கு வேலை கிடைத்தது. ஆயினும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலைபார்க்க வேண்டும் என்று அந்நிறுவனத்தார் கூறியது அவனுக்கு வருத்தம் அளித்தது. ஏனெனில், அவன் இரட்சிக்கப்பட்ட நாள் முதற்கொண்டு கர்த்தருடைய நாளாகிய ஞாயிற்றுக் கிழமைகளில் மற்ற வேலைகளில் ஈடுபடுவதைவிட சபைக்கூட்டத்தில் பங்குகொள்வதற்கே அதிக முக்கியத்துவம் அளித்து வந்தான். அப்பம் பிட்டு கர்த்தரை ஆராதிப்பது, வேதபாட வகுப்பில் கலந்துகொள்வது, விசுவாச சகோதர சகோதரிகளின் ஐக்கியம் ஆகிய இவற்றையே அவன் பெரிதும் நாடினான். கர்த்தருடைய நாள் என்பது மாற்குவை

பொருத்தவரை மிகச் சிறப்பான ஒரு நாளாகும். ஆயினும், இப்பொழுது அந்த நாளை தனது நேச இரட்சகருக்காய்ப் பிரித்து வைத்து, ஆசரிக்கவும் சேவிக்கவும்கூடிய சிறப்புரிமையை அவனுடைய அலுவல் அவனிடமிருந்து பறித்துக்கொண்டது! ஞாயிற்றுக் கிழமையிலும் வேலை பார்ப்பது தனது கிறிஸ்தவ விசுவாச வாழ்விற்கும் நடத்தைக்கும் ஊறு விளைவிக்கும் என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

இச்சூழலில் அவன் செய்தித்தாள் ஒன்றை வாசித்துக் கொண்டிருக்கையில், "ஆட்கள் தேவை" என்னும் பகுதியில் சுவிஸ் விமானத்துறை விளம்பரம் ஒன்றைக் கண்டான். திங்கள் கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை வேலைநாட்கள் என்ற குறிப்புடன் அந்த விமானத் துறை நிறுவனம் விளம்பரம் கொடுத்திருந்தது. இவ்வகையான வேலை ஒன்றே தனக்குக் கிடைக்க வேண்டும் என்றுதான் அவன் ஜெபித்து வந்தான். சற்றும் தாமதம் பண்ணாமல், உடனடியாக அந்த வேலைக்காக விண்ணப்பித்தான். அவனுடைய விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட அந்த நிறுவனம், நேர்முகத் தேர்வுக்கு வரும்படி அவனுக்குப் பதில் கடிதம் அனுப்பியது. நேர்முகத் தேர்விற்குச் சென்று கலந்துகொண்ட மாற்கு, அந்த நிறுவன அதிகாரிகள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தான். அவன் அளித்த பதில்கள் அவர்களுக்குத் திருப்தியாய் காணப்பட்டன. ஆயினும், அவர்களது மேம்போக்கான மனோபாவத்தைக் கண்ட மாற்குவின் உள்ளத்தில் வேலை கிடைக்குமா என்ற சந்தேகமே எழுந்தது. ஏனெனில் அவர்களைப் பொருத்தவரை அக்கறையற்றுப் பதிலளிப்பது அவர்களுடைய தொழிலில் வழக்கமான ஒன்றாக இருக்கக் கூடும்.

அவ்வாறு அவர்கள் கேள்வி கேட்டுக்கொண்டிருந்த வேளையில், அந்த அதிகாரிகளில் ஒருவர் கிறிஸ்தவ விசுவாசியான அவனைப் பார்த்து, "மாற்கு, உங்கள் ஓய்வு நேரங்களை எவ்விதம் செலவிடுவீர்கள்?" என்ற கேள்வியைக் கேட்டார். விசுவாசியான தன் சாட்சியை முழுமுனைப்புடன் பகிர்ந்துகொள்வதற்கு ஏற்றதொரு பொன்னான வாய்ப்பாய் இஃது அமைந்திருந்தது. கிறிஸ்துவே தன் வாழ்வில் முதலிடம் வகிப்பவர் என்றும், வேதாகமத்தை வாசிப்பதும், தன் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்காய் சாட்சி பகர்வதுமே தனக்கு மகிழ்வளிக்கும் என்றும் அவன் அவர்களிடம் சொல்லியிருக்க வேண்டும். ஆயினும் அவ்விதம்

சொன்னால் வேலை கிடைக்காமல் போகுமோ என்று எண்ணி அவன் தயங்கினான். ஆதலால், விளையாட்டில் காலம் கழிப்பதே தனக்குப் பிடித்தமானது என்ற நொண்டித்தனமான ஒரு பதிலைச் சொல்லிவைத்தான்.

நேர்முகத்தேர்வை முடித்து, அந்த அலுவலகத்தை விட்டு வெளியே வந்தவுடன், அவனது மனசாட்சி அவனை உறுத்தியது. பேதுருவைப் போன்றே தானும் ஆண்டவரை மறுதலித்துவிட்ட தாக அவன் உணர்ந்தான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிட மிருந்து பெறக்கூடிய பாராட்டைவிட, அந்த வேலையை அவன் பெரிதாக எண்ணிவிட்டான். எவ்வகைக் கிறிஸ்தவன் இவன்?!

இந்நிலையில், தனது சபை ஐக்கியத்திலிருந்த ஒரு மூத்த சகோதரி ஒருவரைச் சந்தித்தபோது, சாட்சிபகராமல் அவன் அடைந்த இந்தத் தோல்வியைக்குறித்து பகிர்ந்துகொண்டான். அதைக் கேட்ட அந்த சகோதரி, “எவருக்கும் இந்நிலை வரக்கூடி யது இயற்கையே” என்று நம்பிக்கை தரும் வார்த்தைகளைக் கூறி னார்கள். “சாட்சி பகரக்கூடிய மற்றொரு வாய்ப்பை அருளும்படி நீ ஏன் ஆண்டவரிடம் கேட்கக்கூடாது?” என்று ஒரு ஞானமான ஆலோசனையையும் அந்தச் சகோதரி கூறினார்.

அந்நேரத்தில் அவர்கள் சொன்ன அத்தகைய ஆலோசனை அவனுக்கு மிகவும் அவசியமாயிருந்தது. வீட்டிற்குச் சென்ற அவன், வேதாகமத்தை வாசிப்பதில் சிறிது நேரத்தைச் செலவிட் டான். அப்பொழுது எரேமியா 32:27 -ஆம் வசனத்தை அவன் வாசிக்க நேர்ந்தது. **“இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?”** என எழுதப்பட்டிருந்தது. அவ்வேளை யில் பழைய நினைவு அவன் மனதில் ஓடியது. அந்த நேர்முகத் தேர்வை நடத்தியவர்கள் தனக்குச் சாதகமாய் எந்த பதிலையும் சொல்லாவிடினும் வேலை கிடைத்திட கர்த்தரையே நம்பியிருக்க வேண்டும் என்பதை அப்பொழுது அவன் உணர்ந்தான். கர்த்த ருக்காகச் சாட்சிபகர அவரே மற்றொரு வாய்ப்பைத் தந்து, புதிய தொரு வாசலைத் திறந்தளிப்பார் என அவன் உறுதியுடன் நம்பினான்.

இத்தருணத்தில் அவன் தற்பொழுது பணிபுரிந்துகொண்டிருந்த நிறுவனத்திலேயே கர்த்தருக்குச் சாட்சிபகரக்கூடிய ஒரு வாய்ப்புக்

கிடைத்தது. அவனுடன் பணிபுரிந்து கொண்டிருந்த மூன்று பேருடன் சேர்ந்து மதிய உணவு உட்கொள்ளச் சென்றான். உணவருந்தி முடித்தவுடன் அம்மூவரும் சிகரெட்டுகளைப் பற்ற வைத்தனர். அம்மூவரில் ஒரு பெண்ணும் இருந்தாள். அவள் அவனிடம், "மாற்கு, நீங்கள் சிகரெட் (புகை) பிடிக்க மாட்டீர்களா?" எனக் கேட்டாள்.

அவன் "இப்பொழுது நான் புகை பிடிப்பது இல்லை. சுமார் ஒன்பது பத்து ஆண்டுகளாக நான் சிகரெட் பிடித்துக்கொண்டு தான் இருந்தேன். ஆனால் என் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. அதிலிருந்து அந்தப் பழக்கத்தை விட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்துவிட்டேன்" எனக் கூறினான்.

"என்ன அது?" என வியப்புடன் கேட்டாள் அப்பெண்.

"ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நான் விசுவாசித்து ஏற்றுக்கொண்டேன். ஆதலால் எனது உடலும் உள்ளமும் அவருக்கே சொந்தமானது. புற்றுநோய் உண்டாக்கும் பொருளைக் கொண்டு என் சரீரத்தைக் கெடுக்கக் கூடாது என்று உணர்ந்தேன்" என சாந்தமாய்ப் பதிலளித்தான் மாற்கு.

ஆச்சரியம் மேலோங்க, "இப்பொழுது நீங்கள் சொன்னதையே அப்படியே இன்னொருவரும் சிறிது நாட்களுக்கு முன் என்னிடம் சொன்னார். நீங்கள் இரண்டாவது நபர்" எனக் கூறி முடித்தாள் அப்பெண். அவளுடைய தோழியும் கிறிஸ்தவ விசுவாசியானபோது சிகரெட் பிடிப்பதையே விட்டுவிட்டாள்.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றவர்கள் மாற்குவை கேலிசெய்தவற்குப் பதிலாக அவன் சொன்னதைக் கருத்துடன் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அன்று மதியமே, நேர்முகத்தேர்வில் கலந்துகொண்ட சுவிஸ் விமானத்துறை அலுவலகத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. வேலைக்கு சேர்ந்திட விருப்பம் இருக்குமானால் உடனடியாக சேர்ந்துகொள்ளலாம் எனத் தொலைபேசியில் பேசியவர் கூறினார். அவன் மகிழ்வுடன் அதனை ஏற்றுக்கொண்டான். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை; அவரைக் கனம் பண்ணுகிறவர்களை அவர் கனம்பண்ணுவார் (1 சாமு. 2:30).

ஆம்! தேவன் உண்மையுள்ளவர். இவை அனைத்திற்கும் மாற்கு இப்பொழுது உயிருள்ள சாட்சியாக இருக்கிறான். சுவிஸ் விமானத் துறை அலுவலகத்தில் அவனை நேர்முகத் தேர்வு செய்தவர், கர்த்தரை அறியாதவர். அவ்விதமான மனிதர்களையும் ஆளுகை செய்து கட்டுப்படுத்த கர்த்தரால் முடியும் என்பதை மாற்கு இப்பொழுது அறிந்துகொண்டான். தேவன் தம்மைக் குறித்து சாட்சிசொல்ல அவனுக்கு இரண்டாம் வாய்ப்பை அளித்தார். வாய்ப்பு கிடைக்கும்போது கர்த்தருக்காக சாட்சி பகரும் பழக்கத்தை தன் வாழ்க்கை முறையாக மாற்றிக்கொள்ள வேண்டும் என இந்த அனுபவம் மாற்குவை உற்சாகப்படுத்தியது. வாழ்வின் எச்சூழலிலும் தேவனையே நோக்கிப்பார்க்கவும், அவரையே நம்பியிருக்கவும் இப்பொழுது அவன் உள்ளம் உறுதிகொண்டது. இவ்வாறு விசுவாசத்தில் உறுதிப்பட்ட மாற்கு கர்த்தரில் வளரலானான்.

MM

# 3

# நாஷ்வில்லியில் உருவான திருச்சபை

திருவாளர் ஜானி அவர்களும், அவரது மனைவி மேரி லூஃபேலனும் (*Mr. Johny & Mrs. Mary Lou Phelon*) எம்மாவு வேதாகமக் கல்லூரியில் தங்களுடைய படிப்பை நிறைவு செய்தனர். அதன் பின்னர், அவர்கள் ‘டென்னிசி’ என்ற மாகாணத்தின் நாஷ்வில்லி எனும் பகுதியில் உள்ள தங்களது இல்லத்திற்குத் திரும்பினர். அந்த ஊரில் செயல்பட்டுவந்த மெத்தடிஸ்ட் திருச்சபையைச் சார்ந்தோர் ஜானிக்கு துணை ஆயர் பதவியை வழங்குவதாக வாக்களித்தனர். ஆயினும், இவர்கள் இருவரும் புதிய ஏற்பாட்டு ஒழுங்குமுறையின்படியான சபையே ஏற்புடையது எனும் கருத்தில் உறுதியாய் இருந்தனர். புதிய ஏற்பாட்டு ஒழுங்குமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்ற நோக்கில் அப்பதவியை மறுத்துத் தள்ளிவிட்டு, ஏறத்தாழ ஓராண்டு காலமாக அவர்கள் இருவர் மட்டும், ஒவ்வொரு ஞாயிறன்றும் அவர்களது வீட்டின் முன்னறையில் அப்பம் பிட்டு கர்த்தரை நினைவுகூரும்படி கூடிவந்தனர். இச்செயலைக் கண்ட உறவினர்களும் நண்பர்களும் அவர்கள் செய்வது விசித்திரமானது என்று எண்ணி நகைத்தனர். ஆயினும் இவர்கள் இருவரும், நாஷ்வில்லியில் புதிய ஏற்பாட்டு வேத வசன உபதேசத்தின்படி ஒரு உள்ளூர் சபையை நிறுவ வேண்டும் என்னும் வாஞ்சையில் தொடர்ச்சியாக ஜெபித்தும் உழைத்தும் வந்தனர்.

திரு. ஹெரால்டு கிரீனே (Harold Grene) என்பாரும் ஜானி பயின்ற அதே வகுப்பில் ஒன்றாக படித்தவர். இந்த விவரங்களைக் குறித்துக் கேள்விப்பட்ட ஹெரால்டும், நானும் (நூலாசிரியர்) ஜானியிடம் தொடர்பு கொண்டு பேசி, அதற்காக ஜெபித்து வந்தோம்.

ஜானி மற்றும் அவரது மனைவி மேரி ஆகியோருடன் இணைந்து அந்த இடத்தில் சுவிசேஷக் கூட்டங்களை நடத்த வேண்டுமென்று ஆலோசித்தோம். இதற்கு வசதியாக இருக்கும்படி ஒரு கூடாரத்தை விலைக்கு வாங்கவேண்டுமென்றும் நாங்கள் தீர்மானித்தோம். எங்களது திட்டம் எல்லா வகையிலும் தோல்வியுறுவது போன்றே இருந்தது. ஆயினும் நமது ஆண்டவர் வேறொரு நல்ல திட்டம் வைத்திருந்தார். இதினிமித்தமே எங்களது முயற்சிகள் நிறைவேறவில்லை. கென்சாஸ் பட்டணத்தில் திரு. ஹாரி சோமர்வில்லி என்னும் நண்பர் இருந்தார். கூட்டம் நடத்துவதற்கு ஏற்ற ஒரு கூடாரமும், தற்காலிக உறைவிடம் அமைப்பதற்கு வேண்டிய பொருட்களும் அவரிடம் இருந்தன. எங்களது இக்கட்டான நிலையைக் கேள்விப்பட்ட அவர் ஒரு புதிய கூடாரத்தையே எங்களுக்காக வாங்கிக் கொடுத்து உதவினார்.

அது 1951 -ஆம் ஆண்டின் வசந்த காலம். இம்முயற்சிக்காக ஓராண்டுக்கு மேலாக ஜெபித்துவந்த நாங்கள் நாஷ்வில்லி பகுதியில் உள்ள இடாஹோ என்ற 46 -ஆம் தெருவில் மிக ஆர்வமுடன் கூடாரத்தை எழுப்பி, அங்கு நற்செய்திக் கூட்டங்களை நடத்த ஆரம்பித்தோம். ஆயினும் மூன்று வாரங்களாகத் தொடர்ந்து நடத்தப்பட்ட கூட்டங்களில் நாங்கள் எந்த ஆசீர்வாதத்தையும் காணவில்லை. இதனிமித்தம் ஒரு முழு இரவும் நாங்கள்கூடி ஜெபித்தோம். அதன் பின்னர், லூசியானா 55 -ஆம் தெருவிற்கு இடம்பெயரும்படி எங்கள் அனைவருக்கும் ஒருமித்த ஏவுதல் எழுந்தது. அது உண்மையிலேயே இறைவனிடமிருந்து வந்த நடத்துதல் ஆகும். திரு. ஹெரால்டும் ஜானியும் அவ்விடத்தில் சுவிசேஷ செய்தியைப் பிரசங்கித்தனர். தூய ஆவியானவர் கிரியை செய்ய ஆரம்பித்தார். தொடர்ந்து ஒருவர் பின் ஒருவராக மக்கள் மனமாற்றம் அடைந்து இரட்சிக்கப்பட்டனர். விடுமுறை நாட்கள் முடிந்து மீண்டும் வகுப்புகளை தொடங்க வேண்டும் என்ற காரணத்தினால், தொழிலாளர் தினத்தன்று நான் எம்மாவு வேதாகமக் கல்லூரிக்கு திரும்ப வேண்டிய சூழல் உண்டாயிற்று.

*குளிர்காலம் முழுவதும் இடாஹோ என்ற இடத்தில் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. கூட்டத்திற்கு வருவோரை குளிர் பாதிக்காமல் இருப்பதற்காகச் சூடுண்டாக்கும் இயந்திரங்களோடு இணைக்கப்பட்டிருந்த குழாய்கள், கூடாரத்தின் ஓரங்கள் சுற்றிலும் பொருத்தப்பட்டிருந்தன. இது அரசின் சட்டத்திற்கு உட்பட்டதன்று. இத்தகைய அமைப்பைக் கண்ட தீயணைப்புத்துறை அதிகாரி ஒருவர் அதனைச் சட்டவிரோதமான குற்றமாகக் கண்டார். அவ்வேளையில் பிரசங்கம் செய்து கொண்டிருந்த ஹெரால்டு அவர்களின் பிரசங்கக் தலைப்பு "குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டவர்களா அல்லது நீதிமானாகத் தீர்க்கப்பட்டவர்களா?" என்பதாகும். இச்செய்தி அவ்வதிகாரியை அதிகமாகத் தொட்டதினால் அவர் அதற்கு மேலாக ஏதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.*

*இந்நிலையில் ஜானியின் மனதில் பல கேள்விகள் எழலாயின. "சபையாகக் கூடி ஆராதனை செய்வதற்கு ஆராதனைக் கூடம் கட்டவேண்டுமல்லவா? நிலம் வாங்கத் தேவையான பணத்திற்கு என்ன செய்வது? கட்டுமானப் பணியில் தேறிய பணியாளர்களை எங்கே தேடுவது?" ஆயினும் இத்தகைய கேள்விகளுக்குக் கர்த்தர் அளித்த பதில்கள் அவர்களுக்கு மிகத் தெளிவாகவே இருந்தன. பின்வரும்வசனங்களைக்கொண்டு கர்த்தர் அவர்களுடன் பேசினார்.*

ஆனதோத்திலிருக்கிற என் நிலத்தை நீ வாங்கிக்கொள்; அதைக் கொள்ளுகிறதற்கு உனக்கே மீட்கும் அதிகாரம் அடுத்தது... அது கர்த்தருடைய வார்த்தை என்று அறிந்துகொண்டேன் (எரே. 32:7–8).

வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். முந்தின ஆலயத்தின் (கூடாரத்தின்) மகிமையைப் பார்க்கிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் (ஆராதனைக் கூடத்தின்) மகிமை பெரியதாயிருக்கும் (ஆகாய் 2:8–9).

வேலை செய்யத்தக்க திரளான சிற்பாசாரிகளும், தச்சரும், கல்தச்சரும், எந்த வேலையிலும் நிபுணரானவர்களும் உன்னோடிருக்கிறார்கள்... நீ எழும்பிக் காரியத்தை நடப்பி; கர்த்தர் உன்னோடே இருப்பாராக (1 நாளா. 22:15–16).

*கர்த்தர் கிருபையாகக் காரியங்களைக் கைகூடிவரச் செய்தார். 1952-ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் ஆராதனைக் கூடத்தின் கட்டுமானப் பணி தொடங்கியது. அவ்வமையம் கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்படி தனது முழு நேரத்தையும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஹெரால்டு கிரீனே*

தான் பணியாற்றிவந்த காப்பீட்டு நிறுவனத்தின் வேலையைத் துறந்துவிட்டார்.

'கேப் கிரார்டியூ' என்னும் இடத்திலுள்ள 'மிசோரி' எனும் பகுதியில் புதிதாய்த் தொடங்கிய கர்த்தருடைய ஊழியத்தில் உதவ வேண்டும் என்ற நோக்கில் 1964 -ஆம் ஆண்டு, அவர் இடம் பெயர்ந்து சென்றார். இந்நிலையில் புதிதாய்க் கட்டப்பட்ட ஆராதனைக் கூடத்தில் நடைபெற்ற ஊழியத்திற்காகத் தனது முழு நேரத்தையும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஜானியும் தனது உலக வேலையைத் துறந்து 1965 -ஆம் ஆண்டு முதல் கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபட்டார். இவ்வாறு நாஷ்வில்லி ஊழியம் வளர்ந்தது.

அதன் பின்னர் வேறு சில சகோதரர்களும் இவ்வூழியத்தின் பணிகளை எங்களுடன் பகிர்ந்துகொண்டனர். அதன் விளைவாக 'கிறிஸ்தவ விசுவாசிகளின் ஐக்கியம்' (Christian Believers Fellowship) எனும் பெயருடன் வேறொரு இடத்திலும் சபை தொடங்கப்பட்டது. இவ்விரு சபையாரும் நெருங்கிய ஐக்கியத்துடன் கர்த்தருடைய ஊழியத்தில் முனைந்து செயல்படத் தொடங்கினர்.

அவ்வமையம் லூசியானா 55 -வது தெருவில் இருந்த ஓர் ஆலயக் கூடம் விற்பனைக்கு வந்தது. இவ்வாறு பல மாற்றங்களைக் கடந்து 'சோன்யா டிரைவ்' எனும் இடத்தில் இப்பொழுது சபை இயங்கிவருகிறது.

சபை வளர்ச்சியடைந்து ஊழியங்கள் பெருகின. இறுதியாக கர்த்தர் அவர்களுக்குத் துணைநிற்க டென்னிசி - சேப்பல் ஹில் "ஹார்டன் ஹேவன் கேம்ப்" மற்றும் "கான்பெரன்ஸ் கிரவுண்ட்ஸ்" ஆகிய இடங்களிலும் சபை உருவாவதற்கு ஜானியும் மற்ற பல சகோதரர்களும் காரணமாயிருந்தனர்.

டென்னிசி மாகாணத்தில் குறிப்பிடத்தக்க அளவில் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாயிற்று. தேவனிடமிருந்து தெளிவான உணர்த்தப்படுதலைப் பெற்றவர்களையும், அத்தகைய உணர்த்துதலில் உறுதியுடன் இருந்து விசுவாசத்துடன் செயலாற்றுகிறவர்களையும் தேவன் கனம்பண்ணுகிறார் என்பது உண்மையே.

நம் தேவன் உண்மையுள்ளவர். அவர் வாக்குமாறாதவர். அவர் இன்றும் தம்முடைய மக்களுடன் உறவாடி உற்சாகமூட்டி வருகிறார். MM

# 4

# அந்நிய நுகம்

கிளவுடியா எனும் பெண்ணை முதலாவதாகச் சந்தித்துப் பழகியபோது பர்ட்டு என்பவர் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர் அல்ல. அந்நாட்களில் ஆண்டவர் அவருடைய இருதயத்திலும், உள்மனசாட்சியிலும் கிரியை செய்துகொண்டிருந்தார். படிப்படியாக அவர் இறையரசை நெருங்கி வந்துகொண்டிருந்தார். ஆயினும், அவருடைய சிநேகிதியாகிய கிளவுடியாளிடம் விசுவாசத்திற்குரிய எவ்வித அறிகுறியும் காணவில்லை.

முதல்முறையாக பர்ட்டைச் சந்தித்த வேளையிலேயே காதல் கொண்ட கிளவுடியா அவரையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினாள். அதே காதல் நோய் பர்ட்டையும் தொற்றிக்கொண்டது. அவளைத் தன் வாழ்க்கைத் துணையாக அடைந்தால், வாழ்க்கை மிக இன்பமாக இருக்கும் என்று அவரும் நம்பலானார். இருவரும் எப்பொழுது இரட்சிக்கப்படுவோமோ அப்பொழுது திருமணம் செய்துகொண்டு, இணைந்து கர்த்தரைச் சேவிக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் பர்ட் காணப்பட்டார்.

இதை அறிந்துகொண்ட கிளவுடியாவும் அவ்வூரில் இருந்த கிறிஸ்தவ சபை ஐக்கியத்திற்கு அவருடன் சேர்ந்து வருவதற்கு உடனடியாக ஒப்புக்கொண்டாள். வெகு விரைவிலேயே கிறிஸ்தவ விசுவாசிகள் பேசும் வார்த்தை முறைகளை அவளும் கற்றுக்கொண்டு, அவற்றை லாவகமாகப் பயன்படுத்தி பேசுவதில் நன்றாகத் தேர்ச்சியும் பெற்றுக்கொண்டாள். தங்கள் இருவரி

டமும் காணப்பட்ட இந்த உறவு மிக இனிதாகச் செல்வதாக கிளவுடியா எண்ணி பூரித்துப்போனாள். அனைத்தும் சரியான பாதையில் செல்வதாகவே பர்ட்டுக்கும் காணப்பட்டது.

இவ்வாறு சில நாட்கள் கடந்து சென்றன. நாட்கள் செல்லச் செல்ல, பர்ட்டின் உள்ளத்தில் பாவ உணர்வு அதிகரித்தது. தான் இருக்கின்ற பாவ நிலையிலேயே தொடர்ந்து இருக்கக்கூடாது என்பதைப் பர்ட்டு உணர்ந்தார்.

இந்நிலையில் ஒரு ஞாயிற்றுக்கிழமை, எப்பொழுதும் வருகின்ற பிரசங்கியார் கூட்டத்திற்கு வர இயலாமல் போயிற்று. இதனிமித்தம் கார் வண்டிகளைப் பழுதுபார்க்கும் ஒரு சகோதரர் குறுகிய அவகாசத்தில் சுவிசேஷச் செய்தியை அன்று பிரசங்கித்தார். அச்செய்தியைக் கேட்ட பர்ட்டு தூய ஆவியானவரால் உணர்த்தப்பட்டார். அவர் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. பிரசங்கித்த அந்த சகோதரரைச் சந்தித்து அவருடன் பேசவேண்டும் என்று கருதி, கூட்டம் முடிந்த உடனே அவரை நோக்கி பர்ட்டு விரைந்தார். தான் கிறிஸ்துவை விசுவாசிப்பதாக பர்ட்டு பிரசங்கம் செய்த சகோதரரிடம் தனது தீர்மானத்தைக் கூறினார். இதைக் கண்ட கிளவுடியா, தானும் இரட்சிக்கப்பட விரும்புவதாகக் கூறினாள். இதனை அறிந்த சபையில் இருந்த பெண்கள் கிளவுடியாவை சூழ்ந்து கொண்டு, அவ்விருவருடைய அறிக்கையையும் கேட்டு மகிழ்ச்சியுற்றனர். இப்பொழுது இவ்விரு வாலிப உள்ளங்களும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுவிட்டதாகவும், இருவரும் இப்பொழுது ஒன்றாக இணைந்து கர்த்தரைச் சேவிக்க முடியும் என்றுமெண்ணி அச் சகோதரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மெய்யாக மனந்திரும்பி இரட்சிப்புக்குள் வந்த பர்ட்டு, தன் ஆவிக்குரிய வளர்ச்சியில் தீவிரம் காண்பிக்க ஆரம்பித்தார். மிகுந்த வாஞ்சையுடன் வேத வசனங்களை வாசிக்கலானார். தொடர்ந்து வைராக்கிய வாஞ்சையுடன் கர்த்தருக்கென்று சாட்சி பகரவும் தொடங்கினார்.

சில காலம் கிளவுடியாவும் சபைக் கூட்டங்களுக்கு ஒழுங்காக வந்து கொண்டிருந்தாள். ஆயினும் நாட்கள் செல்லச் செல்ல அவள் விட்டு விட்டு வர ஆரம்பித்தாள். வேதம் வாசிப்பதிலும் அவள் வாஞ்சையின்றி இருப்பதைக் கண்ட பர்ட்டு வேதனை அடைந்தார். ஆயினும் இந்நிலை சிறிது காலத்திற்கு மட்டுமே

நீடித்து, பின்னர் எல்லாம் சரியாகிவிடும் என்று நம்பி, தான் ஞானஸ்நானத்தில் சாட்சிகொடுக்க விரும்புவதாக பர்ட், சபை மூப்பர்களிடம் கூறினார். அதைக் கண்ட கிளவுடியா அதே சமயத்தில் தானும் ஞானஸ்நானம் பெற விரும்புவதாகக் கூறினாள். தாங்கள் அவளிடம் தனியாகப் பேசவேண்டும் என்று சபையின் மூப்பர்கள் பலமுறை ஒழுங்கு செய்தனர். ஆயினும் அவர்கள் குறிப்பிட்டிருந்த நேரங்களில் அவள் அவர்களை வந்து சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆயினும் சபையார் அவளுக்கு விதி விலக்களிக்களித்து பர்ட்டு ஞானஸ்நாம் பெறும் அதே நாளில் அவளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கத் தீர்மானித்தனர். ஞானஸ்நானம் பெறுவதற்குமுன் கிளவுடியா தன் சாட்சியைக் கூறினாள். ஆயினும் அது நிறைவானதாக இல்லை என்பதை பர்ட்டு உணர்ந்து கொண்டார். தான் ஒரு பாவி என்றும், தனது மனந்திரும்புதலைக் குறித்தும், கிறிஸ்துவே பரலோகம் செல்வதற்கான ஒரே நம்பிக்கையாக இருக்கிறார் என்பதைக் குறித்தும் அவள் எதையும் குறிப்பிடவில்லை. அவள் தன்னைப் பற்றியே மிகுதியாகச் பேசிக் கொண்டிருந்தாள். கர்த்தராகிய இயேசுவைக் குறித்து அவள் அதிகமாக எதுவும் கூறவில்லை.

அவளைக் குறித்து தன் மனதில் இருந்த சந்தேகங்கள் யாவற்றையும் பர்ட்டு யாரிடமும் கூறவில்லை. தனது நிச்சயதார்த்தம், திருமணம் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்ய தீவிரமானார். “காதல் கதவு வழியாக நுழைந்தால், விவேகம் ஜன்னல் வழியாய் வெளியேறிவிடும்” என்ற முதுமொழிக்கிணங்க பர்ட்டு செயல்படத் தொடங்கினார். இறைச் சித்தப்படியே தான் செயல்படுகிறேனா என்ற உறுதி அவருக்கு இல்லாதிருந்தது. கிளவுடியா ஓர் உண்மையான விசுவாசியாகக் காணப்படாவிடினும், சிறிது சிறிதாக கர்த்தர் அவளை இரட்சிப்புக்குள் வழிநடத்துவார் என்ற மேம்போக்கான நம்பிக்கையுடன் பர்ட்டு இருந்தார்.

இத்தகைய சூழலில் ஒருநாள் பர்ட்டு காலை தியானத்திற்காக வேதாகமத்தைப் படித்துக்கொண்டிருந்தார். அன்று அவர் வாசித்த வசனம் ஏசாயா 30:1,2 ஆகும். “பாவத்தோடே பாவத்தைக் கூட்டும்படி, என்னை அல்லாமல் ஆலோசனை பண்ணி, என் ஆவியை அல்லாமல் தங்களை மூடிக்கொள்ளப் பார்க்கிற முரட்டாட்டமுள்ள புத்திரருக்கு ஐயோ” என்பதே அவர் படித்த பகுதி. கர்த்தர் தன்னிடம் நேரடியாகப் பேசுவதை அவர் உணர்ந்

தார். தாம் கர்த்தருடைய ஆலோசனையைக் கேளாமல் சொந்த மாகத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கும் நிலையில் இருப்பதாக உணர்ந்தார். அவிசுவாசியான ஒரு பெண்ணைத் திருமணம் செய்வது தேவனுக்குச் சித்தமானதன்று என்பதை பார்ட்டு நன்றாக அறிவார். இருப்பினும், இஃது ஆண்டவருக்குச் சித்தமில்லாமல் இருக்குமானால், அவரே இதனைத் தடுத்துவிடட்டும் என்ற எண்ணத்துடன் அவரையே பார்ட்டு சார்ந்திருந்தார். தனக்கு ஒரு மனைவி துணையாக வேண்டும் என்ற தணியாத வாஞ்சை அவர் மனதில் ஆழமாகப் படர்ந்திருந்தது. தனிமையில் தன் வாழ்வை கழிப்பதே அவருக்கு அச்சமாக இருந்தது.

மூன்று மாதங்கள் கடந்தன. ஒருநாள் கிறிஸ்துவுக்குள்ளான ஒரு சகோதரன் பார்ட்டை சந்தித்தார். பார்ட்டின் மீது மிகுந்த கரிசனை கொண்டவராய் அவருடன் பேசி, 2 கொரிந்தியர் 6:14 - ஆம் வசனத்தைச் சுட்டிக் காட்டினார். “அந்நிய நுகத்திலே, அவிசு வாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக” என்று அவர் சொல்வதைக் கேட்ட பார்ட்டு ஒரு புழுவைப்போல நெளியத் தொடங்கினார். விடாப்பிடியான எண்ணத்துடன் செய்ய முற்பட் டுக்கொண்டு இருந்த அச்செயலை இதற்குமேல் தொடர்ந்து செய் யாத வண்ணம் அவர் கேட்ட அவ்வேத வசனம் அவரைத் தடுத்து நிறுத்தியது.சிவப்பு நிற அபாய விளக்கு அவருக்கு முன் பளிச்சிட்டது.

அன்று பார்ட்டின் பிறந்தநாள். அவருக்காகவே ஒரு விருந்தை ஏற்பாடு செய்திருந்தாள் கிளவுடியா. அவளுடைய நண்பர்களில் சிலரும், சபையில் இருந்து சிலரும் அவ்விருந்திற்கு வந்திருந்தனர். மது அருந்துவோருக்கென்றும் அவ்விருந்தில் மதுவகைகள் வைக்கப்பட்டிருந்தன. மிக வெட்கத்துக்குரியதாய் அது காணப்பட்டது. வந்தவர்கள் கேவலமாய்க் கருதக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

விருந்து முடிந்து சிறிது நேரம் கடந்தவுடன் கையில் காப்பிக் கோப்பையை வைத்துக்கொண்டே பார்ட்டிடம் உரையாட ஒரு சகோதரர் வந்தார். கிறிஸ்துவுக்குள்ளான அச்சகோதரர் 2 கொரிந் தியர் 6:14–18 ஆகிய வசனங்களைப் பார்ட்டிற்கு நினைவுபடுத்தி அதனை விளக்கினார்.

தன்னுடைய செயலுக்குக் கர்த்தர் எதிர்ப்பு தெரிவிக்கிறார் என்பதையும், அவர் கூறுவதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்பதையும் அப்பொழுது பார்ட்டு நன்றாக உணர்ந்து கொண்டார்.

தான் விடாப்பிடியாகத் தொடர்ந்து இதேபோன்று சென்று கொண்டிருக்க முடியாது என்று உணர்ந்த பர்ட்டு, இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தர். ஏனெனில், கிளவுடியாவின் வாழ்க்கைப் போக்கில், கிறித்தவ சாட்சிக்குரிய காரியங்கள் எதுவும் காணப்பட வில்லை. கிறிஸ்துவினால் மாற்றம் பெற்ற ஒருவனுடைய வாழ்க் கையில் காணவேண்டிய புதுமைகளுக்குரிய அத்தாட்சி அவளி டத்தில் காணவில்லை.

ஆதலால் பர்ட்டு தனது எண்ணத்தை ஒரு கடிதத்தின் மூலமாய் கிளவுடியாவுக்குத் தெரிவிக்கத் தீர்மானித்தார். இதற்காக ஒரு கடிதத்தை எழுதுவது என்பது அவருக்கு மிகக் கடினமாகவே இருந்தது. ஆயினும், இப்பொழுதுள்ள உறவை ஒரு முடிவிற்குக் கொண்டுவர வேண்டுமே. தன்னால் இயன்றமட்டும் தயவுடனும் பரிவுடனும் அக்கடிதத்தின் வார்த்தைகள் இருக்கவேண்டும் என்று அவர் கருதினார். தனது விசுவாசத்திற்கும், தான் திடமாக நம் பும் இறைச்சத்தியத்திற்கும் எதிராக இனியும் தன்னால் தொடர்ந்து செயல்பட இயலாது என்பதை அவர் அக்கடிதத்தில் தெளிவாக விளக்கி எழுதினார். தன்னால் அவளுடைய வாழ்வில் உண்டான மனவேதனைகள் அனைத்திற்கும் தான் மிகவும் வருந்துவதாகவும் குறிப்பிட்டார். இறுதியில் சுவிசேஷத்தின் சத்தியத்தை அவள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற செய்தியுடன் அக்கடிதத்தை முடித்தார்.

இவ்வாறு அக்கடிதத்தின் மூலம் அவர்கள் இருவருக்குமிடை யில் இருந்த உறவு துண்டிக்கப்பட்டது. ஆயினும் அது கிளவுடி யாவைச் சிறிதும் பாதித்ததாகத் தெரியவில்லை. வெகுவிரையில் அவள் மற்றொருவரைத் திருமணம் செய்து கொண்டாள் என்ற செய்தியைப் பர்ட்டு கேள்விப்பட்டார். அவளோ அவளது கணவனோ ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதற்கான எவ்வித அடையாளமும் வெளிப்படவில்லை.

தேவனுடைய தூய வேதத்தை நேசித்து, அதற்குக் கீழ்ப்படி கிறவர்களின் வாழ்வில் காணப்படும் மேலான ஆசீர்வாதத்தை பர்ட்டு இப்பொழுது தன் வாழ்வில் அனுபவித்தார். இதன் பின்னர் தனது விசுவாச வாழ்வில் அவர் துரிதமான முன்னேற்றம் பெற் றார். அவர் கடந்து வந்த இந்த உணர்ச்சி மிக்க போராட்டங்களின் வாயிலாகக் கர்த்தர் ஒருவருக்கே தன் வாழ்வில் முதலிடங்கொடுத்து, அவரில் மட்டுமே மனநிறைவு அடைய வேண்டும் என்னும் பாடத்தை பர்ட்டு மிகவும் தெளிவாகக் கற்றுக்கொண்டார். MM

# 5

# உறுதிப்படுத்திக் கொள்ளுதல்

உலகில் பெயர் அறியப்படாத எளிய கிறிஸ்தவ எழுத்தாளரும், பிரசங்கியுமான ஒருவர் இருந்தார். உலகின் பல பாகங்களுக்குப் பயணம் செய்து, ஒன்பது மாத கால அளவு இறை ஊழியம் செய்யும் படி அவருக்கு அழைப்பு வந்தது. அந்த ஊழியப் பயணத்தில் அவர் ஐரோப்பாவிலுள்ள பல நாடு களுக்குச் செல்ல வேண்டும். பின்னர், மத்திய கிழக்கு நாடுகளுக்கும், ஈரானுக்கும் (அந்நாட் களில் அந்நாடு அமெரிக்கர்களுக்கு வாசலைத் திறந்து கொடுத்திருந்தது) செல்ல வேண்டும். மேலும் நேபாளம், சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஹாங்காங், தைவான், கொரியா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் அப்பயணத்தின்போது அவர் செல்ல வேண்டியதாயிருந்தது.

இத்தகைய நீண்ட பயணத்திட்டம் அவரை அச்சுறுத்தக் கூடிய தாக இருந்தது. ஆயினும் எவ்வித இடையூறுமின்றி, இப்பயணத் திற்கான காலத்தை ஒதுக்கிக்கொள்ளும் ஏற்ற சூழல் அன்று அவருக்கு இருந்தது. கர்த்தர் நம்மை வழிநடத்துகிறார் என்னும் உள்ளுணர்வு அவருக்கு இருந்தது. ஆயினும் அவர் இதை உறுதி செய்துகொள்ள விரும்பினார். தான் மேற்கொள்ள வேண்டிய விமானப் பயணங்களைக் குறித்தும், பற்பல கூட்டங்களில்

*கொடுக்க வேண்டிய இறைச் செய்திகளுக்குத் தேவையான ஆவிக்குரிய ஆயத்தத்தைக் குறித்தும், பழக்கமற்ற உணவு வகைகளினால் ஏற்படக்கூடிய உடல் மற்றும் மனச்சோர்வுகளைக் குறித்தும் அவர் சிந்தித்துப்பார்க்கலாயினார். தான் மெய்யாகவே இறை சித்தத்திற்குள்தான் இருக்கிறேனா என்பதை உறுதிசெய்து கொள்ள அவர் விரும்பினார். பயணம் செய்யும் வழிகளிலெல்லாம் ஒவ்வொரு மைல் பயணத்திலும், கர்த்தர் தம்மோடு கூடவே இருப்பார் என்பதை உறுதி செய்யாமல் அப்பயணத்தைத் தொடங்க அவர் துணியவில்லை. இவை யாவற்றையும் மனதிற்கொண்டு, தனது விமானப் பயணச் சீட்டை முன்பதிவுசெய்யும் முன்னர், தனக்கு உறுதி செய்யும் இறைவாக்கை கர்த்தர் அருளும்படி அவர் ஜெபிக்கலானார்.*

*இதற்காக அவர் அதிக நாட்கள் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அன்று அவர் தன்னுடைய காலைத் தியானத்திற்காகத் திருவசனத்தைப் படித்துக்கொண்டிருந்த பொழுது, இரு வசனங்கள் அவருடைய கண்களின் முன்பாகப் பளிச்சிட்டுப் பிரகாசித்தன. அவை 139 -ஆம் சங்கீதத்திலுள்ள 9,10 வசனங்களாகும்.*

“விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.”

*சங்கீதக்காரனாகிய தாவீது எங்கும் வியாபித்து இருக்கும் கர்த்தருடைய தன்மையை தனது சிந்தையில் கொண்டு இவ்வசனங்களை எழுதியிருந்தார். அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். பூமியின் ஒரு எல்லை தொடங்கி மறு எல்லைவரை அவர் பரவி நிறைந்திருக்கிறார். விடியற்கால ஒளிக்கதிரே காலைப்பொழுதின் சிறகுகளாகும். பகல் ஒளி உலகெங்கும் பரவிவரும்வரை அது வானத்தின் ஒரு திசையிலிருந்து மறுதிசை வரைக்கும் பரவிப் படர்கிறது. கடல்களின் எல்லைக் கோடுகள் என்பது மெய்யாகவே இப்பூமியைக் குறிக்கிறது. இச்சங்கீதத்தை இயற்றியவர் எங்கெல்லாம் பயணப்பட்டுச் சென்றாரோ அங்கெல்லாம் கர்த்தர் இருந்தார். அவர் வழிகாட்டுகிறவராக உள்ளார் (உமது கை என்னை நடத்தும்). அவரே பெலனாகவும் இருந்தார் (உமது வலக்கரம் என்னைத் தாங்கிப்பிடிக்கும்) என உளமார நம்பினார்.*

இவ்விரு வசனங்களும் அந்தப் போதகரின் இருதயத்தில் எவ்வாறு பேசின என்பதைக் காண்போம். அந்த “விடியற் காலத்துச் செட்டைகள்” ஆகாயத்தில் வேகமாகப் பறக்கும் ஜெட் விமானத்திற்கு ஒப்பாக இருப்பதாக அவர் உணர்ந்தார். அவர் வாழ்ந்துகொண்டிருந்த சான்பிரான்சிஸ்கோவிலிருந்து கிழக்கு திசையிலுள்ள நாடுகளுக்கு (கிழக்கு நாடுகளுக்கு) அவ்விமானங்கள் எடுத்துச்சென்றாலும், பயண வழிகளில் எதிர்ப்படக்கூடிய எல்லா இடையூறுகளையும் எதிர்கொள்வதற்கான வழிநடத்துதலையும், தேவ இறைச்சக்தியையும் தான் பெற்றுக்கொள்வது உறுதி என்று அவர் நிச்சயித்துக்கொண்டார். “தேவனுடைய வலதுகரம்” என்ற சொற்றொடர் தேவனுடைய வல்லமை தனக்கு எங்கும் எப்பொழுதும் கிடைக்கும் என்னும் உறுதியை அப்போதகருக்குக் கொடுத்தது.

தாவீது அரசர் இந்த வசனங்களை எழுதிய வேளையில், பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் ஜெட் விமானத்தில் பறக்கவிருந்த ஒரு ஊழியனுக்கு எவ்வாறு மனஉறுதியையும் சமாதானத்தையும் வருவிக்கும் என்பதைச் சற்றேனும் கற்பனை செய்திருக்கமாட்டார். ஆயினும் தேவ வசனத்திற்குரிய மேன்மை இதுவே. எல்லா தலைமுறை மக்களுக்கும் தனிமனிதர்களின் உடனடித் தேவைகளை ஏற்றவாறு சந்திக்கும் வகையிலும், அவை தனிப்பட்ட முறையில் பேசும் வகையிலும் மேலோங்கி நிற்கின்றன.

எப்பொழுதும்போல தேவன் தமது வாக்கு மாறாதவர். அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார். ஒன்பது மாதங்களுக்குப் பின்னர் அந்தப் போதக ஊழியர் மீண்டும் தன் ஊராகிய சான்பிரான்சிஸ்கோவிற்கு திரும்பி வந்துசேர்ந்தார். அவர் சற்றுக் களைப்புற்றவராகக் காணப்பட்டாலும், கர்த்தருடைய சமூகப் பிரசன்னமும், வல்லமையும் தனக்குத் தெளிவாக விளங்கியதில் பெருமகிழ்ச்சியுற்று களிகூர்ந்தார்.

ஆண்டவர் இன்றும் நம்முடன் பேசுகிறவராகவே இருக்கிறார். MM

# 6

# அந்நாட்டில் குடியிரு

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அருட்பணிக்குத் தங்களை ஒப்புவித்திருந்த ஸ்டீவ் டயனா ரிச்சர்டு தம்பதிகள் 1965 -ஆம் ஆண்டு துருக்கி நாட்டில் உள்ள இஸ்தான்புல் பட்டிணத்தில் குடிபுகுந்தனர். அவர்கள் அங்கு குடியிருக்கையில் தங்களுடைய முதல் குழந்தை பிறக்க இருந்த எதிர்பார்ப்பில் கர்த்தருக்குள்ளான பெரு மகிழ்வில் திளைத்திருந்தனர். அவர்களுடைய வாழ்க்கை தியாகத்துடன் வாழும் வாழ்க்கையாகவே இருந்தது. முனைப்பான சுவிசேஷப் பிரபல்ய ஊழியம், ஊக்கமான ஜெப நேரங்கள் ஆகியவையுமே அவர்களுடைய அனுதினப் பணியாகும். தேவகட்டளையின்படி செயல்படுவதற்குத் தேவையாயிருந்த அனைத்தையும் தேவன் தங்களுக்குக் குறைவின்றி அருளுவார் என்ற உறுதியான விசுவாசமே அவர்களது பெருஞ்சொத்தாக இருந்தது. அவர்கள் தங்களுடைய தேவை அனைத்தையும் கர்த்தருக்கு அறிவித்தனரே தவிர பிறர் எவருக்கும் அறிவிக்கவில்லை.

துருக்கி நாட்டில் தங்கி வாழ்க்கை நடத்துவது எளிதானதல்ல. அந்த நாட்களில் துருக்கி நாடு முழுவதிலும் முகமதிய சமயத்திலிருந்து மனந்திரும்பி, கர்த்தரால் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் பத்துபேர்களையாவது தேடிக் கண்டு பிடிப்பதென்பது அரிதாக இருந்தது. அந்நாட்டில் மத சுதந்திரம்

உண்டெனினும், அந்நாட்டின் தலைவர்கள் அச்சட்டத்தைச் சற்றேனும் பொருட்படுத்துவதில்லை. பொது இடங்களில் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக இருப்பது பலத்த எதிர்ப்பையே கொண்டுவந்தது. பயமுறுத்தல்களும், மிரட்டல்களும் பயனளிக்கவில்லையெனில் காவல் துறையினர் அவர்களை வளைத்துப்பிடித்து சிறையில் அடைப்பர்.

கிறிஸ்தவர்களுக்கு எதிரான நீதிமன்ற வழக்குகள் அன்றாட நிகழ்வுகளே! இவர்களுக்கு எதிராக அவர்கள் கையாண்ட இறுதி ஆயுதம், அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவதே ஆகும். அப்போஸ்தலருடைய திருப்பணி நூலில் காணும் முதல் நூற்றாண்டு சூழலே அன்று துருக்கியிலும் நிலவி வந்தது.

அடுத்துவந்த ஆறு ஆண்டுகளில் இத்தம்பதிகளுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். பெய்கே, மாற்கு, டேல், ரூத்து ஆகியோரே அவர்கள். இந்த ஆறு ஆண்டுக் காலத்திற்குள் இத் தம்பதிகள் அந்நாட்டின் கலாச்சாரத்தை நன்கு புரிந்துகொண்டனர். துருக்கி மொழியையும் அவர்கள் நன்றாகக் கற்றுக்கொண்டனர். இவ்வாறு ஊழியத்தினிமித்தம் குடிபெயர்ந்துவந்த துருக்கியை அவர்கள் தங்கள் சொந்த நாட்டைப் போன்றே கருதக்கூடிய மனப்பக்குவம் பெற்றுக் கொண்டனர். அந்நாட்டு மக்களை அவர்கள் அதிகமாக நேசித்தனர். அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று அதிகமாக வாஞ்சித்தனர். ஒரு புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தின்படி இயங்கக்கூடிய கிறித்தவச் சபை ஒன்று அவ்விடத்தில் உருவாகும்படி களைத்துப்போகும் வண்ணம் உண்மையுடன் ஓய்வின்றி உழைத்தனர்.

ஏழு ஆண்டுகள் கடந்தன. அருகில் உள்ள ஜெர்மனி நாட்டில் தங்கள் குடியிருப்பை மாற்றிக்கொண்டால், அது திட்டமிட்ட ஒரு நல்ல தீர்மானமாக இருக்குமா என்ற எண்ணம் ஸ்டீவ்வின் உள்ளத்தில் உதித்தது. ஏனெனில் ஜெர்மனியிலும் துருக்கியர்கள் கணிசமான அளவில் வசித்தனர். அவ்விடத்தில் அரசாங்க இடையூறு ஏதுமின்றி துருக்கி மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கத்தக்க வாய்ப்பும் இருந்தது. இது மெய்யாகவே கர்த்தருடைய வழிநடத்துதல் தானா? அல்லது அவ்வாறு குடிபெயர்வது தன்னுடைய சுய ஞானத்துடன் எடுக்கப்படும் தீர்மானமா? இச்சிந்தைகளினால் ஸ்டீவ் மனக்கலக்கமடைந்தார். இச்சந்தர்ப்பத்தில் ஒரு தேவ தாசனின் வாக்கு அவருடைய நினைவுக்கு வந்தது.

"இடம் பெயர்வதைக் குறித்து உண்டாகும் இருள் இருக்கும் இடமே, அங்கு தொடர்வதற்குக் கொடுக்கப்படும் வெளிச்சம்" என்பதே அவ்வசனம் ஆகும். அதுமட்டுமின்றி, "தான் ஒளியில் கற்றுள்ளதை, இருள் மங்கிய வேளைகளில் சந்தேகிக்கக் கூடாது" என்பதையும் அவர் அறிந்தவராக இருந்தார்.

ஸ்டீவும் அவரது மனைவி டயனாவும் ஊக்கமாக ஜெபிப்பதில் கருத்தாக இருந்தனர். தெளிவான ஒரு வழிநடத்துதலைத் தங்கள் ஆண்டவரிடமிருந்து பெறாமல், அவ்விடத்தை விட்டு குடிபெயர்வதில்லை என்பதில் அவர்கள் உறுதியுடனிருந்தனர்.

அன்று காலை, அது ஸ்டீவின் அமைதியான வேதவாசிப்பு நேரம். அவர் 37 -ஆம் சங்கீதத்தை வாசித்துக்கொண் டிருந்தார்.

"கர்த்தரை நம்பி நன்மைசெய். நீ நாட்டில் குடியிருப்பாய், மெய்யாகவே மேய்ச்சலைக் கண்டடைவாய்" என்று இவ்வசனம் ஜேம்ஸ் அரசர் ஆங்கில மொழிபெயர்ப்பில் இருக்க, துருக்கி வேதாகமத்தில் அதன் வாசகம் இவ்வாறு இருந்தது, "கர்த்தரை நம்பி நன்மைசெய். நாட்டில் குடியிருந்து கர்த்தருடைய உண்மையை மேய்ந்துகொள்". இந்த வசனம் தன்னுடைய வேதாகமத்தில் தடித்த எழுத்துகளில் அச்சிட்டிருந்ததுபோல ஸ்டீவுக்குக் காட்சியளித்தது.

ஆண்டவர் தங்களிடம் நேரடியாகப் பேசுவதுபோல் ஸ்டீவும், டயனாவும் உணர்ந்தனர். சங்கீதம் 37:3 -ஆம் வசனத்தின் அடிப்படையில் அவர்கள் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் துருக்கி நாட்டிலேயே தங்கி உழைத்தனர்.

இதன் பின்னர் ஆண்டவர் தங்களை ஜெர்மனிக்கு நடத்திச் செல்வதாக உணர்ந்தனர். இதன் அடிப்படையில் அங்கு குடிபெயர்ந்து, அங்குள்ள துருக்கியரிடையே ஊழியம் செய்தனர். அத்தருணத்தில் குணமாக்க முடியாத கல்லீரல் நோயினால் ஸ்டீவ் பாதிக்கப்பட்டார். ஸ்டீவின் இந்த சுகவீனத்தின் காரணமாக அவர்கள் தங்கள் தாய் நாடாகிய அமெரிக்கா திரும்ப வேண்டியதாயிற்று.

"கர்த்தரையே முற்றுமாக சார்ந்திருத்தல்" என்பதே அவர்களுடைய அரிய வாழ்க்கையின் இலக்காக அமைந்திருந்தது. தேவனுக் குக் காத்திருக்கிறவர்களுக்கு அவர் தமது திருவுள சித்தத்தைத் தெளிவாக வெளிப்படுத்தி, இன்றும் வழிநடத்தக் கூடியவராக இருக்கிறார் என்பதற்குச் சாட்சியாக இத்தம்பதியினர் விளங்குகின்றனர். MM

# 7

# வயது ஒரு பொருட்டன்று

எதல் ஜீன் அம்மையார் ஒரு துணிவுமிக்க சிலுவை வீரர். தன்னுடைய வியத்தகு வாழ்க்கையின் மூலம் பலருக்கும் சாட்சியாகச் சிறந்து விளங்கினார். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்கான, இலக்கை நோக்கியே எப்பொழுதும் தொடருகிறவராக அவர் இருந்தார் ( பிலி. 3:14). முன்னோக்கி செல்லும் வழி ஒன்றே இந்த அம்மையாருக்குத் தெரியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மீது கொண்டிருந்த விசுவாசமே அவர்களுக்கு இருந்த பெருஞ்செல்வம்.

இவர் இந்தியானா என்ற இடத்திலுள்ள ஒரு பள்ளியில் இருபத்தைந்து ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறவும், வேதாகம சத்தியங்களை மாணவர்களுக்குப் போதிப்பதற்கும் அனுமதி இருந்தவரை அவர் அந்தப் பள்ளியில் பணியாற்றினார். இந்தச் சுதந்திரம் மறுக்கப்பட்டபோது, குறிக்கப்பட்டிருந்த வயதுக்கு முன்னரே அப்பணியிலிருந்து ஒய்வு பெற்றுக்கொண்டார். இதனால் அவருக்குக்கிடைக்க வேண்டிய ஒய்வூதியத்தொகையும் கணிசமான அளவு குறைந்துவிட்டது.

இவ்வம்மையார் பணிஒய்வு பெற்றார் என்று கூறுவது சரியானதன்று. ஏனெனில் அவர் ஆற்றவேண்டிய பணி இன்னும்

முடிவுறாமல் இருந்தது. ஆம்! ஆண்டவர் அவருக்கு வேறொரு நற்செய்திப் பணியை ஆயத்தம் செய்து வைத்திருந்தார்.

அலாஸ்கா என்ற இடத்தில் வசித்து வந்த இவ்வம்மையாரின் சகோதரனிடமிருந்தும், மைத்துனரிடமிருந்தும் ஓர் அழைப்பு அம்மையாருக்கு வந்தது. அலாஸ்காவில் உள்ள ஒரு கிறித்தவ அனாதை விடுதியில் இருக்கும் பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக் கவும், அங்குள்ள பிற பணிகளில் உதவிசெய்யவும் அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

இப்பொழுது அம்மையாருக்கு 58 வயதாகி விட்டது. சமீபத் தில்தான் ஓர் அறுவைச் சிகிச்சையும் அவர்களுக்கு நடந்திருந்தது. பலவீனமுற்று வயதான நிலையில், ஒரு புதிய இடத்தில் பொறுப்பு களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது கர்த்தருடைய சித்தம் தானா என்ற கேள்வி அவர்கள் முன் நின்றது. அந்த அம்மையார், தனது பரம நண்பரிடமே இக்கேள்வியைக் கேட்கலானார்.

ஒரு நாள் காலைப்பொழுது, அவர் தனது வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கவனத்தை சங்கீதம் **39:5** ஆம் வசனம் ஈர்த்தது. பளிச்சிடும் பெரிய எழுத்து களாக இவ்வசனம் அவர்முன் எழுந்து நின்றது. "என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோல் இருக்கிறது." தனது பரம நண்பரே தம்மிடம் நேரடியாகப் பேசுவதாக அவர்கள் உணர்ந்தார்கள். இந்த வசனத்தினால், கர்த்தர் மெய்யாகவே அழைக்கிறார் என்பதை உறுதி செய்துகொண்டு, உடனே தனது பயணப்பொருட்களை ஆயத்தம்செய்துக்கொண்டு அலாஸ்காவுக்குப் பயணப்பட்டார்கள்.

அங்கு சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர், அந்த அலாஸ்கா நாட்டு ஆட்சிமுறைப்படி ஒரு தனிமாநிலமாக மாற்றப்பட்டது. சட்டபடி அவர் பணிஓய்வு பெறவேண்டிய வய தாகிவிட்ட தால், அவர் தன் ஆசிரியர் பணியை நிறுத்தவேண்டிய சூழல் உருவாயிற்று. இருப்பினும், அப்புதிய மாநிலத்தில் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவியதால், பொதுப்பணித்திட்டத்தின்கீழ், அந்த விடுதியில் மாற்று ஆசிரியராக அவர்கள் பணியமர்த்தப்பட்டார் கள். இதனோடு மாணவர்களுக்கு திருமறையைப் போதிக்கும் சுயாதீனமும் அவர்களுக்கு இருந்தது.

இச்சமயத்தில் அவர் இந்தியானாவில் பணியாற்றிபோது கிடைக்காமல் போன ஒய்வூதியத்தொகையும் இறையாண்மையருளால் கிடைக்கப் பெற்றார்கள்.

மேலும் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் இவ்வம்மையார் அந்த அலாஸ்காவில் ஆசிரியராகப் பணியாற்றி மாணவர் களுக்குப் பெரும் உதவியாக விளங்கினார்கள். MM

---

Adapted from “Journey’s End”, *Uplook Magazine*, December 1989, p. 426.

# 8

# ஈகுவடாருக்குப் போ

இறை சித்தத்தை அறிந்துகொள்வதில் அருட்பணியாளர் ஜிம் எலியட்டு (*Jim Elliot*) சிறந்து விளங்கினார். புத்தியற்ற முறையில் செயல்படவில்லை. எல்லாக் காரியங்களிலும் அவர் நிதானமாகவும், நியாயமாகவும் செயல்பட்டார். தனது ஆண்டவருக்கும், தனது அர்ப்பணிப்புக்கும் இடையில் குறுக்கே நிற்கும் எவற்றையும் அவர் சற்றேனும் சகித்துக்கொள்ளமாட்டார். அவற்றிக்கு எதிராகக் குரல் கொடுப்பதில் அவர் சிறிதேனும் தயங்கினதில்லை.

கிறிஸ்துவைப்பற்றி அறியாதிருக்கும் தூர நாட்டிற்குச் சென்று ஊழியம் செய்யும்படி தேவன் தன்னை அழைக்கிறார் என்பதை ஜிம் நன்றாகவே அறிந்திருந்தார். ஆயினும் எந்த நாட்டிற்குச் செல்வது என்ற கேள்வி அவர் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. அவர் உலக அருட்பணியாளர் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டிருந்ததால் ஊழிய வாய்ப்புகள் அவர் முன்பாக நீண்டு அணிவகுத்துச் சென்றன.

இறுதியில், ஒருவகையாக இரண்டு ஊழியக் களங்களாக அவை குறுகின. இவற்றில் எதனைத் தெரிந்தெடுக்கவேண்டும்? இதுவே அவர் முன் இப்பொழுது இருந்த கேள்வி.

ஈகுவடார் என்ற பகுதியில் பணியாற்றிவந்த மூத்த அருட்பணியாளரான திரு. வில்பிரட்டு டிட்மார்ஷ் (*Wilfred Tidmarsh*)

*என்பாருடன் கடிதத்தொடர்பு கொண்டிருந்தார். ஹுயுச்சுவா இந்தியர்கள் (Quechua Indians) என்று அழைக்கப்படும் இனத்தவரிடம் சென்று ஊழியம் செய்வதற்கு ஜிம் ஏற்கனவே சம்மதம் தெரிவித்திருந்தார். அதே வேளையில் இந்தியாவில் உள்ள பெங்களூரில் ஊழியம் செய்துகொண்டிருந்த திருவாளர் ராவ்லாண்டு ஹில் என்பவருடனும் அவர் தொடர்பு கொண்டிருந்தார். ஹில் அவர்களும் அவரை அழைத்திருந்தார்கள். இவ்விரண்டு இடங்களில் எந்தப் பணித்தளத்தைத் தெரிந்தெடுப்பது என்று அறியாமல் அவருடைய மனம் அலைகழித்துக்கொண்டிருந்தது.*

*1950- ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கோடைக்கால மொழியியற் கல்விப்பயிற்சி நிறுவனத்தில் (Summer Institute of Linguistics) அவர் படித்துக்கொண்டிருந்தார். அங்கு வந்திருந்த அருட்பணியாளர் ஒருவர் ஈகுவடாரில் உள்ள ஆக்கா இந்தியர்கள் (Auca Indians) பற்றி ஜிம்மிடம் பகிர்ந்துகொண்டார். அந்த மக்களைக் குறித்து அவர் கூறிய விவரங்கள் ஜிம்மின் கவனத்தை இறுகப் பற்றிக்கொண்டன; அவரது இருதயத்தில் அனல் மூண்டது. இந்தியாவுக்குச் செல்வதா? அல்லது ஈகுவடாருக்குச் செல்வதா? என்பதைக் குறித்து தேவன் தெளிவாகத் தனக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு அவர் பத்து நாட்களை ஜெபத்தில் செலவிட்டார். இந்த நாட்களில் அவர் தனது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்துள்ள விவரமாவது:*

> “இந்த நாட்கள் என் ஊழிய தரிசன நாட்களாக இருந்தன. கிறிஸ்து மகிமை அடைவதற்கு நான் அவசியம் செய்ய வேண்டிய அந்த மகத்தான காரியங்கள் எவையென்பது இந்நாட்களில் எனக்கு வெளிப்படுத்தப்பட்டன. நான் ‘அவசியம் செல்லத்தான் வேண்டும்’ என்பது இருபகுதிகளாக இருந்தன. அதில் ஒன்று, என்னைச்சுற்றி வாழும் மக்கள் தங்களுடைய நடைமுறை வாழ்க்கையில் இறை வார்த்தைகளை விட்டு அதிகமாக விலகிச் சென்றுள்ளதைக் கண்டேன். தேவ வசனத்தைப் படித்ததில் நான் கண்ணுற்ற மற்ற பகுதி, முன் நாட்களில் வாழ்ந்த இறை மக்கள் பின்பற்றி வந்த வாழ்க்கை முறையும் அதன் உயர்ந்த இலக்கும், அவர்களுடைய அழகான வாழ்க்கைத்தரமுமாகும். ஆம்! நமக்கு இன்று அருளப்பட்டுள்ள இறைவெளிச்சத்தில் நாம் எத்தகைய முனைப்புள்ள மனிதர்களாக இருக்க வேண்டும். ஆண்டவரே! ஒருமுறை நீர் பேசினீர்; மீண்டும் மறுமுறை நீர் பேசுகிறீர். செய்யவேண்டியதை ‘அவசியம் செய்யத்தான்’ வேண்டும். ஆம்! செய்து தீர்க்கத்தான் வேண்டும். இதை நான் உறுதியாக நம்புகிறேன்.

தொலைவில் தோன்றுகிற, 'அவசியம் செய்யவேண்டியவற்றை' நிறை வேற்றுவீராக. ஆண்டவரே உமது நாமத்தை, உமது வார்த்தைகளை, உமது வழிமுறைகளை உறுதிப்படுத்தியருள்வீராக!

*நாட்கள் நகர்ந்தன. ஜுலைத் திங்கள் 4-ஆம் நாள் ஈக்குவடார் செல்ல வேண்டும் என்று தான் நம்புவதை ஒரு வேதவசனத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என ஜிம் வேண்டிக்கொண் டார். பத்து நாட்கள் கடந்தன. அவர் யாத்திராகமம் 23-ஆம் அதி காரத்தைப் படித்துக்கொண்டிருந்தார் அதில் உள்ள 20 -ஆம் வசனம் அவருடைய கண்களுக்கு முன்னதாகக் குதித்து எழுந்து நின்றன.*

''வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத் துக்கு உன்னைக் கொண்டு போய்ச் சேர்க்கிறதற்கும், இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்''.

*சாதாரணமாக வாசிப்பவர்களுக்கு இந்த வசனம் பொது வான ஓர் உறுதியைத்தரும் வசனமாகவே அமையும். எந்த ஒரு வழி நடத்துதலுக்கும் பொருந்திவரக்கூடியதாகவே இவ்வசனம் இருக்கிறது. ஆயினும் ஜிம்மைப் பொருத்தமட்டில் இது அவர் காரியத்தில் தேவனுடைய குரலாகவே அமைந்திருந்தது.*

''இவ்வாக்கு வந்தவண்ணமாகவே, பொங்கி எழும் உணர்வுகளுடன், எளிமையான விசுவாசத்தோடு தேவனிட மிருந்து வந்த வழிநடத்துதலாக நான் இதை எடுத்துக்கொண்டேன். தேவனுடைய சித்தபடி நான் ஈகுவடாருக்கு வருகிறேன் என்று திரு வில்பிரட்டு டிட்மார்ஷ் அவர் களுக்கு கடிதம் எழுதத் தீர்மானித்தேன்'' என்று அவர்தன் குறிப்பேட்டில் பதிவுசெய்தார்.

*இதையடுத்து அவருடைய வாழ்வில் நடந்த விவரங்கள் இன்று சரித்திரமாகத் திகழ்கிறன. ஜிம் ஈகுவடாருக்கு சென்றார். 1956-ஆம் ஆண்டு, ஜனவரி 8-ஆம் நாள் அவரும் அவருடன் இருந்த உடன்பணியாட்களும் ஆக்கா மக்கள் வசிக்கும் இடத்தில் உள்ள குராரே (Curaray) என்ற நதிக்கரையில் விமானம் மூலம் சென்று இறங்கினர். நாகரிகம் அறியா, முற்றும் இருளில் மூழ்கியிருந்த ஆக்கா இந்தியர்களுக்கு சுவிசேஷ ஒளியை எடுத்துக்காட்ட வேண்டும் என்ற தாகத்துடன் செயல்பட்ட அவர்களின் முயற் சிக்கு அன்று பரிசு அளிக்கும் நாளாக இருந்தது. அன்று அந்த ஐவரும்[1] ஆக்கா மக்களின் ஈட்டிகளுக்குப் பலியாயினார்.*

இவ்வாறு ஜிம் மற்றும் அவருடன் சென்ற மற்ற ஊழியர்கள் அனைவரும் கிறிஸ்துவுக்காகத் தியாக மரணமடைந்தார்கள்.

இப்பூமியில் நீண்டநாள் வாழ்ந்து, பயனுள்ள ஊழியம் செய்து, தேவனுக்கு மகிமையைக்கொண்டு வருவதிலும் மேலாக, தங்களின் மரணத்தின் மூலம், அவர்கள் ஐவரும் அதிக மகிமையை இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பிய ஆண்டவருக்குச் செலுத்தினார்கள்!

---

Adapted from Elisabeth Elliot, *Shadow of the Almighty,* New York: Harpors Brothers, Publishers 1958.

1. **ரோஹர் யாடெர்லான், பீட்டர் ஃபிளமிங், ஜிம் எலியட், நேட் செயிண்ட், எட்வின் மெக்குலி**

# 9

# விடியற்காலைக் களிப்பு

அக்குடும்பத்தினர் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்திருந்தனர். அத்துக்கத்தை அவர்களுடன் சேர்ந்து பகிர்ந்துகொள்ளவும், ஜெபிக்கவும் அவர்கள் ஐக்கியமாக இருந்த சபைமூப்பர்கள் அவர்களுடைய இல்லம் தேடி வந்தனர்.

அன்பு மனைவியாகவும், அருமைத் தாயாகவும் விளங்கிய அவ்வீட்டுத் தாயார் இப்பொழுது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தன்னுடைய இவ்வுலக வாழ்வின் இறுதி வேளையை அவர் நெருங்கிக்கொண்டிருந்தார். அவ்வமயம் அங்கு வந்திருந்த மூப்பர்களில் ஒருவர் "நாம் நம்முடைய சொந்த விருப்பத்தின்படி ஜெபிப்பதை நிறுத்தி, கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது என்று ஜெபிக்கவேண்டிய நேரம் வந்து விட்டது" என்று கூறினார். சிறிதுநேரம் அவ்வீட்டில் அமைதி நிலவியது. பின்னர் அனைவரும் ஜெபிக்கும்படி முழங்காலிட்டனர். அக்குடும்பத்தின் தகப்பன் தேவசித்தத்திற்குத் தன் மனைவியை ஒப்புக்கொடுத்து ஜெபித்தார். அவ்வாறே, தனது தாயாரின் வாழ்வில் கர்த்தருடைய திருச்சித்தம் நிறைவேறட்டும் என்று அவருடைய ஒரு மகன் ஜெபிக்கலானார். அடுத்து அவர்களுடைய மற்றொரு மகன் ஜெபிக்கத் தொடங்கிய போது, தொலைபேசி மணி ஒலித்தது. மருத்துமனையிலிருந்து இந்த அழைப்பு வந்திருந்தது. "உங்கள் தாயரைக் காண உடனே வாருங்கள். அவர்கள் சுயநினைவு இழந்து கோமா நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்"

என்று மறு முனையில் இருந்தவர் கூறினார். உடனே அக்குடும்பத்தினர் மருத்துவமனையை நோக்கி விரைந்தனர். ஆயினும் அவர்கள் அங்கு சென்று அடையும் முன்னரே தாயார் சுய நினைவு அற்ற நிலைக்குச் சென்றுவிட்டிருந்தார்கள்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான இந்த அன்புத்தாயார் சுமார் ஆறு மாதத்திற்கு முன்னர் கொடிய இரத்த சோகை நோயினால் பீடிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள். இவர்களுக்கு இந்நோய் இதற்கு முன்னரும் கண்டிருந்தபடியினால், இவ்வளவு பெரிய ஆபத்தாக அது முடியும் என்று அவர்கள் நினைக்கவில்லை. மருத்துவர்களின் சீரான கண்காணிப்பில் அவர் இருந்தார். ஏற்ற மருந்துகளைக் கொடுத்து இரத்த அழுத்தம், அளவு ஆகியவற்றைச்சீராக்கி, நோயாளியை வீட்டிற்கு அனுப்பி விடலாம் என வைத்தியர்கள் கருதினர். அவ்வாறு வீட்டிற்கு அனுப்பத் தீர்மானித்திருந்தற்கு முந்தின நாள், இந்த இரத்த சோகை நோய் வருவதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க, வைத்தியர் நோயாளியின் உணவுப்பையைப் பரிசோதிக்க நினைத்தார். இந்த வைத் தியர் ஒரு வல்லுனரே. ஆயினும் இதற்காக பரிசோதனைக் கருவியை செலுத்த முயற்சித்தபோது, எதிர்பாராதவாறு அக் கருவி உணவுப்பையைத் துளையிட்டுவிட்டது. இதற்காக உடனே அவர்கள் ஒரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதனை அடுத்து நோயாளி குணமடைந்து வருவதாகவே தென்பட்டது. ஆயினும் பத்து நாட்களுக்குப் பின்னர், கிறிஸ்மஸ் தினத்தன்று நோயின் கொடுமை அதிகமாயிற்று. தங்களிடமிருந்த நோய் எதிர்ப்பு மருந்தை பயன்படுத்தினால் நோயாளியின் இரத்தம் பாதிக்கப்படும் என வைத்தியர்கள் பயந்தனர். இவ்வாறு ஆறுமாத காலமாக அம்மையாரைக் குணப்படுத்த மருத்துவர்கள் முயற்சிசெய்தார்கள். நோயாளி சுகமாகி வருகிறார் எனக்கருதும் நேரங்களில் மீண்டும் தாக்குதல் ஏற்படுவதை வைத்தியர்கள் கண்டனர். இவ்வாறு நிலைமை ஏற்றத்தாழ்வு உடையதாகவே மாறிமாறி வந்தது.

ஒருமுறை அந்த தாயாரை ஊடுருவிக்கதிர் படம் (X-Ray) எடுக்க அவ்வறைக்கு அழைத்துச்சென்றனர். அவ்வமையம் அவ்வம்மையார் இருண்ட ஒரு குளிர்ந்த அறையில் சற்று நேரம்

இருக்க நேர்ந்தது. அவர்கள் அந்த அறையில் தனிமையாக இருந்தபோது, கர்த்தர்தாமே தன்னிடம் நெருங்கி வந்ததாக அவர் தன் குடும்பத்தாரிடம் கூறினார்கள். அந்நேரம் முதற்கொண்டு மரணத்தைப்பற்றின பயம் தன்னைவிட்டு அகன்றுவிட்டதாகவும் அவர்கள் அறிக்கைச் செய்தார்கள். ஆண்டவர் அந்த தாயாரின் உள்ளத்தில் ஆழ்ந்த அமைதியையும், சமாதானத்தையும் அருளியிருந்தார்.

இறுதியில் நோயின் தாக்கம் சிறுநீரகத்தையும் பாதித்தது. இனி தங்களால் எதுவும் செய்ய முடியாதென மருத்துவர்கள் கூறிவிட்டனர். அவ்வம்மையார் சிலநாட்கள் சுயநினைவு அற்று இருந்து, தான் கர்த்தருடன் இருக்கும்படி அமைதியாகக் கடந்து சென்றார்.

இக்குடும்பத்தினர் கர்த்தருடைய சித்தம் ஆகட்டும் என ஒப்புக்கொடுத்து ஜெபித்திருந்தனர். அன்புத் தாயாரை கர்த்தர் தமது பரம வீட்டிற்கு அழைத்துக்கொண்டார். இவ்வாறு அவர்களுடைய ஜெபத்திற்கு ஆண்டவர் பதில் கொடுத்தார். இப்பிரிவினால் அக்குடும்பத்தினரின் நம்பிக்கை அற்றுப்போய்விடவில்லை.

ஆயினும், இதனால் உண்டான பிரிவு அவர்களுக்கு மிகுந்த வேதனையாகவே இருந்தது. உறவினர்களும் நண்பர்களும் கூடி வந்தனர். ஆறுதல் வார்த்தைகளைக் கூறினர். இவர்களைப் போலவே துக்கமான அனுபவத்தின் ஊடாகக் கடந்து சென்றிருந்தவர்கள் தாங்கள் ஏற்கனவே கர்த்தரிடமிருந்து பெற்றிருந்த ஆறுதலைப் பரிமாறிக்கொண்டனர். ஆயினும் கர்த்தரைப்போல் ஆறுதல் கூறி, தேறுதல் அளிக்க கூடியவர் வேறு எவரும் இல்லை அல்லவா! "தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு, நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" ( 2 கொரி. 1:4 ).

இறை ஊழியரும் வேத பண்டிதருமாகிய எச். ஏ. அயர்ன்சைடு (H.A. Ironside) என்பார் இக்குடும்பத்திற்கு உற்ற நண்பராக இருந்தார். அவர், இவர்களுடைய துக்கத்தைக்குறித்து கேள்வியுற்றபோது, அவர்களை ஆறுதல்படுத்த ஒரு கடிதம் எழுதி அனுப்

*பினார். அக்கடிதத்தின் இறுதியில் அவர் குறிப்பிட்டிருந்த வேத வசனம் இது:*

**“சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்தில் களிப்புண்டாகும்” (சங்கீதம் 30:5).**

*அந்த குடும்பத்தாருக்கு பலரால் சொல்லப்பட்டதும், எழுதப் பட்டதுமான ஆறுதல் வார்த்தைகள் எல்லாவற்றைக் காட்டிலும் திருமறையிலிருந்து எடுக்கப்பட்ட இந்த எளிய வசனமே அவர் களுடைய துயரத்தின் கட்டை அவிழ்த்து விட்டது. “ஏற்ற காலத் திலே சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது” ( நீதி. 15:23).*

*கர்த்தருடைய வருகைக்குமுன் உள்ள குறுகிய காலம் மட் டுமே அழுகை தங்கியிருக்கும். ஆயினும் விடிவெள்ளி நட்சத்திரம் தோன்றி மிளிரும் இளம் காலைப்பொழுதினிலே மிகுந்த களிப்பு உண்டாகும். “அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை. அலறுதலு மில்லை, வருத்தமுமில்லை. முந்தினவைகள் ஒழிந்து போயின” (வெளி. 21:4).*

*நம்முடைய துக்கம், அழுகை அனைத்தும் இங்கே, இப் பொழுதே முடிந்துவிடும். அங்கேயோ, ஒருபோதும் துக்கமும் இராது, அழுகையும் இராது!*

MM

# 10

# விருதாவாக உழைக்கிறேனே!

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைச் சேவிப்பதற்கு ஒப்பான மனநிறைவு வேறு எதுவுமில்லை. இதற்கொத்த புனிதமான ஊழியம் வேறு உண்டோ? சிறந்த பிரசங்கியாரும் எழுத்தாசிரியருமான திருவாளர் ஜே. எச். ஜோவெட்டு (J.H. Jowet) அவர்களின் கூற்று மிக நேர்த்தியாக உள்ளது:*

> இருபது ஆண்டுகளுக்குமேலாக நான் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்து வருகிறேன், எனது ஊழிய அழைப்பை நான் மிகவும் நேசிக்கிறேன். இவ்வூழியத்தில் என் உள்ள வாஞ்சை சுடர்விட்டு எரிகிறது. எனக்கு அருளப்பட்டிருக்கும் இவ்விறைக் கட்டுப்பாட்டுக்கும், சக்திக்கும் எதிராக நின்று போட்டியிட்டு கலங்கடிக்கக் கூடிய ஒன்றையும் நான் அறியேன். இது கர்த்தருடைய அளவற்ற கிருபையையும், அன்பையும் பறைசாற்றும் ஊழியமாகும். உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து, கடினமாக உழைக்க வேண்டிய பணி இது. இது ஒரு மகிமையான ஊழியம். இது ஒன்றே என் உள்ள வேட்கை! இதனை நிறைவேற்றுவதற்கென்றே நான் வாழ்கிறேன்.[1]

*இவ்விதக் குறிக்கோளுடன் வாழும் மனிதன் நித்தியத்திற்கென்று கடன்பட்டிருக்கிறான். அவன் இதை நன்கு உணருவான். நூல்நூற்கும் சக்கரம் பயனற்று சுற்றிக்கொண்டிருப்பதைப் போன்று இது இராது. இறைவார்த்தை வெறுமையாகத் திரும்பாது. இதனை இத்தகைய ஊழியர் நன்கு அறிவர். எந்த நோக்கத்திற்காக தேவன் தன் வார்த்தைகளை அனுப்புகிறாரோ, அந்நோக்கத்தை*

அது நிச்சயமாக நிறைவேற்றும் (ஏசாயா 55:1). அத்தகைய ஊழியன் பெறப்போகும் ஆவிக்குரிய ஆதாயமோ, இவ்வுலகக் கணக்கின் படி அளக்கக் கூடியதல்ல. அதன் விளைவுகள் இவ்வுலக வாழ்க் கையைக் கடந்து மறுமையில் நிலைத்து நிற்பவைகளாகும். அவற் றிற்கு எல்லைகள் கிடையாது.

இவையாவும் இத்தகைய ஊழியத்தில் இருப்பினும், இத்த கைய பாதையில் எவ்வித இடையூறுகளும் இராது என கருதிவிடக் கூடாது. கலப்பையின் மேல் தன் கையை வைத்தபின்பு, ஏமாற் றங்கள் பல எழும். ஆண்டுகள் உழைத்தப்பின்னரும், பலன் கிடைக்காமலே போகலாம். அறுவடை குறைவாகவே இருக்கும். இவை மனச்சோர்வை உண்டுபண்ணும். பிற மக்களுக்கு நேரிடும் சோதனைகளையே ஊழியனும் சந்திக்கிறான். அவன் தன் பரம வீட்டிற்குச்செல்லும்வரை அவனுக்கு இவ்வுலகில் பாது காப்பு இல்லை. ஊழியனின் கனவுகள் நிறைவேறாமல் போகக் கூடும். ஊழியத்தின் வாசல் அடைபடும்போது சொல்லமுடியாத வேதனையும் ஏக்கமும் எழும்.

இத்தகைய அனுபவமே சில ஆண்டுகளாக ஆண்டவர் இயேசுவுக்கு உண்மையுடன் ஊழியம் செய்து வந்த ஒருவருக்கு நேரிட்டது. மிகுந்த மகிழ்வுடன் அவர் தன் ஊழியத்தில் ஈடுபட்டி ருந்தார். ஆயினும் அவரிடம் எவ்விதத் தவறுகள் இல்லாதிருந்தும், சில வாரங்களுக்குள்ளாக அவருடைய ஊழியப் பொறுப்பு பல வந்தமாகப் பிடுங்கப்பட்டது. இது அவருக்கும், அவர் குடும்பத்திற் கும் மிகுந்த மன வேதனையைக் கொண்டு வந்தது. இதனை அவர் எண்ணி, எண்ணி வேதனைப்பட்டார்; மனம் நொந்துபோனார். ஆயினும் தேவன் அவரை மறந்துவிடவும் இல்லை; கைவிடவும் இல்லை.

இச்சூழலில் ஒருநாள் ஒரு சகோதரியிடமிருந்து அவருக்கு கடிதம் வந்தது. இச்சகோதரி ஏற்கனவே இவ்வூழியருக்கு அப் போதைக்கப்போது சிறு சிறு உதவிகளை அனுப்பியிருக்கிறார் கள். அவர் அக்கடிதத்தைப் பிரித்தார். இச்சமயத்தில் இவ்வூழியர் எத்தகைய சூழலில் இருக்கிறார் என்பதை அச்சகோதரி அறிந்து கொள்ள எவ்வித வாய்ப்பும் இல்லை. அவர் தன் பிரச்சினைகளை தனது குடும்பத்தாரைத் தவிர வேறு ஒருவருக்கும் அறிவிக்கவும் இல்லை. அச்சகோதரி வழக்கமாக எழுதுகிற சில வரிகளுடன், இறுதியில் ஏசாயா 49:4 -ஆம் வசனத்தைக் குறிப் பிட்டிருந்தார்கள்.

*ஊழியர் உடனே தன் வேதாகமத்தை எடுத்து அந்த வசனத்தைப் படித்தார்:*

> "அதற்கு நான்: விருதாவாய் உழைக்கிறேன், வீணும் வியர்த்தமுமாய் என் பெலனைச் செலவழிக்கிறேன்; ஆகிலும் என் நியாயம் கர்த்தரிடத்திலும், என் பெலன் என் தேவனிடத்திலும் இருக்கிறது என்று சொன்னேன்".

*இளைப்படைந்து நொந்துப் போயிருந்த ஊழியருக்கு, ஏற்ற சமயத்திற்குத் தேவையான வார்த்தை இது (ஏசாயா 50:4). அந்த குறிப்பிட்டநேரத்தில், அவர் அவ்வசனத்தின் மூலம் அடைந்த ஆறுதலை விவரிக்க இயலாது. தேவையான செய்தியைச் சரி யான தருணத்தில் அனுப்பும்படி, மற்ற ஒருவருடைய உள்ளத்தை யும், மனதையும் ஆண்டுகொண்ட தேவனுக்குத் துதி உண்டா கட்டும். தம்முடைய திருவசனத்தைக் கொண்டு நேரடியாக தேவன் பேசும் குரலே இது என்று அவ்ஊழியர் தெளிவாக உணர்ந்தார். அவர் இதுவரை செய்துள்ள ஊழியம் எதுவும் வீணாகவில்லை. கர்த்தருக்காகத் தான் செய்துள்ள அனைத்திற்கும் ஒருநாளில் பலன் கிட்டும். அதற்கான பலனை தேவனே அருளு வார் என்றும் இவ் வசனம் அவருக்கு உறுதியளித்தது.*

*அவரது இந்த வேலை நீக்கம், மெய்யாகவே அவருடைய முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது. கர்த்தர் ஒருவரைப் புழுதியி லிருந்து தூக்கி எடுத்து, நிமிர்ந்து நிற்கச் செய்கிறார். உலகளாவிய அளவில் தாக்கத்தை வருவிக்கக்கூடிய மற்றொரு நிலைக்கு உயர்த்துகிறவரும் அவரே!* MM

---

1. *The Preacher, His Life and Work*, New York: Hodder & Stoughton, 1912, pp. 9-10.

# 11

# இவ்வியாதி மரணத்திற்கு ஏதுவானதல்ல

இப்பொழுது இங்கு சொல்லப்படவிருக்கும் நிகழ்ச்சி திருச்சபைச் சரித்திரத்தில் மீண்டும் மீண்டும் பல இடங்களில், பலமுறை நிகழ்ந்துள்ளதேயாகும். ஆயினும் இங்கு கூறப்படும் விவரங்களில் சற்று மாற்றமிருக்கும்.

ஜான் என்பவர் தேவபக்தியுள்ள சபை மூப்பர். அவர் தனது உடன் விசுவாசிகளால் அதிகமாக நேசிக்கப்படுபவர். இருதய நோய் கொண்டிருந்த குடும்பத்தில் பிறந்திருந்த இவருக்கும் அந்நோய் இருந்தது. அந்நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்குக் கடுமையான மாரடைப்பு உண்டானதினால் அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

உடனே சபையாரும் முழுமூச்சாக அவருக்காக ஜெபிக்க ஆரம்பித்தனர். தங்களுடைய ஆவிக்குரிய தலைவராக விளங்கிய அவருக்காக தேவ கிருபாசனத்தின் முன்பாக ஊக்கமாக ஜெபிக்கலாயினர்.

ஆயினும் நம் சகோதரர் ஜான் அவர்களின் உடல் நிலையைக்குறித்து மருத்துவ மனையிலிருந்து வந்த தகவல்கள் உற்சாகம் ஊட்டுவதாக இல்லை. மாரடைப்பால் பாதிக்கப்பட்ட அவரது உடல்நிலை மோசமாகவே இருந்தது. “இவருடைய இருதயத் துடிப்பு இப்பொழுது உள்ள வேகத்தில் தொடர்ந்து செயல்படுமாயின், சீக்கிரமாவே அவர் இறக்க நேரிடும்” என்று வைத்தியர்கள் அவருடைய குடும்பத்தினருக்கு அறிவித்திருந்தார்கள்.

*அவருடைய நிலைமை இவ்வாறு இருக்க, அச்சபையில் இருந்த மற்றொரு விசுவாச சகோதரர் தனது காலை தியானத்தில் யோவான் 11:4 -ஆம் வசனத்தை வாசிக்க நேரிட்டது. கர்த்தர் தாமே அந்த அருமையான மூப்பரைப் பற்றித் தன்னிடம் நேரடியாகப் பேசுவதாக அவர் உறுதியாக நம்பினார்.*

" இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல், தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாக இருக்கிறது; தேவனுடைய குமாரனும் இதனால் மகிமைப்படுவார்".

*இந்த வசனத்தை எழுத்தளவில் விசுவாசிக்க வேண்டும் என அவரது உள்ளம் கூறிற்று. அவரும் இந்த வாக்குத்தத்தம் உண்மை என்றே உறுதியாக நம்பினார். ஆயினும் நாட்கள் கடந்து செல்லச் செல்ல, மருத்துவமனையில் இருந்து சகோதரர் ஜானைப் பற்றி வந்த செய்திகள் நம்பிக்கையூட்டுவதாக இல்லை. இந்நிலையில், தங்களது மதிப்பிற்குரிய சகோதரரைக் குறித்து கர்த்தர் தம்மிடம் கூறியதை எடுத்து மற்றவர்களுக்குத் தெரிவித்தால், தன்னைத் தவறாகப் புரிந்துகொள்வார்களோ எனக்கருதி அந்த நண்பர் பிறருடன் இதைப் பகிர்ந்து கொள்ள அஞ்சினார்.*

*இந்நிலையில் அந்த ஞாயிற்றுக் கிழமையன்று சபையார் அனைவரும் தங்கள் மூப்பரைக்குறித்து மிகவும் வருத்தத்துடன் இருந்தனர். சகோதரர் ஜான் அந்தச் சபையில் பல ஆண்டுகளாக மிகவும் உண்மையுடன் உழைத்தவர். ஞாயிறு பாடசாலையின் தலைவராகவும் பணியாற்றி வந்திருந்தார்.*

*இத்தகையவர் இப்பொழுது மரண வாயிலில் இருக்கிறார். அன்று சபையின் சுவிசேஷக்கூட்டம் முடிந்தவுடன் ஆவியில் உந்தப்பட்ட சபையார் அவருக்காக ஜெபிக்கலாயினர். இயல்பாக நடக்கும் கூட்டம் போன்று அக்கூட்டம் இல்லை. தேவ மனிதனாகிய இவருடைய சேவை எவ்வளவு அவசியமாயிருக்கிறது என்பதற்கான காரணங்கள் காட்டி, ஆண்டவருக்கு முன்பாக ஒவ்வொன்றாக எடுத்துவைத்து ஜெபித்தனர். அவர்கள் சிறிதும் வெட்கப்படவில்லை. அவர்கள் அழுது வடித்த கண்ணீர்த்துளிகள் தரையை நனைத்தன. பரலோகம் குனிந்து இக்காட்சியைக் கண்டது.*

*மறுநாள் காலை "இன்று எப்படி இருக்கிறீர்கள்?" என்ற கேள்வியுடன், மருத்துவர் நோயாளியைச் சந்திக்க வந்தார். இதற்கு*

நமது மூப்பர் "நான் 100 சதவீதம் சுகமாக இருக்கிறேன்" என்று பதில் கொடுத்தார்.

மருத்துவர் இதைக்கேட்ட போது தனது வெண்ணிற மேல் கோட்டிலிருந்த பையிலிருந்து இதயத்துடிப்பறியும் கருவியை வெளியே எடுத்து, நோயாளியைச் சோதிக்கலானார். அவரைப் பரிசோதித்த மருத்துவர் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார். தான் கண்ட நிலைமையை அவரால் நம்ப முடியவில்லை.

"100 சதவீதம் அல்ல, 200 சதவீதம் நீங்கள் குணமாகி யிருக்கிறீர்கள்" என்று வியப்புடன் மருத்துவர் பதில் கூறினார்.

ஆம்! அவர் கூறியது உண்மையே! இம்மூத்த சகோதரர் நல்ல சுகம் பெற்று, வீடு திரும்பினார்.

இதைத்தொடர்ந்து அவர் நல்ல கனி நிறைந்த ஊழியம் செய் யத்தக்க வகையில் ஆண்டவர் அவருக்கு 13 ஆண்டுகள் கூடு தலாகக் கொடுத்தார். இவைகளுக்குப் பின்னர், ஒரு குளிர்காலத் தில் அவர் தன் வேலைக்குச் செல்ல வீட்டிலிருந்து புறப்பட்டார். தன்னுடைய காரின்மேல் படர்ந்திருந்த மெல்லிய வெண்பனிப் படலத்தை அகற்றிக் கொண்டிருக்கையில் அவர் அதன்மீது சாய்ந்து, எவ்வித வேதனையுமின்றி தான் சேவித்த இறை அரசரைச் சந்திக்க மகிமைக்குள் பிரவேசித்தார்.

"இந்தவியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல், தேவனுடைய மகிமைக்கு ஏதுவாயிருக்கிறது" என்று தேவன் கூறிய நல்வாக்கு அப்படியே நிறைவேறிற்று. தமது மக்கள் ஏறெடுத்த ஊக்கமான ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுத்தார். அனைத்தும் காரிருளா கக் காணப்பட்ட வேளையில், தேவனுடைய வாக்குறுதியைப் பெற்ற அந்த சகோதரர், தான் பெற்ற அவ்வாக்கைப் பிற சகோ தரர்களிடம் பகிர்ந்திருப்பாரேயாகில் நலமாக இருந்திருக்கும். ஆயினும் அத்தகைய விசுவாசத்தோடு செயல்படக்கூடாமல் போயிற்றே என்று அவர் தன்னையே நொந்துகொண்டார். MM

# 12

# கர்த்தரிடமிருந்து பெற்ற ஏழு வார்த்தைகள்

கர்த்தருடைய ஊழியத்தில் ஒய்வின்றி கடுமையாக உழைத்தும் குறைவான பலனையே காண்பதில் புதுமை ஏதுமில்லை. ஊழியப்பாதை வறட்சியான பாதையே. வளர்ச்சி இன்றி தேங்கிக்கிடப்பது அருட் பணியாளர்களின் வாழ்வில் பொதுவாக நிகழக் கூடியதாகவே இருக்கிறது. திரு. பால் பிராம்சன், அவருடைய மனைவி கேரல் ஆகியோர் ஆண்டவருக்காகத் தங்களை ஒப்புவித்திருந்த அருட்பணி தம்பதிகள் ஆவர். இத்தகைய தேக்கநிலை இவர்கள் ஊழியத் திலும் காணப்பட்டது.

இவர்கள் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள செநெகல் (Senegal) என்ற பகுதியில் ஊழியத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்களை ஊழியத் தலத்திற்கு வழிஅனுப்பியபோது அவர்களுடைய அருமை உறவினர்களும், விசுவாச நண்பர்களும் எடுத்துரைத்த ஊக்க மூட்டும் வார்த்தைகள், அவர்களுடைய செவிகளில் ஒலித்துக் கொண்டு தான் இருந்தன. அன்று ஊழியத்தின் மேன்மையைப் பற்றி எடுத்துரைக்கப்பட்ட சிறப்பான கருத்துகளும், பாடப்பட்ட எழுச்சியூட்டும் அருட்பணி கீதங்களும் இறைப்பணி அழைப்பின் மேன்மையை அல்லவா வெளிப்படுத்திக்காட்டின? இவ்வாறு உற்சாகமூட்டி எழுப்பப்பட்ட உள்ளுணர்வுடனேயே இவர்கள் இதுவரை பொறுமையுடன் தளராமல் உழைத்து வந்தனர்.

செநெகல் என்ற பகுதிக்கு வந்த உடனே பிரஞ்சு மற்றும் வோலோப் (Wolof) மொழிகளைக் கற்பதில் அவர்கள் முனைப்பாக ஈடுபட்டனர். மேலும் அந்நாட்டு மக்களுடைய கலாச்சாரத்திற்கு ஏற்றவாறு அவர்கள் தங்கள் நடை, உடை, பாவனைகளை முற்றுமாக மாற்றிக்கொண்டனர். தாங்கள் குடியிருந்த இடத்தில் உள்ள அயலகத்தாருடன் தங்களையும் அடையாளப்படுத்திக் கொள்ளும் நோக்கில், அவர்களுடன் நட்புறவுக்கொண்டு பழகினார்கள். தங்களால் இயன்ற அளவு எல்லாவித முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தார்கள். இவர்களின் நோக்கமும் கருத்தும் எவ்வகையிலும் சிலரையாகிலும் கிறிஸ்துவண்டை கொண்டுவந்துவிட வேண்டும் என்பதாகவே இருந்தது. அவர்கள் தெரிந்துகொண்ட இப்பாதை சுலபமானதாக இருக்கவில்லை. அருட்பணி ஊழியம் எளிமையானதல்ல என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்; கஷ்ட நஷ்டங்களை எதிர் நோக்கியே அவர்கள் இந்த ஊழியப்பாதையைத் தெரிந்தெடுத்திருந்தனர். செநெகல்லின் வடக்கில் உள்ள பாலைவனப் பகுதியிலுள்ள மக்களைச் சந்தித்து தனித்தனியாகக் கர்த்தரைக் குறித்துப் பேசியும், வேதாகம நூல் பகுதிகளை வழங்கியும் சுவிசேடப்பணியைப் பால் தொடங்கலானார். சில ஆண்டுகள் இவ்வாறு சென்றன. பின்னர் மக்கள் இடையூறு இன்றி தனிமையில் நல்ல நூல்களைப் படிப்பதற்கு வசதியாக ஒரு படிப்பகத்தை (Book Room) அவர்கள் திறந்து வைத்தனர்.

ஆயினும் அவர்களுக்கு ஒரு தடை இருந்தது. அங்கு வாழ்ந்து வந்த மக்களில் 98 விழுக்காடு இஸ்லாமிய மக்களாவர். அருட்பணியாளர் கடினமாக உழைத்தும், பல இடங்களில் திருவசனத்தை விதைத்தும், ஒருவராகிலும் மனந்திரும்பி வரவில்லை. இரண்டு ஆண்டுக் காலமாக பிரயாசத்துடன் உழைத்தும், பார்க்கக்கூடிய வகையில் பலன் ஏதும் கிட்டவில்லை. தாங்கள் கர்த்தர் வைக்க விரும்பிய இடத்தில்தான் இருக்கிறோமா என்ற ஐயம் அவர்கள் உள்ளத்தில் எழ ஆரம்பித்தது.

இத்தகைய கடினமான சூழலே அடுத்த மூன்று ஆண்டுகளுக்கும் நீடித்தது. ஒருவராகிலும் மனந்திரும்பி வரவில்லை. விதைத்த விதைகள் கற்பாறையான நிலத்தில் விழுந்தன. கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிப்புக்கு அதிகமான எதிர்ப்பும் இருந்தது. இந்நிலையில் அவர்கள் தங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறித் தள்ளிவிட்டு, வேறோர் இடத்திற்குச் சென்றுவிடலாமா

என்ற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் எழுந்தது. அவ்வாண்டின் ஆகஸ்டு மாதமும் வந்தது. மிக நெருக்கடியான நிலையில் காரியங்கள் சென்றுகொண்டிருந்தன. தளர்ச்சியும் சோர்வும் அவர்களைத் தாக்கின. அவர்களுடைய அருட்பணி வாழ்க்கையில் இதுவரை சந்தித்திராத அளவு குழப்பங்களும், போராட்டங்களும் மிகுந்தன. அருட்பணி தம்பதியினரான இவர்கள் அதிகமாகத் தொய்ந்து போய் இருந்தனர்.

"நான் விருதாவாய் உழைக்கிறேன், வீணும் வியர்த்தமுமாய் என் பெலனைச் செலவழிக்கிறேன்" (ஏசாயா 49:4). என்ற இறை வசனம் அவர்களுடைய அன்றைய நிலையாக இருந்தது. தாங்கள் தொடர்ந்து இப்பகுதியிலேயே தங்கி ஊழியம் செய்ய வேண்டுமாயின், கர்த்தர் தங்களுக்குத் தெளிவான ஓர் அடையாளத்தைக் காட்டவேண்டும் என்று அவர்கள் உள்ளம் ஏங்கினது; இல்லையேல் வேறு ஓர் இடத்தைத் தெரிந்தெடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாக அவர்கள் உணர்ந்தனர்.

இந்நிலையில் பால் தனது தினக்குறிப்பேட்டில் இவ்வாறு எழுதினார். "இப்பொழுது இரவு 11.40; நான் கர்த்தருடன் சில மணிநேரம் செலவிடவேண்டும். இன்றிரவு உறுதி அளிக்கக் கூடிய ஏழு வார்த்தைகளைக் கர்த்தர் எனக்கு நல்க வேண்டும்". சில தினத்தியான நூல்கள் அடுக்கி வைத்திருந்த அலமாரியின் முன் அமர்ந்திருந்த பால் பிராம்சன், "ஆண்டவரே! நீர் என்னை உற்சாகப்படுத்த வேண்டும். நான் இங்கொன்றும் அங்கொன்றுமாக ஏழு பகுதிகளை எடுத்து வாசிக்கப் போகிறேன். நீர் என்னுடன் பேசும்படி வேண்டுகிறேன். நீர் கொடுக்கப்போகும் வார்த்தைகளை நான் பதிவுசெய்து வைக்கப் போகிறேன்" என்று ஜெபித்தார்.

இங்கொன்றும், அங்கொன்றுமான வேத பகுதிகளை எடுத்து படிக்கும் முறை தேவனைக் கனப்படுத்தாது என்று பால் அறிந்திருந்தார். ஆயினும் இப்பொழுது உள்ள இக்கட்டான நிலையில், இறை சத்தத்தைக் கேட்க வேண்டும் என்ற மன உறுதியுடன் இருக்கும் இவ்வேளையில், தனது பெலவீனத்திற்கு ஏற்றவாறு, ஒருவேளை தேவன் இறங்கி உதவக்கூடும் என்று அவர் கருதினார். கர்த்தர் தனக்குக்கூறுவதை எழுதிப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் தனது தினக் குறிப்பு ஏட்டை எடுத்து வைத்துக்கொண்டார்.

சுமார் இரண்டு மணிநேரம் பால் தேவ சமூகத்தில் செலவிட்டார். சில வேதப் பகுதிகளைப் படித்தார். ஒவ்வொரு பகுதியைப் படிப்பதற்கு முன்னும் பின்னும் தேவனை நோக்கி ஆராதிக்கவும், ஜெபிக்கவும் நேரம் எடுத்துக்கொண்டார். இச்சமயத்தில் இந்த ஊழியனுக்கு நிகழ்ந்த நிகழ்வுகளை ஒவ்வொன்றாக நாம் காணலாம்.

பால் தனது கரத்தில் எடுத்த முதல் புத்தகம், "என் நேசரே நீர் வாரும்" என்பது. அவர் அதைத் திறந்தார். அப்பகுதி " பிந்தினகால அருள் பொழிவு" என்ற அத்தியாயம். அந்தப் பகுதியின் கருப்பொருள், "நீ தொடர்ந்து பணியாற்று, வெற்றி கிட்டுவது உறுதியே". இவ்வார்த்தைகள் அவருடைய தலையை வலுவாகக்குட்டின. இவ்வாலோசனை அவர் உள்ளத்தை அதிகமாகப் பாதித்தது.

அவர் எடுத்த இரண்டாம் புத்தகம், "நீர் கொடுக்க அவர்கள் சேகரித்தனர்" என்பதாகும். அதில் "அவ்வாறே நானும் ஜெயம் பெற்றேன்" என்ற வாசகம் அவர் உள்ளத்தில் ஆழமாகக் கிரியை செய்தது. "தேவ கிருபையால் வெற்றி பெறுவது உறுதி " என்ற பகுதி அவருடன் பேசிற்று. இதனை பால் தனது குறிப்பேட்டில் குறித்துக்கொண்டார்.

அடுத்ததாக மெக்கின்டொஷ் (C. H. Machintosh) எழுதிய "சிறிய கட்டுரைகள்" என்ற நூல். "தேவனுடைய நித்திய உடன்படிக்கை நம்மைத் தொடர்ந்து உற்சாகப்படுத்தி வருகிறது" என்பதே அவர் படித்தப்பகுதியின் கருப்பொருள். தேவன் மெய்யாகவே நம்முடைய வாழ்வில் இடைபடுவார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக யாவருடைய முழங்கால்களும் முடங்கும். நாம் தோல்வியடைந்தாலும், தேவன் நம்மைக் கைவிடார் என்ற வார்த்தைகள் அவருக்கு அதிகமாக ஊக்கமளித்தன.

அவர் எடுத்த அடுத்த புத்தகம், நமது தமிழ் நாட்டில் பணியாற்றி, அநேக அனாதைப் பெண்களுக்கும் தேவதாசிகளுக்கும் வாழ்வளித்த டோனாவூர் ஏமி கார்மைக்கல் அம்மையார் எழுதிய "முட்செடியில் முளைத்த ரோஜா" என்பது. "என் ஆத்துமாவே! இதனை நீ ஏற்றுக்கொள். கூர்மையான முட்களையும், எல்லா விதத் துக்கங்களையும் விருப்புடன் ஏற்றுக்கொள் . . . இவை ஒன்றையும் வேண்டாம் என்று சொல்லாதே" என்று அதில் எழுதியிருந்தது. இத்தகைய ஊக்கமளிக்கும் வார்த்தைகள் அவர் படித்த பகுதிகளில் காணப்பட்டன. அவை அவருடன் உரக்க பேசின.

*புகழ்பெற்ற எழுத்தாளர் ஆண்ட்ரு முர்ரே (Andrew Murray) எழுதிய, "தேவனை நோக்கிக் காத்திருத்தல்" என்ற நூலை பால் அடுத்ததாக எடுத்தார். "கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" (சங்கீதம் 37:7,9) என்ற திருவசன மேற்கோள் அவர் கண்களில் பட்டது. இவ்வசனத்திற்கு அதில் கொடுத்திருந்த விளக்கம் இது:*

நாம் சந்திக்கிற மனிதர்களிடத்திலும், சூழ்நிலைகளிலும் நாம் பொறுமை இழந்து விடுகிறோம். இத்தகைய நிலை நாம் மெய்யாக தேவனிடம் பொறுமையற்று இருக்கிறோம் என்பதையே காட்டுகிறது. நாம் வேண்டிக் கொள்ளும்போது தேவன் எப்பொழுதும் உடனடியாக பதில் கொடுப்பதில்லை அல்லது நாம் எதிர்பார்க்கும் விதத்திலும், அதே வேகத்திலும் அவர் செயல்படுவதில்லை.

நாம் பொறுமை இழந்துவிடுகிறேம். தேவனுக்கு நாம் காத்திருக்கும்போதே அவருடைய ஞானமும் அதிகாரமுள்ள திருச்சித்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறு நம்முடைய கண் திறக்கப்பட்டு, இருதயத்தில் பக்குவமடைகிறோம். அவருடைய ஒப்பற்ற சித்தத்திற்கு நிபந்தனையின்றி உடனடியாகவும், முழுமையாகவும் ஒப்புக்கொடுக்கும்போதே இறை ஆசிர்வாதம் நம்மீது வந்து தங்கும். நாம் அவரில் தரித்திருந்து, அவரையே முற்றுமாக சார்ந்திருந்து, அவருக்கே மகிமையைச் செலுத்தவேண்டும். இவ்விதப் பொறுமையே தேவனைக் கனப்படுத்தும். இந்நிலையே, விண்ணுலக ஆசனத்தில் வீற்றிருக்கும் தேவன், நாம் செய்யவிரும்பும் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்ற அதிகாரத்தையும் விடுதலையையும் கொடுக்கிறது. இத்தகைய அர்ப்பணமே, சர்வாதிகார இறைமையை தேவனுக்கு வழங்குகிறது. நீங்கள் ஒரு விண்ணப்பத்துடன் வந்திருப்பீர்களாகில், தொடர்ந்து பொறுமையுடன் அவருக்குமுன் அமைதியாகக் காத்திருங்கள்.

*இவற்றைப் படித்தபோது நமது அருட்பணியாளர், "ஆண்டவரே! இது அதிக ஆச்சரியமாக இருக்கிறது, நீர் என்மேல் மிகவும் கிருபையுள்ளவராக இருக்கிறீர். எனக்குத் தேவையான ஆலோசனைகளை அருளியிருக்கிறீர்" என்று அறிக்கை செய்தார்.*

*ஆயினும் தேவன் பேசுவதை இத்துடன் முடித்துவிடவில்லை. ஆறாவதாக அவர் எடுத்த நூல் ஆண்ட்ரு முர்ரே எழுதிய "கிறிஸ்துவின் ஆவியானவர்" என்பதாகும். அதன் 164-ஆம் பக்கத்தை வாசிக்க ஆரம்பித்த பால் இன்னும் அதிகமாக ஆச்சரியமடைந்தார்.*

"தூரமான பணித்தளங்களில் இருந்து இதை வாசிக்கும் அருட்பணியாளர்களுக்கும், பிற சகோதரர்களுக்கும் நான் எழுதுவது யாதெனில்; 'சகோதரரே! திடன்கொள்ளுங்கள் தேவனுடைய மகத்துவமான வல்லமையாகப் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். அவரே கர்த்தர்; இயேசு கிறிஸ்துவிற்குப் பதில் ஆளாக அவர் உங்களுக்குள் தங்கியிருக்கிறார். இந்த ஆவியானவரே உங்களுக்குள் தங்கியிருக்கிறார். இந்த ஆவியானவரே உனக்குள்ளும் உன்னுடனும் தங்கியிருக்கிறார். இந்தத்திருப்பணி அவருடையது. அதை அவரிடமே ஒப்புவி. அவருக்காகக் காத்திரு, இந்த ஊழியம் அவருடையது, அவரே அதை நிறைவேற்றுபவர்".

*இதைப் படித்த பால் "அல்லேலுயா" என்று முழங்கினார். "தூரமான பணித்தலங்களிலிருந்து இதை வாசிக்கும் அருட் பணியாளர்கள்" என்ற வாசகம் தனிப்பட்ட முறையில் அவருக்கு நேரடியாக எழுதப்பட்டதாகவே இருந்தது.*

*இறுதியாக பால் தனது வேதாகமத்தைத் திறந்தார். அவர் எடுத்த பகுதி ஏசாயா புத்தகம். அதில் 32:20-ஆம் வசனத்தின்மேல் அவர் கண்பட்டது. அவ்வார்த்தைகள் ஒளிவிட்டு அவர் முன் பிரகாசித்தன.*

"நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதைவிதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்".

*பால் இந்த வசனத்தைப் படித்தவுடன் அவருடைய இருதயம் சமாதானத் தால் நிறைந்தது. "ஆம்! இதற்கென்றே கர்த்தர் என்னை அழைத்திருக்கிறார். நீர்வளம் நிறைந்துள்ள இடங்கள். வசனத்தை மக்கள் ஏற்றுக்கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் இதற்காகவே கர்த்தர் என்னை இங்கு அனுப்பியிருக்கிறார்" என்று அவர் சிந்திக்கலாயினார். தான் பணியாற்றும் வடக்கு செநெகல் பகுதியில் குடியிருக்கும் இஸ்லாமிய மக்கள் மத்தியில் கர்த்தர் செயல்படுவார் என்று அவர் கொண்டிருந்த நம்பிக்கை அச்சமயத்தில் அவருக்கு உறுதியாயிற்று.*

*இப்பொழுது இவற்றைப் படிக்கும் உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம். இறைப்பணியாளன் பால் பிராம்சன் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கை சரியானதுதானா? அல்லது தவறான ஒன்றை அவர் நம்பி சார்ந்துகொண்டாரா? எது இவற்றில் உண்மை என்பதை இதன் பின்னர் நடந்த விவரங்கள் நமக்கு உறுதிசெய்கின்றன.*

பால் தேவனோடு உறவாடிய பின்னரும் சில மாதங்கள் இந்தத் தம்பதிகள் அதிக துன்பமும், வேதனையும் நிறைந்த கடினமான நாட்களைக் கடந்துசெல்ல வேண்டியிருந்தது. ஆயினும் 1987-ஆம் ஆண்டில் படிப்படியான மாற்றம் உருவாகத் தொடங்கியது. அவர்கள் செநெகல் வந்து ஊழியத்தை ஆரம்பித்து ஆறு ஆண்டுகள் முடிந்துவிட்டன. இப்பொழுது அறுவடையின் நாட்கள் சிறிது சிறிதாக ஆரம்பமாயின.

1987-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வந்தது. புருனோ (Bruno) என்ற பெயருடைய பிரான்ஸ் நாட்டு வாலிபர் தனது கையில் ஒரு சிறிய நீலநிற வேதாகமத்துடன் பால் வைத்திருந்த படிப்பகத்திற்கு வந்தார். இவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்க கிறிஸ்தவர். குடியிலும் கும்மாளத்திலும் திருப்தி அடையாத இவர் தனது வாழ்க்கை மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதாக உணர்ந்தார். முழுமையான திருப்தியுள்ள வாழ்க்கையை நாடி ஏங்கிய அவர், அதனைக் கண்டடைய இந்தியாவுக்கு சென்றார்.

இந்து, இஸ்லாம் மற்றும் பிற சமயங்களில் சத்தியத்தைத் தேட ஆரம்பித்தார். இதற்காக பல சமயத் தலைவர்களைச் சந்தித்து உரையாடினார். இறுதியில் "இந்த மக்கள் அனைவரும் தன்னைக் காட்டிலும் அதிக பரிதபிக்கத்தக்க நிலையிலேயே இருக்கிறார்கள்" என்பதை அவர் கண்டு பிடித்தார். இத்தகைய சூழலில் அவர் கல்கத்தா நகரில் சுற்றித் திரிந்துகொண்டிருந்தபோது, எதிர்பாராத வகையில் ஒரு வேதாகமம் விற்கும் கடையைப் பார்த்தார்.

"சிந்தை ஏதுமின்றி, பிரஞ்சு மொழி வேதாகமம் இருக்கிறதா?" என வினவினார். அவர்கள் தங்களிடம் ஒரே ஒரு பிரஞ்சு மொழி வேதாகமம் இருப்பதாகக்கூறினர். அதை வாங்கி சுமார் 9 மாதங்கள் இந்தியாவில் தங்கிய பின்னர் அவர் ஆப்பிரிக்கா கண்டத்திற்கு வந்தார். இந்நாட்களிலெல்லாம் அவர் தாம் வாங்கிய வேதாகமத்திலிருந்து தினமும் ஒரு பகுதியை வாசித்து வந்தார். "ஆண்டவரே என்னைச் சத்தியத்திற்கு நேராக நடத்தும். பொய்யானவைகளிலிருந்து என்னை விலக்கிக் காத்தருளும்" என்று ஜெபித்து வந்தார்.

இவ்வாறு அவர் சுற்றித்திரிந்து வந்த பயணம் செநெகலில் பால் வைத்திருந்த படிப்பகத்தில் முடிவுற்றது. இங்கு அவர் ஊழியர் பாலுடன் பல நாட்களாக உரையாடி, இறை வசன உண்மைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

இங்கிருந்து அவர் புறப்படும் போது பாலிடம், “நான் புரிந்து கொள்ளாத இன்னும் சில காரியங்கள் உள்ளன. ஆயினும் ஒரு காரியத்தை உறுதியாக நான் சொல்ல முடியும். நான் கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிறேன். நான் என் சொந்த நாடான பிரான்ஸ்சுக்குச் சென்றவுடன், ஏழு மாதங்களுக்குள் உங்களுக்கு கடிதம் எழுதுவேன்” என உறுதிகூறி விடைப்பெற்றார்.

இருப்பினும் ஆறு வாரங்களுக்குள் பாலுக்கு ஒரு கடிதம் வந்தது. “நான் இப்பொழுது நீங்கள் குடியிருக்கும் இடத்திலிருந்து ஒன்றரை மணிநேர பயணத் தொலைவில் இருக்கிறேன். தாங்கள் கூறிய அறிவுரையின்படியே, பழைய ஏற்பாட்டைப் புதிய ஏற்பாட்டுடன் ஒப்பிட்டு படித்து வந்தேன். தீர்க்கதரிசன உரைகள் அனைத்திற்கும் மெய்ப்பொருளாக இருப்பவர் கிறிஸ்து என்பதை நான் தெளிவாகக் கண்டுகொண்டேன். ஆகவே அவர்மீதே நான் என் முழு நம்பிக்கையையும் வைக்கிறேன். சுருங்கக்கூற வேண்டுமானால், நான் இப்பொழுது மறுபடியும் பிறந்திருக்கிறேன்” என புருனோ அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தார். தான் இரட்சிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குப் பின்னர் இவர் ஞானஸ்நானத்தில் சாட்சியும் கொடுத்தார்.

செநெகலில் அந்தோனி என்ற ஒரு கத்தோலிக்கர் வசித்து வந்தார். புருனோ ஞானஸ்நானம் பெற்றபோது, அவரும் கூடவே இருந்தார். இதையடுத்து ஒரு வாரத்திற்குள்ளாக இந்த அந்தோனியும் மனமாற்றம் அடைந்து ஆச்சரியமான முறையில் இரட்சிப்பைப் பெற்றார்.

இக்காலகட்டத்தில் மாலிக் (Malick) என்னும் பெயருடைய இஸ்லாமிய இளைஞன் ஒருவனைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பைக் கர்த்தர் பாலுக்குக் கொடுத்தார். இவர் பாலுக்கும் அவர் மனைவி கேரலுக்கும் ஆண்டவர் அருளிய பெரும் பேறு. இந்த மாலிக் சத்தியத்தை மனதாரத் தேடிக் கொண்டிருந்த ஒருவர்.

ஊழியர் பால் கொடுத்த ஆலோசனையின்படி இந்த மாலிக் வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தார். இதில் அவர் கண்ட உண்மை யாதென்றால், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் அனைவரும் இயேசு கிறிஸ்துவையே குறித்துக் காட்டியுள்ளனரே தவிர, அவர்களில் ஒருவராகிலும் முகமது நபியைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதாகும். இவ்வாறு மாலிக்கும் கர்த்தராகிய

இயேசு கிறிஸ்துவை தனது ஆண்டவராக ஏற்றுக் கொண்டார். மிகவும் தெளிவான முறையில் மறுபிறப்படைந்து இரட்சிக்கப் பட்ட மாலிக், பின்னர் பால் ஆரம்பித்து நடத்திவந்த "வானொலி சுவிசேஷ நிகழ்சியில்" தேவசெய்தியைக் கொடுத்து வருகிறார்.

இன்று இந்த வானொலி நிகழ்ச்சி செநெகலில் உள்ள ஏழு நிலையங்களிலிருந்து ஒலிபரப்பப்பட்டு வருகிறது. இந்த வானொலி நிலையங்கள் யாவும் இஸ்லாமியர்க்கு சொந்தமான வையும், அவர்களாலேயே இயக்கப்பட்டு வருபவைகளுமாகும்.

புருனோவின் மனமாற்றத்திற்குப் பின்னர், இரண்டு ஆண்டுகளுக்குள் மேலும் எட்டுபேர் கர்த்தர் இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டனர். இது பால் தம்பதியருக்கு மிகவும் மனநிறைவைக் கொண்டுவந்தது. கர்த்தர் தமது திருப் பெயருக்கென்று அப்பகுதியிலிருந்த ஒரு சில மக்களை அழைத்துச் சேர்ப்பதற்கேற்ற வேளை வந்துவிட்டது. இதிலிருந்து செநெகலில் கர்த்தருடைய ஊழியம் சிறிது சிறிதாக வளர்ந்து முன்னேறி வருகிறது.

1986-ஆம் ஆண்டு ஆகஸ்டு 27-ஆம் நாளின் இரவில் பால் வாசித்த அந்த ஏழு பகுதிகளின் மூலம் தேவன் நேரடியாகப் பாலிடம் பேசினார். அவர் கூறிய வண்ணமாகவே அனைத்தும் நிறைவேறின. அவையாவன:

- சோதனைகளைக் கண்டு திகையாதே! தொடர்ந்து உழை, வெற்றி உறுதி.
- நாம் தவறினாலும் தேவன் நம்மைக் கைவிடார்; முழங் கால் யாவும் அவருக்குமுன் முடங்கும்.
- தேவன் உனது வாழ்வில் அனுமதிக்கும் அனைத்தையும் ஏற்றுக்கொள்.
- தேவன் தனக்குரிய தன் அதிகாரத்துடன் செயலாற்ற அவருக்கு இடங்கொடு.
- கர்த்தர் ஒருவருக்கே பெறுமையுடன் காத்திரு.
- இவ்வூழியம் கர்த்தருடையது, இதை நம்பி அவருக்கே ஒப்புவி. ஜெபித்திருந்து காத்திரு!
- தொடர்ந்து விதைத்துக்கொண்டிரு, அறுவடை ஆசிர் வாதம் விரைவில் வரும். MM

# 13

# இரட்சிப்பும் நீண்ட ஆயுளும்

ஸ்காட்லாந்து நாட்டிலுள்ள லூயிஸ் என்ற தீவில் 1922-ஆம் ஆண்டு இச்சம்பவம் நடைபெற்றது. தன் கணவர் அலுவல் நிமித்தம் மாசசுசெட்ஸ் (Massachusetts) நகரில் இருக்க, ஜெசி மெக்டொனால்டு அம்மையார் இரு குமாரர்களாகிய ஈயான் மற்றும் வில்லியம் ஆகியவர்களோடு, திருமணமாகாத தன் சகோதரிகள் வசித்து வந்த இத்தீவில் தங்கியிருந்தார். இதற்கு முன்னர் ஒரு கிறித்தவ ஊழியர் தங்கியிருந்த பழைய வீட்டில் இவ்வம்மையார் தன் இரு மக்களுடன் வாழ்ந்து வந்தார்.

அவ்வாண்டில் அம்மையாரின் சிறிய மகன் ஐந்து வயது நிரம்பிய வில்லியமை டிப்தீரியா (Diphtheria) என்ற உயிர்க்கொல்லி நோய் தாக்கியது. இவ்வியாதி பொதுவாக மரணத்திலேயே முடிவுறும். குழந்தைகளுக்கு இத்தகைய வியாதி பீடிக்கப்படாதபடி தடுப்பு ஊசிபோடுவதால் அவ்வியாதி இன்று கட்டுக்குள் இருக்கிறது. நாம் நன்றிகூறி மகிழும்படியாக இக்கொடிய நோய் இன்று அழிக்கப்பட்டுவிட்டது. இன்றைய மருத்துவர்களும் இத்தகைய வியாதிக்கு சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. இதற்கு நாமனைவரும் கடவுளுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சிறுவன் வில்லியமின் நிலை மிக மோசமாகவே இருந்தது. அருகில் மருத்துவமனை ஏதும் இல்லை. இவ்வியாதியைக் குண

*மாக்கக்கூடிய மருந்தும் அன்று இல்லை. நம்பிக்கையற்ற நிலையில் சிறுவன் இருந்தான். தொண்டைக்குழியில் ஒரு கட்டி உருவாகி நுரையீரலுக்குக் காற்று செல்லாதபடி அவன் துடித்துக் கொண்டிருந்தான். இக்காட்சியைக் காணச் சகிக்காதவளாய் தாய் அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள். சோகத்தில் மூழ்கிய அவள், வேறு பக்கமாகத் திரும்பிக்கொண்டாள்.*

*இத்தகைய இக்கட்டான நேரத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது. அருகிலுள்ள கிராமத்தில் வசித்து வந்த அவளுடைய மைத்துனர் முர்டோ மெக்டொனால்டு அங்கு வந்திருந்தார். அவர் ஒரு கிறித்தவ விசுவாசி. தேவனோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தவர். அவர் கர்த்தருக்கு பயந்து வாழ்கிறவர்களுக்கு அருளப்பட்டிருக்கும் வாக்குகளின் இரகசியங்களை அனுபவித்து இன்புறுபவர் (சங்கீதம் 25:14).*

*தனக்கு மனத்துக்கமும் பாரமும் அதிகமாக இருந்தும், ஸ்காட்லாந்து நாட்டு வழக்கத்தின்படி விருந்தினரை உபசரிக்கும் வகையில் அத்தாயார் சீக்கிரமாக அவருக்கு ஒருகோப்பை தேநீர் தயாரித்து பரிமாறினார். தேநீர் பரிமாறிய மேசையின் முன் அமர்ந்திருந்த அவ்விருந்தினர், தன்னுடைய இல்லத்தில் அந்நாட்டு வழக்கத்தின்படியே அனல்மூட்டும் நெருப்புக்கு முன் அமர்ந்து வேதத்தை வாசித்துக்கொண்டிருந்தபொழுது தேவன் தம்மோடு பேசினதாகக் கூறினார். அவர் 91-ஆம் சங்கீதத்தை வாசித்துக்கொண்டிருந்தபொழுது அதன் கடைசி வசனத்தின் மூலம் தேவன் தன்னிடம் மிகத்தெளிவாக பேசியதாக விவரித்தார்.*

> "அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக் கலத்திலே வைப்பேன்; அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன். ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்."

*இச்சங்கீதத்திலிருந்த இவ்வாக்குத்தத்தத்தை அம்மையாரின் மைத்துனர் உறுதியாகப் பற்றிக் கொண்டார். "நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்" (சங்கீதம் 91:16).*

அத்தகைய ஆபத்தான சூழலில் சிறுவன் வில்லியம் நீண்ட நாட்களாக வாழ்ந்து, இரட்சிக்கப்படுவான் என்று நம்புவதற்கு மனித சிந்தை சற்றேனும் இடம் கொடுக்கக் கூடியதாக இல்லை. இக்கட்டான நேரம் கடந்து கொண்டிருந்தது. விசுவாசத் தந்தை ஆபிரகாமைப் போன்று, விசுவாசத்தில் வல்லவராக இருந்த மைத்துனர் முர்டோ தேவனை மகிமைப்படுத்திக்கொண்டிருந்தார். வில்லியம் இக்கொடிய டிப்திரியா வியாதியிலிருந்து உயிர் பிழைப்பான் என்றும், ஒரு நாளில் அவன் இரட்சிக்கப்படுவான் என்றும் உறுதி கூறினார்.

சிறுவன் வில்லியம் சாகாமல் பிழைத்தானா? அவன் மறு பிறப்படைந்து இரட்சிக்கப்பட்டானா? ஆம்! மருத்துவ முயற்சி ஏதுமின்றி அற்புதமான தெய்வீகச்செயலால் வில்லியம் சுகம் பெற்றான். இதையடுத்து பதின்மூன்று ஆண்டுகள் கடந்தன. கர்த்தர் இயேசு கிறிஸ்துவின்மேல் வைத்த விசுவாசத்தால், கிருபையாக வில்லியமாகிய நான் இரட்சிக்கப்பட்டேன். இதை எழுதும் பொழுது எனக்கு வயது 83*. உண்மையிலேயே இது ஒரு நீண்ட ஆயுள் அல்லவா!

தேவன் வாக்கு அருளியபடியே அவர் நீண்ட ஆயுள் கொடுத்து, என்னை இரட்சிப்பினால் திருப்தியாக்கியிருக்கிறார். வாக்கருளிய தேவன் உண்மையுள்ளவர். அவருக்கே துதியுண்டாவதாக! MM

* திரு. வில்லியம் மெக்டொனால்டு அதற்குப் பின்னும் ஏழு ஆண்டுகள் உயிர்வாழ்ந்து 2007 -ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று தமது 90 -ஆம் வயதில் மகிமைக்குள் பிரவேசித்தார்.

# 14

# மயிரிழையில் தப்பினான்

ஓர் அருமையான கிறித்தவக் குடும்பத்தில் டென்னிஸ் பிறந்தான். அவன் இறைபக்தியில் வளர்க்கப்பட்டான். அவன் வீடு நியூ பர்ன்ஸ்விக் என்ற ஊரில் இருந்தது. இளம் பருவம் முதல் திருமறையின் அடிப்படைச் சத்தியங்கள் அனைத்தும் அவனுக்குப் போதிக்கப்பட்டன. ஆதலால், கர்த்தராகிய கிறிஸ்து ஏன் சிலுவையில் மரித்தார் என்று கேள்வி கேட்டால், அவன் அதற்குச் சரியான பதிலைத் தெரிவிப்பான். சிறுவனாக இருந்தபோதே நான் ஒரு பாவி என்றும், இரட்சகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசியாமல் மரித்தால் நித்திய நரகம் செல்வேன் என்றும் மனதார ஒப்புக்கொண்டவனாக இருந்தான். அவனுக்கு ஏழு வயது ஆனபோது ஆண்டவர் இயேசுவை அவன் விசுவாசிப்பதாக அறிக்கையிட்டான். ஆயினும் பின் நாட்களில் சிந்தித்துப்பார்த்து அது உண்மையான மனந்திரும்புதல் அல்ல என்பதை உணர்ந்தான். அடிப்படை போதனையில் அவன் தெளிவான அறிவுடையவனாக இருந்தான். ஆயினும், அனுபவத்தில் அவன் தன்னை ஆண்டவருக்கு முற்றிலும் அர்ப்பணிக்காதவனாகவே வாழ்ந்து வந்தான்.

அவன் உயர்நிலைப்பள்ளியில் பயின்று வந்த நாட்களில், பள்ளி ஹாக்கி விளையாட்டு அணி ஒன்றை உருவாக்கினான்.

உலக மக்களுடன் அதிகமாக ஒத்துப்போகக்கூடிய சூழலுக்குள் இது அவனை இழுத்துச்சென்றது. தான் அறிந்திருந்த நேர்மையான பாதையை விட்டு விலகி, தன் கூட்டாளிகளோடு சேர்ந்து மது பானத்துக்கு அவன் அடிமையானான். போதை மருந்துகளைப் பயன்படுத்தவும் தொடங்கினான். மற்றவர்களுக்கு இது சாதாரண வாழ்க்கையாகக் காணப்படினும், டென்னிசைப் பொருத்தவரை இது நரகை நோக்கிச்செல்லும் விசாலமான பாதையே என்ற உணர்வு அவனைத் தொடர்ந்து ஆட்கொண்டு வந்தது. இது அவனுடைய கிறிஸ்தவ மகிழ்ச்சியை தணிந்துபோகச் செய்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சபையை எடுத்துக்கொள்ள சடுதி யாக வருவாரல்லவா? அப்பொழுது நான் கைவிடப்படுவேனே என்ற பயம் அவனைப் பிடித்துக்கொள்ளும். அத்தகைய தருணங்களில் தன் வீட்டில் பெற்றோர் நடமாடும் சத்தத்தைக் கேட்பது அவனுக்கு ஆறுதலைத் தந்தது.

அவன் மேல்நிலைப் பள்ளி மாணவனாக இருந்தபோது, கனக்டிகட் என்ற இடத்திலிருந்த திரு இருதய பல்கலைக் கழகத்தி லிருந்து ஹாக்கி விளையாட்டிற்கான உதவித்தொகை கிடைத்தது. தன் வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்வதற்கு இது நல்ல தருணமாக இருக்கும் என்று அவன் எண்ணினான். ஆயினும் அவனுக்கு இது நல்லதொரு விருப்பமாக மட்டுமே அமைந் திருந்தது. அவன் தப்பித்துக்கொள்ள முடியாத ஓர் இக்கட்டான வலையில் சிக்கியிருந்தான்.

அவனும் அவனுடைய நண்பர்களும் போதையில் இருந்த வேளைகளில், அவன் தன் வேதாகமத்தை எடுத்துக்கொள்வான். இறைவனின் இரட்சிப்பின் திட்டத்தை தன் நண்பர்களுக்கு எடுத் துக்கூறி அவர்கள் அனைவரும் எவ்வாறு நரகத்தை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறார்கள் எனக் கூறி பயமுறுத்துவான். அக்கறையற்ற நிலையில் இதைக் குறித்து அவன் ஏளனமாகப் பேசுவான். ஆயினும், தேவன் அவனோடு பேசி, அவனை ஆட் கொள்ள முயன்றுகொண்டிருந்தார் என்பதே உண்மை. அவனைக் குறித்து ஒரு கிறிஸ்தவ நண்பர் இவ்வாறு கூறினார். "ஒரு சுவிசேஷ பிரசங்கியின் மகன் என்ற நிலையில் டென்னிஸ் இரட்சிப்பைக் குறித்த எல்லாச் சத்தியங்களையும் அறிந்தவனாக இருந்தும், அவன் இயேசுவை ஆண்டவராக அனுபவிக்கவில்லை. அவன் நரகத்திற்கு ஓரடித் தூரத்தில்தான் இருந்தான்".

*தன்னுடைய தீயபழக்கங்களை விடுத்து தன்னைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முயற்சியில், டென்னிஸ் நோவாஸ்கோடியா என்ற இடத்திலிருந்த அக்கார்டியா பல்கலைக் கழகத்திற்கு, தன் இறுதி ஆண்டுப் படிப்பை மாற்றிக்கொண்டான். அங்கும் உலக நண்பர்களின் கூட்டம் ஒன்று அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. இந்த நண்பர்களின் பெயர்கள் வேறுபட்டிருந்தனவே தவிர, இவர்களும் பழைய சகாக்களைப் போன்றவர்களே. கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்கள் வந்தன. அச்சமயத்தில் இரண்டு அனுபவங்கள் அவனை அதிகமாக உலுக்கின. ஒன்று சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த அவன் மீளமுடியாத கடனாளியாக இருந்தான். அடுத்தது மூன்று நண்பர்களுடன் அவன் நியுயார்க்குக்குச் சென்றபோது நடைபெற்றதாகும். அங்கு ஒரு துணிக்கடையில் அவனுக்கு பிரியமான ஆடை நிறுவனத்தின் சின்னம் பதித்திருந்த மேலாடை ஒன்றைக் கண்டான். திருச்சபை விண்ணுலகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டப் பின்னர், கடைசி நாட்களில் அந்திக் கிறிஸ்துவின் வருகையின்போது வெளிப்படும் பயங்கரமான மிருகத்தின் படமும், இவ்வுலகில் நடைபெறவிருக்கும் உபத்திரவ காட்சிகளின் படமும் அதில் பொறிக்கப்பட்டிருந்தன. இதைக் குறித்து டென்னிஸ் இவ்வாறு விவரிக்கலாயினான்.*

> "அந்த கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில் நடைபெற்ற நிகழ்வுகள் என்னை ஒரு நடுக்கமுள்ள இறுதி நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தின. என்னுடைய கடினப்பட்ட இருதயத்துடன் தேவன் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். ஆனாலும் நான் என்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்க ஆயத்தமாக இல்லை. பள்ளிக்குத் திரும்பியபின் இரண்டு வாரகாலமாக, என்னுடைய சிந்தனைகளை ஒதுக்கிக்கொண்டு என்னுடைய நினைவுகளிலிருந்து தேவனைப் புறம்பே வைக்க முயன்றுக்கொண்டு இருந்தேன். தேவன் என்னுடன் பேசவிரும்புவதை அகற்றிவைக்கும் முயற்சியில் ஒரு திருவிழாக் கொண்டாட்டத்திற்குச் சென்றேன்".

*தேவனுக்கு எதிராகப் போராடி வந்த அவன் பெலவீனமடைந்திருந்தான். அவனும் அவனுடைய சிநேகிதனும் மாலை நேரங்களில் வேதாகமத்தில் உள்ள சில சுவிசேஷப் பகுதிகளைப் படித்தும், வாழ்க்கையின் திருப்தியற்ற வெறுமையைப்பற்றிப் பேசியும் வந்தனர். அடுத்தநாள் காலையில் டென்னிஸ் ஓர் இணைய தளத்தில் கிறித்தவ உரையாடல் அரங்கு ஒன்றைக் கண்டான். தன்னுடைய அவல நிலையை அவன் எடுத்துரைத்த பொழுது அந்த அரங்கைச் சார்ந்த அறிமுகம் இல்லாத ஒரு கிறித்தவ ஆலோசகர்*

*லூக்கா 12:7-ஆம், வசனத்தைப்படித்து, ''உங்கள் தலை முடியும் கூட அனைத்தும் எண்ணப்பட்டிருக்கின்றன. பயப்படாதிருங்கள்'' என்ற கருத்தினை அவனுடன் பகிர்ந்துகொண்டார்.*

*இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிற ஒருவருக்கு சுட்டிக்காட்டுவதற்கு ஏற்ற வசனமாக இது இல்லை அல்லவா? இவ்வசனத்தில் சுவிசேஷ சத்தியம் அடங்கிய கருத்துகள் ஏதும் இல்லை. யோவான் 3:16, ரோமர் 10:9 போன்ற வசனங்கள் இத்தகைய சந்தர்ப்பங்களில் மிகப்பொருத்தமாக இருந்திருக்கும் அல்லவா? ஆயினும் டென்னிசனுக்குஅவ்வாறு இல்லை. லுக்காவில் உள்ள இந்த வசனமே அவனுடன் உரக்க, அழுத்த மாகப் பேசிற்று. இதைக்குறித்து அவன் நினைவுகூருவதாவது:*

''ஆண்டவர் இயேசு என்னை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறார் என்ற சிந்தனை என்னை ஆட்கொண்டது. இதை எண்ணி உள்ளம் பூரித்தேன். என்னைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அவர் அறிந்து வைத்திருக் கிறார். எத்தனை முறை அவருடைய அன்பை நான் நிராகரித்து விலகி யிருக்கிறேன். அப் படியிருந்தும் அவர் என்னைத் தொடர்ந்து நேசித்து என் விவரங்கள் அனைத்தையும் அறிந்துவைத்திருக்கிறார்.''

*டென்னிஸ் இப்பொழுது ஆயத்தமானான். தன்னுடைய மாமா ஒருவரிடம் அவன் நீண்ட நேரம் தொலைபேசியில் உரை யாடிய பின்னர், அவன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தான்.*

*இப்பொழுது அவனுடைய சாட்சி இதுவே:*

''கிறிஸ்து என் வாழ்க்கையை முற்றுமாக மாற்றிவிட்டார். அவர் என்னை ஒரு புதிய மனிதனாக மாற்றி விட்டார். எனக்காக இவ்வளவு அதிகமாக அன்புபாராட்டியிருக்கிற அவருடைய விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற வாஞ்சையை எனக்குள் உருவாக்கியிருக்கிறார்''.

*டென்னிஸ் ஒரு மயிரிழையில் இரட்சிக்கப்பட்டானா? நாம் அவ்வாறு கூறுவதற்கு இல்லை! ஆயினும் தலைமுடியைப்பற்றி எழுதியிருக்கும் ஒரு வேதவசனமே அவன் சரியான முடிவெடுக் கக் காரணமாயிருந்தது! அவ்வசனமே அவனை இயேசுவின் பாதத்தின்கீழ் கொண்டுவந்தது. இப்பொழுது அவனுடைய துக்கமெல்லாம் முன்கூட்டியே தன்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக்கவில்லையே என்பதுதான்.* MM

---

Adapted from Dennis LeBlanc, "Lingering on the Brink" in *Uplook Magazine*, March 1999, p. 25

# 15

# அளவுக்கு மீறிய தாழ்வு மனப்பான்மை

பில் மற்றும் டோரா டீன்ஸ் தம்பதிகள் இன்று பெல்ஜியம் காங்கோ என்று அழைக்கப்படும் பகுதியில் அக் காலத்தில் அருட்பணியாற்றி வந்தனர். "நயாக்குண்டே" என்ற இடத் தில் நடைபெற்று வந்த ஊழியத்தைப் பற்றி ஒரு பிரபல பத்திரிக்கையில் வெளிவந்த செய்தி, தேசிய அளவில் அம்மக்களுடைய கவனத்தை ஈர்த்தது.

பில் மற்றும் டோரா டீன்ஸ் தம்பதிகளின் மகள் சாலி. இவள் முற்போக்கு சுபாவம் உடையவள் அல்ல. அதிகமாக வெட்கப்படு பவள். எப்பொழுதும் சுய சிந்தையில் மூழ்கியிருப்பவள். அவளு டன் உரையாட முற்படும் தோழிகள் தோல்வியையே அடைந்தார் கள். தன் வாலிபப் பருவத்திலும் அவள் தன்னைப்பற்றி ஒரு பொருட் டாகக் கருதினதில்லை. ஆண்டவர் தன்னுடன் ஒருபோதும் பேச மாட்டார் என்ற சிந்தை கொண்டவளாகவே அவள் இருந்தாள்.

இத்தகைய தாழ்வு மனப்பான்மையோடு எம்மாவு வேதாகமப் பள்ளியில் அவள் படிக்கச்சென்றாள். அவள் உண்மையான இருதயத்துடன் வேதத்தை வாசித்து, ஜெபித்து வந்தாள். ஆயினும் அவளுக்கும் அவளுடைய ஆண்டவருக்கும் இடையே ஏதோ ஒரு தடை குறுக்கே நின்றுகொண்டிருந்தது. சில சமயங்களில் அவளுடைய தோழிகள், "இன்று கர்த்தர் என்னிடம் இந்த வேத வசனத்தின் மூலம் பேசினார்" என்று தங்கள் அனுபவத்தைக் கூறுகையில் சாலி அதைக் கேட்பாள். அவள் தன் அறைக்குச்

சென்று அத்தகைய வசனங்களைத் தன் வாழ்க்கையோடு பொருத்திப் பார்ப்பாள். ஆயினும் அவை தனக்கு எவ்விதத் திலும் பொருந்துவதாக இராது.

இத்தகைய கூட்டுப்புழு வாழ்க்கையில் அவள் அடைபட்டுக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் காலை அவள் மத்தேயு 6-ஆம் அதிகாரத்தை வாசித்துக்கொண்டிருந்தாள். அவ்வதிகாரத்தின் 24-ஆம் வசனத்தை அவள் படித்தபோது, எதிர்பாராத விதமாக ஆண்டவர் அவளுடன் பேச ஆரம்பித்தார்.

> " சாலி, நீ இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஏனெனில் நீ ஒருவரைப் பகைத்து, மற்றவரை நேசிக்கத் தொடங்குவாய். அல்லது ஒரு வருக்கு நீ உண்மையாக இருப்பாய், மற்றவரையோ நீ வெறுத்துத்தள்ளு வாய். "

சாலியினுடைய கூட்டுப்புழு வாழ்க்கைக்கும் இவ்வசனத் திற்கும் என்ன சம்பந்தம்?

நம்முடைய பார்வையில் இவ்வசனம் அவளுடைய வாழ்க் கைக்குப் பொருத்தமுடையதாகத் தெரியவில்லையாயினும், அவளைப் பொருத்தவரை அது அவளுக்குத் தேவையான செய்தி யாகவே இருந்தது. ஆண்டவர் அவளுடன் இவ்வாறு பேசினார்.

> "சாலி உன்னிடம் பாவம் இருக்கிறது. வெட்கம், கூச்சம், தாழ்வு மனம், சுய சிந்தனை இவையாவும் பாவமாகும். நீ இத்தகைய சுயத்தைப் பற்றிய சிந்தையுடையவளாக இருக்கும்போது, எவ்வாறு தேவ சிந்தனையைக் கொண்டிருக்க முடியும். இவை இரண்டும் ஒன்றுபட்டு இணைந்து செல்ல முடியாது. நீ இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யமுடியாது."

இத்தகைய வெளிப்பாடு சாலியின் வாழ்க்கையை மாற்றி அமைத்தது. இதுவரை கூச்சப்பட்டு வெட்கப்படுவதை விரும்பத் தக்க தாழ்வு மனப்பான்மை என்று அவள் கருதிவந்தாள். இப் பொழுதோ அதைப் பாவம் என்று உணர்ந்துகொண்டாள். அவள் தன்னை ஆண்டவருக்கு ஒப்புவித்து "ஆண்டவரே! என் சுயத்தைப் பற்றிய சிந்தைகளை அகற்றி, இறை சிந்தை உடையவளாக்கும். நான் எனக்குள்ளாகவே என்னைப்பூட்டி வைத்துக் கொண்டிருக் கிறேன். இந்நிலையைவிட்டு என்னால் வெளியே வர இயல வில்லை. நான் என்ன செய்வேன்?" என்று அறிக்கை செய்தாள்.

ஆண்டவருடன் அவள் கொண்டிருந்த இத்தகைய உரை யாடல் தொடர்ந்துகொண்டிருந்தது. ஆண்டவர் அவளுடன்

*மேலும் பேசினார்:*

> "சாலி, ஒருபோதும் உன்னை நீயே மாற்றிக் கொள்ள இயலாது. உன்னால் இது முடியாது; என்னால்தான் மனிதர்களை மாற்ற முடியும், நீ உன்னை என்னிடம் ஒப்படைத்து, என் பக்கமாக நீ திரும்பி வந்தால் நான் உன்னை மாற்றுவேன். இதை நீ புரிந்துகொள்."

*ஆம், சாலி தன்னை ஆண்டவருக்கு ஒப்புவித்து, தன் குறைவு களையும், பிறருடன் பழகாமல் ஒதுங்கியிருக்கும் சுபாவத்தையும் அறிக்கை செய்தபோது, ஆண்டவர் அவளை மாற்றிவிட்டார். இதற்குப் பின்னரும் பழைய வாழ்க்கையின் தழும்புகள் சில அவளிடம் காணப்பட்டன. சிறிது சிறிதாக அவையும் மறைய ஆரம்பித்தன. சிற்சில வேளைகளில் அவள் அதிகமாகப் பதட்ட மடைவாள். அச்சமயங்களில் கிறிஸ்துவின் ஆளுகையின்கீழ் தன்னை கொண்டு வர பெரிதும் முயலுவாள்.*

*மத்தேயு 6:24-ஆம் வசனத்தை அவள் தவறான முறையில் பொருள்படுத்திக் கொண்டாள் என்று ஒருவேளை சிலர் கருத லாம். அது உண்மையே. ஆண்டவர் இயேசு இங்கு எடுத்துக்கூறிய இரண்டு எஜமான்கள் தேவனும் உலகமுமாகும். ஒரு வேத வச னத்தை விளக்கும்போது அவ்வசனத்தைப் பயன்படுத்தியிருக்கும் சந்தர்ப்பச் சூழ்நிலையைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்பது மிக அவசியமே. ஆயினும் தேவன் தன் மக்கள் சிலரிடம் பேசும் போது, இத்தகைய விதிமுறைகளுக்குத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதில்லை. ஒரு வசனத்தைக் கொண்டே அவர் பலரிடம் தமது திருநோக்கத்தைப் பலவிதங்களில் நிறைவேற்றி வருகிறார். ஒரு வசனத்தைக் கொண்டு அவர் பல தொனிகளில் பேசுகிறார். வேதாகமத்தை நமக்கு அவர்தாமே எழுதிக்கொடுத்தவர். அதை அவர் தமது விருப்பப்படி பயன்படுத்த உரிமை பெற்ற இறை யாண்மை உடைய அநாதி தேவன் ஆவார்.* MM

# 16

# மரணத்திலிருந்து மீட்கப்பட்ட ஸ்டீபன்

அன்று புத்தாண்டிற்கு முந்திய தினம். பனிப்போர்வை மூடிய மலைகள் நிறைந்த ஆஸ்திரிய நாட்டு இளைஞர்களுக்குப் பனிச்சறுக்கு விளையாட்டில் அத்தினத்தை செலவிடுவதைவிட மகிழ்வைத் தரக் கூடியது வேறொன்றும் இல்லை.

மாலை 4.30 மணி, கால்வினின் வீட்டுத் தொலை பேசி அலறியது. தொலைபேசியில் வந்த செய்தி மகிழ்ச்சியூட்டும் செய்தியாக இல்லை. அவர்களது மகன் ஸ்டீபன் காணவில்லையென்பதே அந்தச் செய்தி.

ஸ்டீபன் தன் சகோதரன் யோசுவாவுடன் தங்கள் வீட்டின் அருகில் உள்ள பனி மலைத் தொடரில் சறுக்கி விளையாடச் சென்றிருந்தான். ஸ்டீபன் பனி சறுக்குப் பலகையையும், யோசுவா பனி தண்டையும் பயன்படுத்தி சறுக்கி விளையாடி கொண்டிருந்தனர். யோசுவா உச்சியிலிருந்து பாதிதூரம் சருக்கி வந்தபின், வழியில் நின்று ஸ்டீபனுக்காகக் காத்திருந்தான். வெகு நேரமாகியும் ஸ்டீபன் வரவில்லை. அவன் வழக்கமாக சறுக்கி வரும் பாதையைத் தவற விட்டிருக்க வேண்டும். ஏதோ ஒரு தவறு நடந்திருக்கவேண்டும். வேறு வழியின்றி யோசுவா தனியாக அடிவாரத்தை அடைந்தான். அவர்களுடைய தகப்பனார் கால்வின், கார்கள் நிறுத்தி வைக்கும் இடத்தில் இருந்தார். ஸ்டீபன் அங்கு இல்லை. ஆகவே அவர்கள் ஸ்டீபன் காணவில்லையென்ற செய்தியை அதிகாரிகளுக்கு அறிவித்தனர்.

ஆயினும் அதிகாரிகளோ எவ்வித அக்கறையையும் காண்பிக்கவில்லை. அன்று புத்தாண்டுக்கு முந்தைய நாள் அல்லவா? இளைஞனான அவன் தன் சிநேகிதர்களுடன் எங்கேயாவது மது அருந்திக்கொண்டிருப்பான் என்று சிலர் கருதினார்கள்; அல்லது அவன் தன் நண்பர்களுடைய வீட்டிற்குப் போயிருக்க வேண்டும். அடுத்த நாள் புத்தாண்டாக இருப்பதினால் அன்றிரவை அனைவரும் கேளிக்கையாகச் செலவிட விரும்பினார்களேயன்றி, மீட்புப்பணியில் இறங்க அவர்களுக்குச் சற்றேனும் மனமில்லை.

இச்செய்தியை ஸ்டீபனின் தாயார் அறிந்தபோது தன்னுடைய கிறித்தவ நண்பர்களை அழைத்து, தன் மகனுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அருகில் உள்ள பனிமலைத் தொடரில் இயங்கி வந்த "அவலான்சி ஆணையத்தின்" தலைவராகிய இயாஸ் என்பாருடன் அவர்கள் தொடர்பு கொண்டார்கள். இயாஸ் பனிமலை சிகரங்களில் ஏறுவதில் நல்ல பயிற்சி பெற்றவர். அவரது திறமையை யாவரும் மெச்சுவர். அதுமட்டுமின்றி, அவர் சிறந்த விசுவாசியும் கூட. அவர் வேதாகமத்தைக் கற்று அதில் தேர்ச்சி பெற்றவராகவும் இருந்தார். அந்த அன்புத் தாய் இயாஸ்சுடன் வாதாடி, எப்படியாகிலும் பனிமலையில் மீட்புப் பணி குழு ஒன்றை உடனடியாக அனுப்பும்படி வேண்டிக்கொண்டார்கள். இதன் பின்னர் பக்தியுள்ள அத்தாயார் தன் மகள் சாராளுடன் ஜெபிப்பதற்கும், வேதாகமத்தை வாசித்து, சற்று நேரம் ஆண்டவருடன் செலவிடவும் நேரம் எடுத்துக்கொண்டார்கள். ஆண்டவர் தமது வசனத்திலிருந்து நம்பிக்கையும் ஆறுதலும் அருளும் வார்த்தைகளைக் கொடுத்து பேசுவார் என்று அவர்கள் உறுதியுடனிருந்தார்கள்.

அவலன்சி ஆணையத்தின் தலைவர் இயாஸ் உடனடியாக செயலில் இறங்கினார். அவர் அருகிலிருந்த சால்ஸ்பர்க் மலைச் சிகர மீட்புப்பணிக் குழுவுடன் தொடர்பு கொண்டார். ஸ்டீபன் நம்பத்தகுந்த ஒரு இளைஞன் என்பதை இயாஸ் அறிவார்; அனாவசியமாகத் தனது பெற்றோருக்கு வருத்தத்தை வருவிக்கும் செயல்களில் அவன் ஈடுபடமாட்டான். இவ்வளவு நேரமாக காணாததால், அவன் ஏதோ ஓர் ஆபத்தான சூழலில்தான் அகப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும் என்று கருதினார்.

சீக்கிரமாகவே இருள் சூழ ஆரம்பித்தது. பனிப்பாறைச் சரிவுகள் உண்டாகி அபாயம் ஏற்படக்கூடிய காலம் அது. அன்று

மத்தியான வேளையிலும் பனிப்பாறை சரிவுகள் நிகழ்ந்திருந்தன. தீ அணைக்கும் படையினர், அல்பென்ஸ் காவல் துறையினர் ஆகியோருடன் உள்ளூர் மீட்புப் பணி குழு ஆட்களும் சேர்ந்து கொண்டனர். தேடும் பணியில் பயிற்சி பெற்றிருந்த மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டன. இந்த மீட்புப்பணி முடிவற்ற ஒரு போரட்ட மாகவே அவர்களுக்குக் காட்சி அளித்தது.

சீக்கிரமாக மின் தூக்கி ஏணியின் மூலம் மீட்புப்பணியினர் மலை உச்சியை அடைந்தனர். அங்கிருந்து சறுக்குப் பலகையின் தடங்களைக் கண்டு அதற்குப்பின் சென்றனர். ஸ்டீபன் செங்குத் தாக இருந்த வடக்குப்பகுதிக்கு சென்றிருக்க வேண்டும் என்று அவர்கள் நம்பினார்கள். அந்த செங்குத்தான பாதையில் விரை வாகச் சறுக்கி வந்து, பல அடி ஆழமுள்ள மென்மையான வெண் பனிக்குள் அவன் அமிழ்ந்திருக்கக்கூடும் என அனுமானித்தனர். மிகவும் தேர்ச்சி பெற்று, அனுபவமுள்ளவர்கள் மட்டுமே அத்தகைய செங்குத்தான பாதையை வெற்றியாகக் கடந்து வரமுடி யும். எந்நேரத்திலும் பனிப்பாறைச்சரிவுகள் ஏற்பட வாய்ப்பு இருந்ததால், தேடும் பணியும் எளியதாக இருக்கவில்லை. “வெண் மரணம்” என்று சொல்லக் கூடிய அபாயமே அவர்களுக்கும் காத்திருந்தது.

எவ்விதச் சரீர ஆபத்துமின்றி ஸ்டீபன் மீட்கப்படுவான் என்று ஒருவரும் நினைக்கவில்லை. அவனுக்கு என்ன நடந்திருக் கும் என்று எண்ணிப்பார்த்தவர்கள் அதை விவரித்துக் கூறவும் அஞ்சினார்கள். இதற்கிடையில் பல திசைகளிலிருந்து இறை மக்கள் ஸ்டீபனுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

மீட்புப் பணியாளர்களில் சிலர் வாதாட ஆரம்பித்தனர். வேறு சிலர் தேடுவதை நிறுத்திவிட்டு, காலையில் அவனுடைய சடலத்தைத் தேடி கண்டு பிடிக்கலாம் என்று ஆலோசனை கூறினர். ஆயினும் தைரியசாலிகளாக இருந்த நான்கு பேர்கள் மட்டும், துணிந்துச் சென்று, இருள் சூழ்ந்திருந்த சரிவான பகுதிக்கு இறங்கிச் சென்று தேட ஆரம்பித்தனர்.

அவ்விடத்தில் பனிப்படலம் ஆழமாக இருந்ததினால், ஸ்டீபன் கழுத்தளவான பனியில் சிக்கிக்கொண்டிருந்தான். அவனுடைய ஆடைகள் முற்றுமாக நனைந்திருந்தன. தன்னால் ஏதும் செய்யமுடியாத நிலையில் அவன் இருந்தான். இரவை

எவ்வாறு கழிப்பது? கூடுமானால் ஒரு பனிக்குகையை உருவாக்கும் சிந்தையுடன் அவன் இருந்தான்.

மீட்புப்பணியாளர்கள் அவனைக் கண்டு பிடித்தபோது, அவன் குளிரினால் உறைந்துபோய் சாகும் நிலையிலேயே இருந்தான். அன்று இரவை அவன் அந்நிலையில் கழித்திருப்பானாகில் மெய்யாகவே அவன் பிழைத்திருக்க முடியாது.

இரவு 9.30 மணி ஆயிற்று. ஸ்டீபனின் தாயார் தொலைபேசியை எடுத்தபோது, தன் மகன் கிடைக்கப்பெற்றான் என்ற செய்தி அவர்களுக்குக் கிடைத்தது.

"அவனுக்கு ஏதேனும் எலும்பு முறிவு உண்டா?" என அவர்கள் வினவினார்கள் " இல்லை! சரீர பாதிப்பு ஒன்றும் அவனுக்கு ஏற்படவில்லை. ஆயினும் குளிரில் அவன் முற்றும் உறைந்து மரிக்கும் நிலையில் இருந்தான்" என்று பதில் கிடைத்தது.

ஆம்! கர்த்தர் தன்னோடு நேரடியாகப் பேசி இருக்கிறார் என்பதை அத்தாயார் உணர்ந்துகொண்டார்கள். அவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்தபோது 34-ஆம் சங்கீதத்தைப் படித்தார்கள். 7-ஆம் வசனத்தின் மூலம் ஆண்டவர் இத்தாயுடன் பேசினார். "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சுற்றி பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார் அல்லது மீட்டுக் கொள்கிறார்". விடுவிக்கிறார் அல்லது மீட்டுக்கொள்கிறார் என்ற வார்த்தையை அவர்கள் உறுதியாகப் பிடித்துக்கொண்டார்கள்.

தன்மகன் ஸ்டீபன் மீட்கப்படுவான் என்று தேவன் அருளிய வாக்காக இதை அவ்வம்மையார் எடுத்துக் கொண்டார்கள். ஆயினும் தேவன் அவர்களிடம் மற்றும் ஒரு விவரத்தையும் கூறியிருந்தார். அச்சங்கீதத்தின் 20-ஆம் வசனத்தை அவர்கள் வாசித்தபோது, "அவனுடைய எலும்புகளையெல்லாம் அவர் காப்பாற்றுகிறார். அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை" என்றுள்ளதைக் கண்டார்கள்.

மலை அடிவாரத்தில் கார்கள் நிறுத்தியிருந்த இடத்தில் மீட்புக் குழுவினர் கூடிவந்தனர். அக்குழுவின் தலைவர் ஸ்டீபனின் தந்தையிடம், "புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் இவ்வாண்டுக் கொண்டாட்டமே மிகவும் சிறப்பானதாக இருக்கிறது. நாங்கள் உங்கள் மகனைக் காப்பாற்றியிருக்கிறோம்" என்று கூறி மகிழ்ந்தார்.

ஸ்டீபன் இப்பொழுது மிகவும் பிரபலமானவனாகி விட்டான். தன் பள்ளியில் அவன் ஒரு வீரனாகக் கருதப்பட்டான்.

பனிப்பலகை சறுக்கும் விளையாட்டை அவன் தொடர்ந்து பழகலானான். ஆயினும் அவன் இப்பொழுது ஆபத்தான பகுதிகளுக்குச் செல்வதில்லை.

தன் நாட்டின் தேசிய செய்தித்தாளின் மூலம் தன்னைக் காப்பாற்றிய மீட்புப் பணியாளர்கள் அனைவருக்கும் ஸ்டீபன் தன் நன்றிக் கடனைத் தெரிவித்துக் கொண்டான். கூடுமானவரை அவர்களை அவன் நேரில் சந்தித்தும், தன்னுடைய மனமார்ந்த நன்றியை அறிவித்தான்.

ஸ்டீபன் கதை இத்துடன் முடிவடையவில்லை. சில நாட்களுக்குப் பின் அவன் கலிபோர்னியாவுக்கு செல்லவேண்டியதாயிற்று. அங்கே அவன் ஒரு இறை ஊழியரைச் சந்தித்தான். அவர் ஆத்தும ஆதாயம் செய்வதில் நல்ல அனுபவமுள்ளவர். அவர் அவனுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மீட்பின் பணியைப்பற்றி விளக்கிக் கூறி ஒரு தீர்மானம் எடுக்கும்படி அவனுடன் பேசினார். கடந்த ஏழு ஆண்டுகளாகச் சபை கட்டடத்திற்குள் காலடி எடுத்து வைக்காதிருந்த இந்த முரட்டாட்டமுள்ள வாலிபன், இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் அடியில் வீழ்ந்து, அவரை விசுவாசிக்கலாயினான்.

தேவனுடைய கிருபைக்கு அளவுண்டோ? MM

# 17

# ஒழுக்கங்கெட்ட நடத்தையால் வந்த வினை

இன்றைய தலைமுறையினரின் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கை முறையைப் போன்றே ஆண்ட்ரூவின் வாழ்க்கையும் அமைந்திருந்தது. அவனைப் போன்ற வாலிபர்கள் பெண்ணுடன் சேர்ந்து வாழ்வதை நாகரீகமாகக் கருதும் காலம் அல்லவா இது. ஆண்ட்ரூ அவ்வாறே வாழ்ந்து வந்தான். மதுவையும், போதைப் பொருட்களையும் அவன் அருந்தினவனாக, கட்டுப்பாடற்ற இன்ப வேட்கையில் அவன் திளைத்திருந்தான். அவனுடன் நட்புக்கொண்டிருந்தவள் ஒரு ஜப்பானிய அமெரிக்கப் பெண். அன்னா என்பது அவளுடைய பெயர். அவள் ஏற்கனவே திருமணமானவள். ஆயினும் அத்திருமண உறவு உறுதியாக இல்லை. இந்நிலையில் அவள் மற்ற ஆண்களுடன் நெருக்கமாகப் பழகுவதைத் தவறாகக் கருதவில்லை. இப்பொழுது ஆண்ட்ரூவும் அன்னாவும் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தனர்.

ஆண்ட்ரூ ஒரு சில ஆண்டுகளே அன்னாளுடன் வாழ்ந்தான். அவளுடைய தாறுமாறான வாழ்க்கை முறையில் சலிப்பு ஏற்பட்டதால் அவளைக் கைவிட்டு, பிரிந்து வந்துவிட்டான். இதைத் தொடர்ந்து வந்த நாட்களில் தனக்கு என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளமுடியாமல் அவன் மிகவும் கலக்க

முற்றிருந்தான். அவன் மன அமைதி அற்றவனானான். ஏதோ சாதாரணமானதுதான் என அவன் கருதிய வாழ்க்கை முறை மிகவும் வெட்கக்கேட்டிற்குரியது என்பதை அவன் உணரலானான். இச்சிந்தை அவனை மிகவும் பாரப்படுத்தி அழுத்தியது. ஆண்ட்ரூ மனஅமைதியை நாடினான், ஆயினும் அவனுக்குக் குற்றஉணர்வே மேலிட்டது. பெரியதொரு இராட்சத குற்ற உணர்வு அவனைக் கவ்விப்பிடித்துக் கொண்டது.

அன்னாளை விட்டுப் பிரிந்து ஒன்பது மாதங்களுக்குப் பின்னர் அவன் கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றான். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து சிலுவையைப் பற்றிக்கொண்ட அவன், தன்னைவிட்டு பாவ பாரச்சுமை அகன்றதை உணர்ந்தான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலம், நீதியுள்ள தூய தேவனோடு அவன் சமாதானத்தைப் பெற்றுக்கொண்டான். ஆண்ட்ரூ ஒரு மெய்யான கிறித்தவ பக்தனாக மாறிவிட்டான்.

ஓராண்டு கழிந்த பின்னர் மாலவி என்னும் இடத்திலிருந்து வந்த நீலா என்ற பெண்ணை ஆண்ட்ரூ சந்திக்க நேர்ந்தது. நீலா அன்னாளின் தோழி. நீலா ஆண்ட்ரூவுக்குக் கூறிய சில விவரங்கள் அவனை மிகவும் கலங்கடித்தது. அன்னாளின் முந்தின கணவன் சான்பிரன்சிஸ்கோவில் இருந்த காலங்களில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருந்ததால் அவன் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டி ருக்கிறான் என்பதே அந்த விவரம்.இது ஆண்ட்ரூ அன்னாளைச் சந்திப்பதற்கு முன்னதாகவே நடைபெற்றதாகும். ஆகவே அன்னாள் எயிட்ஸ் நோயை அவன் மூலம் பெற்றிருக்கக் கூடும் என்றும், அவள் மூலம் தனக்கும் அந்தக் கொடிய நோய் வந்திருக்கக்கூடிய சாத்தியக்கூறு உண்டு என்றும் பயந்து கலங்கினான். அவனுடைய கடந்தகால பாவ வாழ்க்கை அவன் நினைவுக்கு அடிக்கடி வந்து, அவனை வாட்டிக் கொண்டிருந்தது.

ஆண்ட்ரூ தன்னுடைய உள்ளுணர்வுகளால் மிகவும் அலசடிபட்டுக்கொண்டிருந்தான். இரவும் பகலும் பயம் அவனைப் பிடித்துக்கொண்டது. அவனுக்கு மன அமைதி கிடைக்கவில்லை. ஒரு மருத்துவரிடம் சென்று சோதித்துப் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லையென்று உணர்ந்தான்.

*ஆண்ட்ரூ தன் இரத்தத்தைப் பரிசோதிக்கக் கொடுத்தான். சுமார் ஒரு வாரத்தில் பரிசோதனையின் முடிவு தெரியும் என்று கூறினார்கள். அவனோ மிகவும் கலங்கியிருந்தான்.*

*பரிசோதனைக்குத் தன் இரத்தத்தைக் கொடுத்த இரண்டு நாட்கள் கழித்து அவன் வேதாகமத்தை வாசித்துக்கொண்டிருந் தான். அன்று அவன் சற்றேனும் எதிர்பாராத வகையில், வாசிக்க வேண்டிய பகுதி 91-ஆம் சங்கீதமாகும்.*

அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார். அவர் தமது சிறகுகளால் உன்னை மூடுவார். அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்கு பரிசையும் கேடகமுமாகும். இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தி யானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். உன் பக்கத் தில் ஆயிரம் பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது (வச. 3–7).

*“பாழாக்கும் கொள்ளைநோய்”, மற்றும் “இருளில் நட மாடும் கொள்ளைநோய்” ஆகிய வாசகங்கள் எய்ட்ஸ் நோயைத் தெளிவாக விவரிக்கும் வார்த்தைகளாக அமைந்திருப்பதை ஆண்ட்ரூ உணர்ந்தான். மற்றும் 7-ம் வசனத்தில் காணப்படும் “உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலது பக்கத்தில் பதினா யிரம் பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது” என்ற வார்த்தைகளின் மூலம் தேவன் தன்னிடம் நேரடியாகப் பேசு வதாக உணர்ந்தான். ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைக் குடித்திருக்கும் இந்த எய்ட்ஸ் நோய் தன்னை அணுகி வராது என் பது தேவன் தனக்குக் கொடுத்த வாக்காகவே அவன் எடுத்துக் கொண்டான். இந்த சங்கீதம் தனக்காகவே எழுதப்பட்டதாக அவன் கருதினான்.*

*ஆண்ட்ரூ தன்னுடைய விசுவாச நண்பன் பீட்டருடன் இந்த விவரங்களைப் பகிர்ந்துக் கொண்டான். ஆம், இவ்வசனங்களின் மூலம் உனக்கு எயிட்ஸ் நோய் இல்லை என்பதை தேவன் உறுதிப் படுத்தியிருக்கிறார் என்று அவனும் ஒப்புக்கொண்டான். ஆயினும் சிற்சில சமயங்களில் ஆண்ட்ரூவின் இருதயத்தில் சந்தேகம் எழும். தன் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும் ஒவ்வொரு நாளும் தபால் பெட்டியில், தன் மருத்துவரிடமிருந்து பரிசோதனையின் முடிவு வந்திருக்கிறதா என்று பார்ப்பான்.*

*ஒரு வாரம் கடந்தது. அன்று ஆண்ட்ரூ வாசிக்க வேண்டிய வேதப்பகுதி முதல் சாமுவேல் 17-ஆம் அதிகாரம்.*

"அந்தச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான்; அப்பொழுது சவுல் தாவீதைப் பார்த்து போ கர்த்தர் உன்னுடனேகூட இருப்பாராக என்றான்."

*இப்பகுதியை ஆண்ட்ரூ படித்தபோது, தேவன்மேல் விசுவாசம் வைப்பது என்றால் என்ன என்பதற்கான ஒரு புதிய விளக்கம் அவனுக்குக் கிடைத்தது. தேவன் கொடுக்கும் வாக்கு ஏற்ற வேளையில் நிறைவேறியே தீரும். இதனோடு அவனுடைய இருதயத்தில் ஆழமான சமாதானமும் நிலவியது. அந்த இரத்த பரிசோதனையின் முடிவு என்னவாக இருக்கும் என்பதை அவன் இப்பொழுது ஐயமற அறிந்திருந்தான். ஒரு வேளை தனக்கு எய்ட்ஸ் இருப்பதாக அந்த அறிக்கையில் எழுதியிருப்பினும், அது தவறானதாகவே இருக்கும். மீண்டும் ஒருமுறை தன் இரத்தத்தைப் பரிசோதிக்கும்படி அவன் கேட்டிருப்பான்.*

*இறுதியாக நான்கு வாரங்கள் கழிந்த பின்னரே பரிசோதனையின் முடிவு வந்தது. ஆண்ட்ரூ எய்ட்ஸ் வியாதியினால் பாதிக்கப்படவில்லை.*

*சற்றும் சந்தேகிக்கிறதற்கு இடம் இல்லாத வகையிலும், மறுத்துரைக்க இயலாத விதத்திலும், சங்கீதம் 91 மற்றும் முதல் சாமுவேல் 17-ஆம் அதிகாரங்களின் மூலமாக ஆண்ட்ரூவிடம் தேவன் பேசியிருந்தார். அவனுடைய விசுவாசம் உறுதியாயிற்று. கர்த்தர் தன்னை அழைத்த ஊழியத்தில் முழுமையுமாக ஒப்புவிப்பதற்குத் தேவையான விடுதலையையும் சுயாதீனத்தையும் அவன் இப்பொழுது பெற்றுக்கொண்டான்.*

*தாம் கூறியதை தேவன் நிறைவேற்றி முடித்தார்.* MM

# 18

# மக்களின் இரட்சிப்பை முன்னுரைத்த இறைவாக்கு

*திருமதி ஷெப்பர்டு இறைபக்தியுள்ள தாயார். தன்னுடைய பிள்ளைகள் அனைவரும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பது அவர்களுடைய ஜெப பாரம். ஆயினும் ஜெபிப்பதுடன் மட்டும் அவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. வேத போதனைகளுக்கு ஏற்ற முறையிலேயே தன்னுடைய பிள்ளைகளை வளர்த்து வந்தார்கள். வேத வசனங்களை நேசிக்கவும், அவைகளுக்குக் கீழ்ப்படியவும் வேண்டுமென்று அவர் தம் பிள்ளைகளுக்குப் போதித்து வந்தார். உபாகமப் புத்தகம் 11:18 முதல் 21 வரை உள்ள வசனங்களில் சொல்லப்பட்டிருப்பவை அவர்கள் வீட்டில் நிறைவேறிக்கொண்டிருந்தன.*

ஆகையால் கர்த்தர் உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் உங்கள் நாட்களும், உங்கள் பிள்ளைகளின் நாட்களும், பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்களைப்போல அநேகமாயிருக்கும்படிக்கு, நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக் குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்

குறித்து பேசுவீர்களாக. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும், உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக.

அருட்பணியாளர்களையும், இறை போதகர்களையும் தங்கள் இல்லத்தில் வரவேற்று உபசரிப்பது, ஷெப்பர்டு குடும்பத் தாரின் வழக்கமாக இருந்தது. தங்களுடைய குடும்பத்தார் பக்தி யுள்ள தூய வாழ்க்கையில் வளருவதற்கு இது பேருதவியாக இருக் கும் என அவர்கள் நம்பினர். இறை ஊழியர்களுடைய பழக்க வழக்கங்களையும், உரையாடல்களையும் கவனிக்கும் பிள்ளைகள், ஆவிக்குரிய நல்ல பாடங்களைக் கற்றுக்கொள்ளவும் பேருதவி யாக இருக்கும் எனவும் அவர்கள் உறுதிகொண்டிருந்தனர்.

ஒருமுறை அவர்களுடைய வீட்டில் போதகர் ஒருவர் சில நாட்களாகத் தங்கியிருந்தார். அச்சமயத்தில் ஷெப்பர்டு அம்மை யார், தன்னுடைய பிள்ளைகள் அனைவரும் மறுபிறப்படைந்து, இரட்சிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்ற தன்னுடைய ஆழ்ந்த விருப்பத்தை அந்த ஊழியருடன் பகிர்ந்து கொண்டார்கள்.

ஒரு குறிப்பிட்ட திருவசனத்தின் மூலம் இதனை ஆண்டவர் தனக்கு உறுதிசெய்துள்ளாரா இல்லையா என்பதை அவ்வம்மை யார் உறுதியாக சொல்லமுடியவில்லை. ஆயினும், அவர்கள் அத்த கைய உறுதியான நம்பிக்கைக் கொண்டு இருந்தார்கள்.

ஆயினும் அந்த ஊழியர் இதில் திருப்தி அடையவில்லை. நல்லதொரு வாஞ்சையாக இது இருக்கிறது. இது தேவையாயுள்ள ஒரு மனோபாவமே ஒழிய, இத்தகைய உணர்வில் மட்டுமே சார்ந் திருப்பது சரியானதல்ல என்று அவர் அபிப்பிராயப்பட்டார். ஆழ்ந்த பக்தியுடனும், உண்மையான இருதயத்துடனும் முன் னேறிக் கொண்டிருந்த இந்தத் தாயாரின் விசுவாசத்தை அவித்துவிடுவதாகவே அவ்வூழியரின் போக்கு காணப்பட்டது.

இச்சம்பவம் நடைபெற்று சில நாட்களுக்குள், அவ்வூரில் வாழ்ந்துகொண்டிருந்த மற்றொரு விசுவாச சகோதரி, ஷெப் பர்டு அம்மையார் நம்பிக்கை இழந்து, இவ்வாறு சோர்வுற்று இருக்கும் விவரத்தைக் குறித்துக் கேள்விப்பட்டார்கள். அந்த சகோ தரியின் கணவர் ஊனமுற்றவர். உதவியற்ற தன் கணவரைத் தனியே விட்டு தான் வெளி அலுவல்களுக்குச் செல்வது என்பது அச்சகோதரிக்கு மிகவும் விருப்பமில்லாத தொன்றாகும். அன்று இரவு காற்றும் மழையும் அதிகமாயிருந்தது. பொதுவாக இத்தகைய

சூழலில் அந்தச் சகோதரி தன் வீட்டை விட்டு வெளியே செல்லத் துணிய மாட்டார்கள். ஆயினும் ஷெப்பர்டு அம்மையாரிடம் அறிவிக்கத்தக்க ஒரு சிறிய வசனத்தை ஆண்டவர் அந்த சகோதரிக்குக் கொடுத்திருந்தார். அந்த வசனம் பொதுவாக யாவரும் அறிந்திருக்கும் ஒரு வசனம் அல்ல. அந்த சகோதரியின் கணவரும் ஷெப்பர்டு அம்மையாரைப் போய் சந்தித்து வருவதற்கான உத்தரவைக் கொடுத்துவிட்டார். இந்நிலையில் அச்சகோதரி தன் மேல் ஆடையைப் போட்டுக்கொண்டு வேகமாக ஷெப்பர்டு அம்மையாரின் இல்லத்திற்குப் புறப்பட்டார்கள். அவர்கள் அத்தாயாரைச் சந்தித்து, ஏசாயா 49:25-ஆம் வசனத்தை எழுதிவைத்திருந்த ஒரு கடிதத்தை அவர்களிடம் கொடுத்தார்கள்.

> "உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்வேன்".

சமயத்திற்கு ஏற்றதும், ஷெப்பர்டு அம்மையாரின் சூழலுக்குத் தகுந்ததுமான வார்த்தையாக இது இருந்தது. இதைக்காட்டிலும் பொருத்தமான மற்றொரு வசனம் இருக்கவும் வாய்ப்பில்லை. மனச்சோர்வுற்று இருந்த தாயாருக்கு நம்பிக்கை ஊட்டி, உற்சாக மூட்டும் வார்த்தைகளாக இவ்வசனம் அமைந்திருந்தது. அந்த தாயாரின் நம்பிக்கையைக் குறித்து கேள்வி எழுப்பிய ஊழியரை தான் கவனித்துக் கொள்வதாகவும், அவர்கள் குடும்பத்தார் அனைவரையும் தாம் இரட்சிப்பதாகவும் ஆண்டவர் எடுத்துரைக்கும் வசனமாக இது அமைந்திருந்தது. கலக்கமுற்றிருந்த அந்தத் தாயார் இத்தகைய அர்த்தத்துடனேயே இவ்வசனத்தைப் புரிந்துகொண்டார்கள்.

இந்த வேத வசனத்தின் மெய்யான பொருள் என்ன? இந்த வசனம் எழுதப்பட்டுள்ள தீர்க்கதரிசனப் பின்னணியில் காணும் போது, இசுரவேலர் தங்கள் விரோதிகளிடமிருந்த காக்கப்பட்டு, பாதுகாக்கப்படுவார்கள் என்பதே இதன் பொருள். இவ்வுலகில் தேவன் தம்முடைய இறையரசை நிலைநாட்டும் நாளில், யூத மக்கள் அனைவரும் தங்கள் பகைவர்களிடமிருந்து காக்கப்பட்டு, இரட்சிக்கப்படுவார்கள்.

இந்த இறை அடியாளின் அனுபவத்தின் மூலம் நாம் எதைக் கற்றுக்கொள்ளுகிறோம்? தேவன் அருளியுள்ள திரு வசனங்கள் பல்நோக்கு பயன்களைக் கொண்டுள்ளன. திருவெழுத்துகளின்

மெய்ப்பொருள் ஒன்றாக இருப்பினும், அவ்வசனத்தின் பயன்கள் பலருக்கும் பலவாறாகப் பயன்படும் உயிரோட்டமுள்ளவை களாக இருக்கின்றன.

திருமதி ஷெப்பர்டு அவர்களின் மகன்களும், மகள்களும் பின்னர் இரட்சிக்கப்பட்டு, அதனை உறுதிசெய்யும் வாழ்க்கை உடையவர்களாக வாழ்ந்தனர் என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

MM

# 19

# அருட்காட்சி நிறைவேறும்

இவ்வுலக வாழ்க்கையில் பொறுமையைக் கற்றுக் கொள்வது கடினமாகவே இருக்கிறது. தேவசித்தம் இன்னது என்று அறிந்து அதனையே நிறைவேற்ற வேண்டும் என்ற உண்மையான மனதுள்ளவர்களாக நாம் இருக்கிறோம். "என்னுடைய சித்தம் அல்ல; உம்முடைய சித்தமே ஆகக்கடவது" (லூக்கா 22:42) என்று கூறி கதறி அழுகிறோம். நம்முடைய சொந்தத் திட்டங்களையும், எண்ணங்களையும் களைந்துவிட்டு, கர்த்தருடைய திருவுளச் சித்தத்திற்குக் காத்திருக்கிறோம். இறை சித்தம் என்ன என்பதை அறிய ஒருவேளை வாரங்கள், மாதங்கள், சில சமயங்களில் ஆண்டுகளாக நாம் ஜெபித்துக் கொண்டிருக்க வேண்டி வருகிறது. இந்நிலையில் நாம் பொறுமையைக் காத்து, நமது ஜெபத்திற்கான பதிலை எதிர் நோக்கியிருப்பது கடினமாகவே இருக்கிறது.

நாம் விசுவாசிகளான புதிதில் நமது ஜெபங்களுக்கான பதிலை உடனடியாகப் பெற்றுக்கொள்ளுகிறோம். நாம் விசுவாசத்தில் வளர வளர பொறுமையின் பள்ளியில் பல பாடங்களைக் கற்க வேண்டியுள்ளது.

பார்நமது ஜெபத்திற்குப் பதிலருளும் அருகனார்
சோர்ந்திடும் நமதுள்ளம் சோதனையில் அகப்படும்
நேர்ந்திடும் சமயத்தில் வினவுவதை அருளுகிறார்
சார்ந்து ஏறும் அவரிடத்தில் பொறுத்திருக்கப் பயிலவேண்டும்
பார்த்திருக்கும் சமயங்களில் பரிந்துரையா நமது தேவன்
சீர்ப்பெருகும் அருளினையே அருமையாய் அருள்பவரே!

விண்மீன்கள் ஒளிமங்கி விலகாமல் தரித்திடினும்
வன்மலையும் உபத்திரவம் வழியெங்கும் நிலைத்திடினும்
தன்தேவன் தரணியெங்கும் வியாபிக்கும் அதிமெய்யாமே
மண்ணிலே அவருரைத்த மறைவாக்கு உறுதியதே
கண்பதித்து பரமதேவைக் கடைபிடித்து வாழ்வோமே
பொன்பதியாம் கிறிஸ்தேசு பதம்பணிந்து தொழுவோமே!

*கர்த்தருடைய வழி நடத்துதலைப்பெற்றுக் கொள்ளவேண்டிய ஒரு கட்டத்தில் சகோதரன் கிரேக்கு இருந்தான். தேவனுடைய கரம் அவன்மேல் அமர்ந்திருந்தது. முழுநேர இறை சேவைக்குக் கிரேக்கு அழைக்கப்பட்டிருந்தான். கர்த்தர் தன்னை அழைத்திருக்கிறார் என்பது அவனுக்குத் தெளிவாக இருந்தபோதிலும் எங்கே? எப்போது? எப்படி? போன்ற விவரங்கள் இதுவரை அவனுக்கு வெளிப்படுத்தப்படவில்லை.*

*சகோதரன் கிரேக்கு ஜெபிக்க ஆரம்பித்து எட்டு மாதங்கள் கடந்துவிட்டன. இதுவரை பதில் கிடைக்கவில்லை. விண்ணகம் அமைதி காத்தது. தன்னுடைய ஜெபத்தை நிறுத்திவிடலாமா என்ற சோதனையான கட்டத்தில் அவன் இருந்தான். காத்திருந்த அந்த எட்டு மாதங்கள் பதினாறு மாதங்களாக நீண்டன. ஆயினும் பதில் ஏதும் இல்லை. அவன் தன் ஜெபத்தை நிறுத்திவிட வேண்டிய வேளை வந்துவிட்டதா?*

*தேவனோடு தன் நேரத்தைச் செலவிடும் காலை வேளைகளில் நம் சகோதரன் கிரேக்கு சிறிய தீர்க்கதரிசன நூல்களைப் படித்துக் கொண்டிருந்தான். குறிப்பிட்ட அன்று அவன் தன் காலை தியானத்தில், ஆபகூக் புத்தகத்தின் இரண்டாம் அதிகாரத்தை வாசித்துக்கொண்டிருந்தான். அதில் வசனம் 3 -இல் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.*

"குறித்த காலத்துக்குத்தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது. முடிவில் அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு. அது நிச்சயமாம், அது தாமதிப்பதில்லை"

*ஆபகூக் எந்தத் தரிசனத்தைப் பற்றி எழுதிக்கொண்டிருக் கிறார் என்பதையும், இவ்வசனத்தின் பின்னணி என்ன என்ப தையும் நம் சகோதரன் கிரேக்கு அறியாதவனாகவே இருந்தான். இவ்வசனத்தை படித்தபோது, தேவன் தன்னுடன் நேரடியாகப் பேசுகிறார் என்பதை மட்டும் கிரேக்கு உணர்ந்தான். ஆகவே இன்னும் உறுதியான நம்பிக்கையுடன் அவன் தொடர்ந்து ஜெபித் தான். சில நாட்களுக்குள்ளாக அவன் ஜெபத்திற்குப் பதில் கிடைத் தது. அவன் இப்பொழுது முழு நிச்சயத்துடனும், விசுவாசத் துடனும் ஆண்டவருடைய சித்தத்துடனேயே தனக்கு நியமிக்கப் பட்ட ஊழியத்தலத்திற்கு அவனால் முன்னேறிச் செல்ல முடிந்தது.*

"ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்" (நீதி. 25:11).

*ஆம்! அத்தகைய இறைவாக்குகள் எவ்வளவு அழகாக மிளிர்கின்றன.*

***குறிப்பு:*** *தேவன் தனக்குச் சுட்டிக்காட்டிய இறை வசனத் தின் பொருள் என்ன என்பதை கிரேக்கு பின்னர் தெரிந்து கொண்டான். இவ்வசனம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவர் பூமியை ஆளுகை செய்யும் காலத்தைக் குறிக்கும் வசன மாகும். இவ்வசனம் எபிரேயர் 10:37-இல் மேற்கோள் காட்டப் பட்டிருப்பதைக் காணலாம். எபிரேயரில் இந்த தரிசனம், ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் வகையில் "(அவர்) வருகிறார்" என்று மாற்றப்பட்டு, அவர் தமது மணவாட்டியாகிய திருச்சபையை அழைத்துக்கொள்ள வருவதைக் குறிப்பிடப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது.*

MM

# 20

# தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம்

அமெரிக்க தேசத்தில் சியரா நிவெதா என்னும் மலையடிவாரத்தில் இயங்கி வந்த பெரிய மர வியாபாரக் கம்பனியின் கணக்கர் பொறுப்பில் டேவிட் ஹன்ட்டு நியமிக்கப்பட்டிருந்தார். இந்த மர வியாபாரக் கம்பெனிக்கு அங்கு நான்கு பெரிய தொழிற்சாலைகள் இருந்தன. அந்த மரநிறுவனத்தின் முக்கியமான தொழிற்சாலை கலிபோர்னியாவிலுள்ள மெர்சீடு என்ற இடத்தில் இருந்தது. அங்கீரிக்கப்பட்ட பொதுக் கணக்கர் என்ற நிலையில் அந்த மரநிறுவனத்தின் முதலாளிகளின் நன்மதிப்பைப் பெற்றவராக ஹன்ட்டு இருந்தார்.

நிதித்துறையில் ஹன்ட்டு அவர்கள் நல்ல அறிவும் திறமையும் உடையவர். இந்த பெரிய நிறுவனத்தின் நிதி நிலை மிகச் சிக்கலாக இருந்த சூழலில், இவருடைய உதவியும் ஆலோசனையும் அதன் நிர்வாகிகளுக்கு இன்றியமையாததாக இருந்தது.

இந்த மர நிறுவனம் ஒரு பேரரசாகத் திகழ்ந்தது. அதனுடைய நிதி நிலவரம் பற்றிய சில விவரங்களாவன: அந்த கம்பெனியின் வங்கி மேல்வரைப்பற்று 1,00,000.00 டாலர்கள் ஆகும். அதன் அலுவர்கள் வேலையாட்களின் சம்பளம் மற்ற செலவினங்களின் மாதாந்திரத் தேவை 2,00,000.00 டாலர்கள். அதன் அனுதின செலவினத் தேவை 15,000 டாலர்கள். இத்தகைய வரவு செலவுகளைக் கவனிக்க அந்த நிறுவனத்தின் நிதி நிலைமையைக் கட்டுப்படுத்தி

கவனிக்க, டேவிட் ஹன்ட்டு பொதுக் கணக்கராக நியமிக்கப் பட்டிருந்தார்.

இந்த மர நிறுவனத்தின் இயக்குநர் தன் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதற்கு முன்னதாக, அதற்குச் சொந்தமாக இருந்த இரண்டு மரம் அறுக்கும் தொழிற்சாலைகளையும், பெட்டிகள் தயார் செய்யும் தொழிற்சாலையையும் தங்களோடு போட்டியிட்டுக்கொண்டிருந்த நிறுவனங்களுக்கு விற்றுவிட முயன்று கொண்டிருந்தார். அந்த விற்பனை நிறைவடையும்வரை, கடன்காரர்களின் தொல்லையைத் தடுத்து வைக்கும்படி அதன் நிர்வாக இயக்குநர் டேவிட் ஹன்ட்டிடம் கேட்டுக் கொண்டார். இதனை ஹன்ட்டும் ஒப்புக்கொண்டார். திவாலாகி விடும் நிலையில் ஊசலாடிக் கொண்டிருந்த அந்த பெரிய நிறுவனத்தின் முழுப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழல் அவருக்கு உருவாயிற்று. இந்நிலையில் பொது கணக்கர் பொறுப்பில் இருந்த இவர், திவாலாகும் நிலையில் இருந்த இந்தத் தொழில் நிறுவனத்தின் நடவடிக்கைகளையும், அனுதின அலுவல்களையும் கவனித்துக் கொள்ளும் இயக்குனராக மாறினார்.

வியாபாரம் கவிழ்ந்து, கடன்தொல்லை பெருகி, போட்டியாளர்கள் எழுந்து, இந்நிறுவனத்தின்மேல் வழக்குகள் தொடுக்கப் பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையாக நிலைமை மாறியது. நிதித் துறையில் நெருக்கடிகளும் நெரிசல்களும் நிறைந்து, அந்நிறுவனம் திவாலாகும் நிலையில் இருந்தது. இத்தகைய நிறுவனத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள் ளும் துணிச்சலை ஹன்ட்டு எவ்வாறு சந்திக்க முற்பட்டார்?

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு முற்றும் ஒப்புவித்த கிறித்தவராக இருந்ததே ஹன்ட்டு அவர்களின் பெரும் பெலனாகும். இந்த நெருக்கடியான சூழலை மேற்கொண்டு செல்லமுடியும் என்ற உறுதியைக் கர்த்தர் அவருக்குக் கொடுத்திருந்தார்.

இந்நிலையில் கடன்காரர்கள் சிலருக்குக் கொடுக்க வேண்டிய காசோலைகளை அனுப்பிவிடும்படி தன் அலுவல் நிர்வாகியைப் பணித்தார். அவ்வாறு அனுப்பிய காசோலைகள் ஒன்றேனும் திரும்பிவிடாமல் வங்கி நிறைவுசெய்தது. கூடுதல் விற்பனை, உடனடியான வரவுகள், கடன் மூலம் பெற்ற பணம். இக்காசோலைகளைத் தகுந்த நேரத்தில் சந்திக்கப் போதுமானதாக இருந்தன.

*இவ்வாறாக அவர் கடன்காரர்களின் தொல்லையை ஓரளவு சமாளித்தார். இழுத்துப் பிடித்து விறைப்பாகக் கட்டப் பட்ட கயிற்றில், கழைக் கூத்தாடிகள் விழாமல் வித்தைக்காட்டும் விதமாக, அவர் அந்த கம்பெனியின் நிதித்துறையை விந்தையாக இயக்கிக்கொண்டிருந்தார்.*

*ஒருமுறை 7,500 டாலர் கடனைச் சமாளிக்க ஒரு லாரி வண்டியை விற்கவும் நேரிட்டது. இம்முறையில் அனுதினமும் சந்தித்த இடையூறுகளையும் சவால்களையும் அவர் திறம்பட சமாளித்து வந்தார்.*

*நிறுவனத்தின் மரம் அறுக்கும் தொழிற்சாலை ஒன்றின் விற்பனையால் கிடைத்த 50,000 டாலர் முன்பணத்தைக் கொண்டு, இறுக்கிப்பிடித்து நிர்வாகம் மூழ்காதவாறு காப்பாற்றினார். ஆயினும் இது தற்காலிகமான சமாளிப்பாகவே அமைந்தது. அந்த நிறுவனத்தின் பொதுவான நிலைமை மிகவும் ஆபத்தானதாகவே இருந்தது. ஒருவேளை ஹன்ட்டு அவர்கள் கைது செய்யப்பட்டு, சிறை தன்டனை பெரும் அளவுக்கு நிலைமை மிகவும் மோசமாகவே இருந்தது.*

*அடுத்த மரம் அறுக்கும் தொழிற்சாலை தடுமாற்றமுள்ள நிலையில் இருந்த தறுவாயில், தேவன் ஹன்ட்டுடன் சங்கீதம் 66:10–12 வசனங்களின் மூலம் மிகத்தெளிவாகப் பேசலானார்.*

> “தேவனே, எங்களைச் சோதித்தீர்; வெள்ளியைப் புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர். எங்களை வலையில் அகப்படுத்தி, எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். மனிதரை எங்கள் தலையின் மேல் ஏறிப்போகப் பண்ணினீர்.”

*அச்சமயத்தில் ஹன்ட்டு அவர்களின் சிந்தனை இவ்வாறு சென்றது:*

> “கடந்த ஆறு மாதங்களின் சரித்திரம் அல்லவா இது. ஒரு இக்கட்டான நிலைமையிலிருந்து அடுத்த இக்கட்டான நிலைமைக்கு நான் கடந்து கொண்டிருப்பதே எனக்கு ஏற்படும் ஒருவகை அற்புதங்களாக இருக்கின்றன. தப்பித்துக் கொள்ளமுடியாத வலையில் நான் சிக்கிக்கொண்டிருக்கிறேன். பிறருடன் பகிர்ந்துகொள்ள முடியாத சோதனைகளிலும், போராட்டங்களிலும் நான் கடந்து வந்துகொண்டிருக்கிறேன். நான் செல்லுமிடங்களிலெல்லாம் மனிதர்கள் என்மேல் ஏறி மிதிக்கிறார்கள். தவிர்க்க முடியாதபடி கடன்காரர்கள் எங்குமுள்ளனர். அவர்களுடைய ஏளனம், கோபம், மிரட்டல்கள் ஆகியவை தாங்கமுடியாதிருக்கின்றன. வரும் தாக்கல்

களைத் தாங்கிக்கொண்டும், கர்த்தர் தந்துள்ள வாக்கை நினைவுகூர்ந்து, அந்நிலையில், ஆண்டவரே எனக்கு தைரியத்தைத் தாரும் என்று கூவிக்கொண்டிருக்கிறேன்.''

''இந்த வசனத்தை நான் படித்தபோது, இப்பொழுது நான் அனுப வித்துக்கொண்டிருக்கும் இந்தச் சோதனைகள், ஏதோ ஒரு நோக்கத்திற் காகக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தோன்றிற்று. அசுத்தத்தை நீக்கும்படி எவ்வாறு வெள்ளி நெருப்பினால் புடமிடப்படுகிறதோ அது போலவே தேவனுடைய சித்தம் நிறைவேறுவதற்காக நான் சுத்திகரிக்கப்படுகிறேன் என்பதை உணரலானேன். ஏற்கனவே அந்த நெருப்பில் அதிக நாட்கள் இருந்து இருக்கிறேன். ஆயினும் இச்சங்கீதத்தின் அடுத்துவரும் சில வசனங்கள் உண்மையான நெருப்பு இனிமேல்தான் வர இருக்கிறது என்பதை எடுத்துரைத்தன''.

*''தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டு வந்து விட்டீர்''.*

*மெய்யான தீயையையும் தண்ணீரையும் இனிதான் கடந்து செல்ல வேண்டும் என்ற ஆழமான உணர்வு அவருக்கு உண்டா யிற்று. இவைகளுக்குப் பின்னரே தேவன் அருளியுள்ள விடு தலையும் ஆசீர்வாதமும் கிடைக்கும் என்றும் அவர் நம்பினார்.*

*இந்த வசனங்களைப்பற்றி அவருக்கு கிடைத்திருந்த உணர் வும், அது தனிப்பட்டமுறையில் தன் வாழ்க்கையில் நிறைவேறவும் அதிக நாட்கள் செல்லவில்லை. ஒரு கடன் தொகையாகிய 10,800 டாலர் பணத்தை வசூலிக்க ரீனோ என்ற இடத்திற்கு காரில் பய ணம் செய்துகொண்டிருந்த வேளையில், அவருடைய தொலை பேசி ஒலித்தது. மரத்தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டிருப்ப தாக செய்தி வந்தது. அவர் அந்த தொழிற்சாலைக்குப் போய்ச் சேருவதற்குமுன் அது முழுவதுமாக எரிந்து நாசமடைந்து விட்டது. ஒரே ஒரு மர இளைப்பு இயந்திரம் மட்டுமே மீட்கப்பட்டது. அந்தத் தொழிற்சாலை இயங்குவதற்கு இந்த இயந்திரமே மிக அவசிய மானதாகும்.*

*சில வாரங்கள் கழித்து, இந்த தீ விபத்தினால் நாசமடைந்த பொருட்களுக்கும், அதிக அவசியமில்லாத பிற இயந்திரங்களுக் கும் ஈடாக ஒரு பெரிய தொகையை காப்பீடு கம்பெனியார் அனுப்பி வைத்தார்கள். இந்தத் தொகை அவசியமான சில வங்கிக் காசோலைகளைச் சந்திக்கப் போதுமானதாக இருந்தது.*

“இவ்வாறு 66 –ஆம் சங்கீதத்தின் மூலம் தேவன் பேசின நெருப்பு எழுத்தளவில் நிறைவேறிவிட்டது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்ன தாக எழுதப்பட்டிருந்த இந்த வார்த்தைகள், எவ்வாறு என்னுடைய சொந்த பணித்தல வாழ்க்கையில் இப்பொழுது நிறைவேறி வருகிறது என்று நான் கேள்வி கேட்கத் துணியவில்லை. அல்லது எனக்கு சொல்லப்பட்ட அந்தத் தண்ணீர், இந்த நெருப்பைப்போன்றே, எழுத்தளவாக மெய்யான வெள்ளப் பெருக்காகவே இனியும் வரும் என்றே சிந்திக்கத் தோன்றியது. அது எந்நேரத்தில் எவ்வகையில் வரும் என்பதை நான் அறியாதவனாக இருந்தேன். இதைப்பற்றி சிந்திக்கவும் எனக்கு நேரம் கிடைக்கவில்லை.”

*அடுத்து வந்த மழைக் காலத்தில் வழக்கத்திற்கு அதிகமான மழை பெய்தது. பழங்களைச் சேகரித்து வைப்பதற்காக பெட்டிகள் செய்யும் தொழிற்சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து நிரம் பியது. பருவமழை அதிகமாக இருந்த காரணத்தினால் பழ விளைச் சலும் தாமதமாயிற்று. இதன் விளைவாக பழப்பெட்டிகளின் விற்பனையும் மிகவும் குறைந்து போயிற்று. கடன்காரர்களைச் சந்திக்க வேண்டிய இக்கட்டான சூழலை இது உருவாக்கிவிட்டது.*

*ஹன்ட்டு இவ்வாறு கூறினார்:*

“நாளைக்கே மழைபெய்வது நின்று விடுவதாயினும் நாசமடைந்தவை களைச் சரிசெய்யவும், சேர்ந்த குப்பைகளைச் சுத்தம்செய்யவும் சில வாரங்களாவது ஆகிவிடும். காரியங்கள் அதிக காலதாமதமாகிவிடும். ஏற்கனவே நெருப்பின் ஊடாக கடந்து வந்திருக்கிறோம். அவ்வாறாயின் இப்பொழுது வெள்ளங்கள் வழியாக கடந்துகொண்டிருக்கிறோம் என்பது தெளிவாக இருக்கிறது. அந்நிலையில், செழிப்பான இடத்திற்கு வருவோம் என்று கர்த்தர் கொடுத்துள்ள வாக்கை நம்புவது அதிகக் கடினமாகவே இருக்கிறது”.

*மழை நின்றபோது பழபெட்டிகளுக்கான ஆடர்கள் பல இடங்களில் இருந்து வந்தன. ஹன்ட்டு போதுமான அளவு பணத்தை ஒழுங்கு செய்தார். அந்த தொழிற்சாலையை வாங்குவதற்காக கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக எவரேனும் வருவார்களா என்று தேடிக்காத்துக்கொண்டிருந்தனர். இப்பொழுது இதை வாங்குவதற்கு பலர் முன்வந்தனர். நிலம், தொழிற்சாலை, சரக்கு வண்டிகள், மற்றும் எல்லா உபகரணங்களையும் ஒட்டு மொத்த மாக வாங்கிகொள்ள ஒரு நிறுவனம் முன்வந்தது.*

*ஹன்ட்டு பின்னும் எழுதுகிறார்:*

“1959 – ஆம் ஆண்டின் கோடை காலத்தில், திட்ட மிட்டபடியே நிர்வாகத்தின் அசையும் அசையா பொருட்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அவற்றை விற்ப தற்குரிய சகல ஏற்பாடுகளும் நிறைவேறின. இதன் விளைவாகக் கடைசிக் கடன்காரருக்குக் கொடுக்க வேண்டியவற்றைக் கொடுத்துத் தீர்த்தும், வங்கிக் கடன்களைச் செலுத்தித்தீர்க்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை உணரலானேன். கடந்த மூன்று ஆண்டுகளாக நீடித்துவந்த நிதி நெருக்கடிகளும், பலவிதமான இக்கட்டுகளும் முடிவுக்கு வரும் நிலையில் இருந்தன. இது மெய்யாகவே நிறைவான மனஅமைதியையும் மகிழ்ச்சி யையும் கொண்டு வரவேண்டும். ஆயினும் இதற்கு மாறாக எதிர்பாராத புதிய உணர்வும், பயமும் என் உள்ளத்தில் குடிகொள்ள ஆரம்பித்தது. இத்த கைய பிரச்சினைகள் முடிவுக்கு வருவதை நான் விரும்பவில்லை. இத்த கைய வெற்றியின் எல்லைக்கு வந்து, இக்கட்டுகள் இல்லாத ஓர் அமைத லான, சமாதான நிலை எவ்வாறு இருக்குமென்ற ஒருவித பயம் என்னைப் பிடித்துக்கொண்டது. இந்த அனுபவங்கள் மூலம் அன்றாடம் பலவித அதிச யங்கள் நிகழ்ந்துகொண்டிருந்த ஒரு அற்புதமான வாசல் வழியாகக் கடந்து வந்திருந்தேன். தேவன் எனக்கு மிகவும் உண்மையுள்ளவராக இருந்தார். இத்தகைய சூழல் முற்றும் மாறி, சாதாரணமான எளிய வாழ்க்கை வருமாயின், தேவனை முகமுகமாகக் காணும் நிலை இராமற்போகுமே! எங்கோ தொலைவில் உள்ள கர்த்தரிடம் ஜெபிப்பதும், அவரைப் பற்றிய அழகிய பாடல்களைப் பாடுவதுமாகிய ஒரு சாதாரண அனுதின விசுவாச வாழ்க்கை நடத்தும் நிலையை எண்ணிப்பார்த்தேன். இம்மையிலும், மறுமையிலும் மெய்யான அனுபவமற்று, சாவோடு உறவாடிக்கொண்டிருக் கும் மனிதர்களுடன் பழகும் போராட்டமற்ற ஒரு சாதாரண வாழ்க்கையை எண்ணிப் பார்க்கலானேன்.”

*“நெருப்பையும், தண்ணீரையும் கடந்து செல்வாய்” என்று தேவன் ஹன்ட்டுவுக்குக் கூறியிருந்தார். அவை ஓர் அழகான வர்ணனையாக மாத்திரமல்ல, எழுத்தளவாகவும் நிறைவேறி விட்டன. இந்தத் துக்கமான நிகழ்வுகள் அனைத்தும் மறைமுகமான ஆசீர்வாதங்களாகவே இருந்தன. அறிந்துகொள்ள முடியாத ஒருவர், அரிய வகையில் தன் கரம் கொண்டு செயலாற்றுவதை ஹன்ட்டு அவர்கள் மிகத்தெளிவாகக் கடந்த சில ஆண்டுகளாகக் கண்டிருக்கிறார். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக நாம் நம் நம்பிக்கையுடன் கர்த்தர்மேல் சார்ந்து இருக்கிறோமோ, அதற் கேற்ற வகையில் கர்த்தர் நமது வாழ்க்கையில் இயற்கைக்கு அப் பாற்பட்ட நிகழ்வுகளை நிறைவேற்றக் கூடியவராக இருக்கிறார்.*

*இங்கிலாந்து நாட்டின் இறை போதகராக விளங்கும் ராய் ஹில் என்பார் சங்கீதம் 66:12 - ஐ இவ்வாறு விளக்கியுள்ளார்.*

“நெருப்பின் ஊடாகவும், தண்ணீர்களின் ஊடாகவும் செல்லும்படியாக நாம் அழைக்கப்படலாம். வாழ்க்கை ஓட்டத்தில் குறுக்கிடும் இத்தகைய இயற்கை யாக வரும் சூழல்கள், கர்த்தருடைய மக்கள் எதிர்படும் கஷ்ட நஷ்டங்களாக உள்ளன. இவ்வாறு பல நெருக்கங்கள் ஊடாகக் கடந்து செல்லும்போது, அதை நாம் ஏதோ ஒரு புதிராகக் காணக்கூடாது.”

“நமது ஆண்டவரும் இவ்வழியாகவே சென்றார் என்பதை நாம் உணர்ந்து, அதில் உறுதிப்பட்டு உற்சாகமடைய வேண்டும். இத்தகைய சூழல்களில் அவசியமாக உள்ளது யாதெனில், அச்சூழலைத் தவிர்த்துக் கொள்ள ஒருபோதும் முற்படக்கூடாது. மாறாக அவற்றை நேருக்குநேர் சந்தித்து, மேற்கொள்ள வேண்டும். அத்தகைய சோதனைகளை அடுத்து வரும் நிறைவான ஆசீர்வாதங்களும், மன அமைதியுமே அதன் விளைவாகும்.”[1]

“பொன்னை தீயில் புடமிட மின்னும்”
என்னும் வாக்கை யார்மறுப் பாரோ!
கிறிஸ்தே சுவுக்காய் கஷ்டப் பாடுகள்
சகித்தோர் யாரும் திகைத்துப் போகார்.
நீரின் ஊடாய் கடந்தர் சிலபேர்
கோர வெள்ளங் கடந்தர் சிலபேர்
தீராத் தீயைக் கடந்தர் சிலபேர்
போராட் டங்கள் நேராய் சிலபேர்
கடந்துச் சென்றர்; ஆயினும், இவர்கள்
கடவுள் யேசு செந்நீர் மார்க்கம்
ஊடாய் கடந்து வாடா திருந்தர்;
துதியின் கீதம் வாயில் தந்தார்
புதுமை செய்யும் பரம தேவன்
பாதை யெங்குங் கீதம் பாடி
சேதங் காணா செழித்தர், செயித்தர்!
நாடி சென்றர் நாதன் நெறியை
கூடி வென்றர் பிரியா தினிதே!

*(இப்பாடல் அகவல் இலக்கணத்தில் அமைந்துள்ளது)*

---

Adapted from David Hunt, *On the Brink*, Plainfield, NJ: Logos International, 1972.

1. *Choice Cleaning Calendar*, January 19, 2001.

# 21

# நீர் ஒருவரே சுகமாகத் தங்கப்பண்ணுகிறீர்

நிலப்பகுதியில் செயலாற்றும் கடற்படைப் பிரிவின் விமான போக்குவரத்து மூன்றாம் குழுவில் நான் இணைக்கப்பட்டிருந்தேன். அது 1942 -ஆம் ஆண்டு. கென்சாஸ் சிட்டி பகுதியில் உள்ள பார்பெக்ஸ் என்ற வட்டத்தில் உள்ள ரிசர்வ் கப்பற்படை விமான தளத்தில் நான் பணியாற்றிக்கொண்டிருந்தேன். இரண்டாம் உலகப் போரில் அமெரிக்க ஐக்கிய நாடு தன் படைபலத்தை முறுக்கேற்றிக் கொண்டிருந்த காலம் அது. எங்கும் போர் முரசு ஒலித்துக்கொண்டிருந்தது.

அத்தருணத்தில் கலிபோர்னியாவில் உள்ள ஒக்லாந்துக்கு அவசரமாகச் செல்ல வேண்டிய ஒரு கூடுதல் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டது. அவ்வாரத்தின் புதன் கிழமையன்று இரவு 22.00 மணிக்கு நான் அந்த பயணத்தை தொடங்கவேண்டியிருந்தது. ஆட்களை ஏற்றிச் செல்லும் விமானத்தில் பயணம் செய்வது எனக்கு இது முதல் அனுபவம். விமானப்பயணம் பழக்கத்தில் வந்துகொண்டிருந்த தொடக்க காலம் அது.

கென்சாஸ் சிட்டியில் உள்ள இராணுவ வீரர்கள் தங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த அதிக வசதியற்ற விடுதியின் அறை ஒன்றில் அப்பொழுது நான் தங்கியிருந்தேன். பயணம் செய்ய வேண்டிய அன்று பிற்பகல், நான் தங்கியிருந்த அறையில் மன அமைதியின்றி, பதட்டத்துடன் இருந்தேன். பயணத்தைப்பற்றிய அச்சம் என்னைப் பீடித்திருந்தது. மனக்கலக்கத்துடன் அந்த அறையில்

*குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தேன். இந்த விமானப் பயணம் எவ்வாறு இருக்குமோ? என் கற்பனை விரைவாக உயரே பறக்க ஆரம்பித்தது. அதை என்னுடைய கற்பனை என்று கூறாமல் பயம் என்று சொல்லுவதே சரியாக இருக்கும்.*

*சற்றுநேரம் கழித்து அந்த விமான அலுவலகத்திற்குச் சென்று நான் பயணிக்க வேண்டிய விமானத்தின் போக்குவரத்து விவரங்களை விசாரித்தேன். அந்த விமானத்தின் பயண விவரங்கள் எல்லாவற்றையும் எழுதி அந்த அலுவலகத்தின் சுவரில் ஒட்டி வைத்திருந்தார்கள்.*

*நான் பயணிக்கவிருந்த விமானம், அந்த படைப்பிரிவில் மிகவும் பழைய விமானங்களில் ஒன்றான DC-3 வகையைச் சார்ந்தது. விமானஒட்டி அந்த விமானத்தைப்பற்றி என்னிடம், “இவ்விமானம் சிதறிவிடாதபடி கம்பிகளால் இறுக்கிக்கட்டி வைத்திருக்கிறார்கள்” என்று அதன் பழைமையைக் குறிக்கும் வகையில் ஏளனமாகக் கூறினார். பின்னர் அந்த விமான ஒட்டியின் பெயர் என்ன என்பதை பார்த்தேன். அவர் அதிக அனுபவம் அற்ற, உதவி விமான ஒட்டிகளில் ஒருவர். இவர் இந்தப் பழைய விமானத்தை எவ்வாறு ஓட்டிச் செல்வாரோ என்ற பயம் என்னைக் கவ்விக்கொண்டது.*

*மற்றும் நான் வானிலை குறித்த விவரங்களையும் விசாரித்து அறியவேண்டியிருந்தது. அதற்காக நான் வானிலை ஆய்வு நிலையத்திற்குச் சென்றேன்.*

*“இங்கிருந்து ஒக்லாந்து வரை உள்ள வானிலை இப்பொழுது எவ்வாறு இருக்கிறது?” என்று வினவினேன்.*

*“அதை நீங்கள் உண்மையாகவே தெரிந்துகொள்ள வேண்டுமா?” கூறியவரின் தொனியும் சற்று கலக்கமுற்ற நிலையையே வெளிப்படுத்தினது.*

*“ஆம் ஐயா, சொல்லுவீர்களானால் நலமாக இருக்கும்” என்றேன் நான்.*

*“சரி சொல்லுகிறேன். அது வழிநெடுக ஊழல் நிறைந்ததாகத்தான் இருக்கிறது” என்று பதில் கூறினார். என் ஆயுளில் ‘ஊழல்’ என்ற சொல் வானிலையுடன் பொருத்தி பேசப்படுவதை இதுவே முதல் முறையாகக் கேட்கிறேன். இந்த விசாரணையின் மூலம் அன்றைய வானிலை விமானப் பயணத்திற்கு ஏற்றதாக இல்லை*

*என்பதைப் புரிந்துகொண்டேன். இந்த இக்கட்டான சூழலில் என் சிந்தையில் நினைவுக்கு வந்த வேதவசனம் "எல்லா வற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று"(1 பேதுரு 4:7) என்பதாகும்!*

*என்மேல் பரிதாபப்பட்ட அந்த நபர், "நீங்கள் போய் உங்கள் அறையில் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள், நாங்கள் சரியாக இரவு 21.50 மணிக்கு உங்களை அழைத்துச்செல்ல வேன் ஒன்றை அனுப்பி வைக்கிறோம்" என்று ஆறுதல் சொல்லுவது போல் கூறினார். "வேன் அனுப்புகிறோம்" என்பதற்கு பதிலாக, "சவ வண்டி" அனுப்புகிறோம் என்று அவர் கூறியிருப்பாராகில் அது மிகப்பொருத்தமாக இருந்திருக்கும்.*

*நான் திரும்பி என் அறைக்கு வந்தேன். என்னைக்குறித்தே நான் மிகவும் துக்கப்பட்டுக் கொண்டேன். இந்த பூமியில் இது நான் வாழும் கடைசி இரவு என்று நான் எண்ணிக்கொண்டேன். என்னைக் குறித்து சற்று நேரம் அதிகமாகப் பரிதாபப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்நிலையில் என் மனதிற்குள் இவ்வாறு ஓர் உரையாடல் நடந்துகொண்டிருந்தது.*

*"நீ இவ்வாறு சிந்திப்பது மதீயினம். உன் விசுவாசம் என்னவாயிற்று? இத்தகைய இக்கட்டான நிலையில் இருக்கும் விசுவாசிகள் என்ன செய்வார்கள் தெரியுமா?"*

*"ஆம் அவர்கள் வேதவசனத்தை எடுத்துப் படிப்பார்கள்".*

*"அது சரிதான். ஆயினும் எனக்கு இப்பொழுது எந்த பகுதியை எடுத்து படிப்பது என்று தெரியவில்லையே? என்ன செய்ய?".*

*"அப்படியானால் பயத்தைப் போக்கவும், ஆறுதல் பெறவும் பொதுவாக விசுவாசிகள் வேதத்தின் எந்தப் புத்தகத்தைப் படிப்பார்கள்?"*

*"சங்கீத புத்தகத்தைதான் படிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்! ஆயினும் இப்பொழுது நான் எந்த சங்கீதத்தை எடுத்து படிப்பது?"*

*"நீ ஏன் முதல் சங்கீதத்திலிருந்து ஆரம்பிக்கக் கூடாது?"*

*இதையே நான் செய்ய ஆரம்பித்தேன். முதல் சங்கீதத்தைப் படித்தேன். என்னுடைய இந்தப் பயங்கர சூழலுக்கு ஏற்ற வசனம் ஒன்றும் அச்சங்கீதத்திலிருந்து எனக்குக் கிடைக்கவில்லை.*

தொடர்ந்து இரண்டாம் சங்கீதத்தைப் படி ந்தேன். அதுவும் வெறும் அச்சடித்த தாளாகவே எனக்குக் காணப்பட்டது. பின்னர் மூன் றாம் சங்கீதத்தை வாசித்தேன். கலக்கமுற்றிருந்த எனக்கு ஆறுதல் தரும் வார்த்தை ஒன்றும் அதிலும் இல்லை. இப்பொழுது நான் நான்காம் சங்கீதத்தைப் படிக்க ஆரம்பித்தேன். இந்த சங்கீதத்தின் 8-ஆம் வசனம் செவ்வொளி வீசும் வகையில் என்முன் ஜொலிக்க ஆரம்பித்தது.

"சமாதானத்தோடோ படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன். கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாகத் (பத்திரமாகத் ) தங்கப்பண்ணுகிறீர்".

இறைச்சத்தியம் என்மேல் உதிக்க ஆரம்பித்தது. அந்த விமானம் அல்ல. அந்த விமான ஓட்டி அல்ல, வானிலை சூழலும் அல்ல, நம்முடைய பாதுகாவல் கர்த்தருடைய நித்திய கரத்தில்தான் இருக்கிறது. கர்த்தருடைய கரங்கள் எத்தனை பத்திரமானது. இதைக் காட்டிலும் அதிக பாதுகாவலான இடம் எதுவும் உண்டோ?

என்னை அழைத்துச்செல்ல வேன் வந்தபோது, நல்ல நித்திரையில் இருந்த என்னை, அந்த வேன் ஓட்டி எழுப்பிவிட வேண்டியிருந்தது. சங்கீதம் 4:8 -ஆம் வசனம் எனக்கு ஆழ்ந்த அமைதலான நித்திரையை வரவழைத்திருந்தது.

அந்தப் பழைய விமானம் தரையில் ஓடி மெதுவாக மேலே வானத்தில் எழுந்து பறக்க ஆரம்பித்தது. நான் என் தலையைப் பின்பக்கமாகச் சாய்த்துக் கொண்டு மீண்டும் உறங்கினேன். ஆம்! இது ஆச்சரியமான ஒரு நிகழ்வுதான். "ஒக்லாந்தில் நாம் தரை இறங்குகிறோம்" என்று கூவிய ஒலி கேட்டு நான் விழித்தேன்.

என் அருகில் அமர்ந்திருந்த கப்பற்படையின் பெரிய அதிகாரி நான் சுகமாக உறங்கி, அந்த ஆபத்தான பயணத்தை நிறைவு செய்ததைக் கண்டு அதிகமாக இடறல் அடைந்தார். தன்னுடைய இராணுவ அனுபவத்தில், இதற்கொத்த கொடிய புயல் காற்றைக் கண்டதில்லை என்று கூறிப்புலம்பிக் கொண் டார். அந்தப் பயணத்தில் விமானத்தின் இறக்கைகளின்மேல் மின் னல்கள் தொட்டுச் சென்றதைக் கண்டதாகவும் அவர் கூறினார்.

நான் நிம்மதியாக உறங்கினது என்னுடைய திறமையினால் அன்று. அஃது ஆண்டவரின் செயல், முற்றும் முடிய அது அவரு டைய செயலே. நான் பயந்து அலறி கதறியிருக்க வேண்டும். பயத் தால் பீதி அடைந்திருக்கவேண்டும். ஆயினும் கர்த்தர் தமது திரு

வசனத்தில் சுட்டிக்காட்டியபடியே, அமைதலான நித்திரையை எனக்குக்கொடுத்து, இருதயத்தில் சமாதானத்தைக் கட்டளையிட்டிருந்தார்.

இவ்வாறாக நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட ஓர் இறை வசனத்தைக்கொண்டு, 1942 -ஆம் ஆண்டின் கடும் யுத்த நாட்களில் வாழ்ந்த என்னுடன் பேசி, என்னை ஆறுதல்படுத்த நமது கர்த்தரால் முடியுமா? ஆம், முடியும்! அவர் அன்று இரவு மெய்யாகவே என்னுடன் பேசினார். எனக்குத் தேவையான சரியான வாக்கைத் தேவன் அருளி, அமைதியான சமாதானத்தை எனக்குக் கட்டளையிட்டார்! அவர் புகழ் ஓங்குக! MM

# 22

# மேன்மை பாராட்டலுக்கு இடமில்லை

விமானங்களைச் சுமந்து செல்லும் கப்பலில் ரெண்டி நார்மன் என்பார் இளம் அதிகாரியாக நியமிக்கப் பட்டார். அக்கப்பலுக்கு "கோரல் ஸி" என்று பெயர். அவர் அந்த அலுவலில் சேர்ந்த உடனே அக்கப்பலில் இருந்த சில கிறித்தவ அதிகாரிகள் அங்கு அவருக்கு கிறிஸ்துவைப்பற்றி அறிவிக்க ஆயத்தமாக இருந்தனர். தாம் கேட்ட கிறிஸ்துவின் நற்செய்தியைக்குறித்து நார்மன் ஆழ்ந்து சிந்திக்க லாயினார். அவர் தம் வாழ்வில் மரணத்திற்கு மிக அருகாமையில் இருந்த ஒரு அபாயகரமான தரு ணத்தை நினைவுபடுத்திப் பார்த்தார். அதிலிருந்து தான் அற்புதமாகக் காப்பாற்றப்பட்டதன் அடிப் படையில் அவர் உடனடியாகக் கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்படைக்கத் தீர்மானித்தார். அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பலவித மாற்றங்கள், அவர் தன்னை மெய்யாகவே ஆண்டவருக்கு ஒப்பு வித்திருந்தார் என்பதை உறுதி செய்தது. இவ்வாறு பெற்ற மாற்றங்களில் ஒன்று, வேதாகமத்தை ஆழ்ந்து படிப்பதில் அவருக்கு உண்டான நாட்டமாகும்.

அவர் ஒழுங்காக வேதத்தை வாசிக்க ஆரம்பித்ததன் அடிப் படையில், அதன் சத்தியங்கள் அவருக்குப் படிப்படியாக வெளிப் படத்தொடங்கின.இவ்வாறு அவர் தொடர்ந்து ஆவியில் வளர்ந்தார்.

அவரோடு வேதாகமத்தைப் படித்து வந்த மற்றவர்களும் அவரை உற்சாகப்படுத்தினர். ஆண்டவர் தமது திருவசனத்திலிருந்து ஆச்சரியமானவைகளைத் தனக்குப் போதித்து வருகிறார் என்பதில் நார்மன் அவர்களும் மிகவும் மகிழ்ந்து மனநிறைவு அடைந்தார்.

ஆயினும் பிறர் அறியாதவாறு அவர் உள்ளத்தில் ஒன்று உருவாக ஆரம்பித்தது. அவர் அதிகமாக பெருமை கொள்ளலாயினார். தான் அதிகமாக வேத எழுத்துகளைக் கற்று வருகிறோம் என்ற இறுமாப்பு அவருள்ளத்தில் குடிகொள்ள ஆரம்பித்தது. இதனை "கிருபையைச் சார்ந்த பெருமை" (Pride of grace) என்று அழைக்கலாம். குறுகிய கால அளவில் தான் அதிகமாக வளர்ந்து விட்டதாக அவர் கருதினார். இது ஆவிக்குரிய மெய் வாழ்க்கைக்கு உகந்தது அல்லவே!

இதைக் குறித்து கர்த்தர் அவருக்கு உணர்த்திய நாளை நார்மன் நன்றாக நினைவில் வைத்திருக்கிறார்.

அத்தருணத்தில் அவர் அந்த கப்பலின் நான்காம் தளத்திற்கு இறங்கிச்சென்றார். அது சிறைச்சாலையைப் போன்ற ஒரு சிறிய அறை. அந்த அறையின் கீழ்ப்பகுதியில் சுவருடன் இணைந்திருந்த ஒரு கட்டில் இருந்தது. மேல்பகுதியில் ஒரு சிறிய மடக்கு படுக்கை பொருத்தப்பட்டிருந்தது. சிறிய மேஜையும், ஓர் இருக்கையும் அந்த அறையில் வைக்கப்பட்டிருந்தன. ஆடைகளை வைப்பதற்கான இடமும் அங்கு இருந்தது.

நார்மன் அவர்கள் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தார். அன்றையதின வேலைகளை முடித்து அவர் களைப்புற்றவராகவே இருந்தார். தன்னுடைய பாரத்தை ஆண்டவரிடம் ஒப்படைத்து, அவருடன் பேச ஆரம்பித்தார். தான் பெருமிதம் அடையும் மனப்பான்மையைக் குறித்து சிந்தித்தார். இறுமாப்படைந்திருந்த தனது இருதயத்தைப்பற்றி யோசித்தார். வேதாகமத்தைக் குறித்து தான் அறிந்திருக்கவேண்டிய அளவு இன்னும் அறியவில்லை என்பதை ஆண்டவர்முன் அறிக்கையிட்டார். சற்று விரைவாக ஆவியில் வளர்ந்து வருவதே அவர் தன்னைக் குறித்து பெருமிதம் கொள்ள காரணமாயிருந்தது. பெருமை அல்லவா எல்லா பாவங்களுக்கும் தலையாயப் பாவம். பாவங்களில் முதற் பாவம் பெருமையே! ஆகையால் அவர் தன் பாவத்தைக்குறித்து கர்த்தரிடம்

பேசி, அறிக்கை செய்தார் ஆண்டவர் தன்னிடம் பேச வேண்டும் என வேண்டிக்கொண்டார்.

அவர் தனது வேதாகமத்தைத் திறந்தார். ஆயினும் எந்தப் பகுதியை எடுத்துப்படிக்க வேண்டும் என்பதை அறியாமலேயே அதைத் திறந்தார். படிக்கவேண்டிய பகுதியைத் தேடும் அவசியம் அவருக்குத் தேவையில்லாமற் போயிற்று. திறந்திருந்த பக்கத்திலிருந்த ஒரு வசனத்தின் மீது அவரது கண் பதிந்தது. மற்றொரு பகுதியைத் திருப்பவேண்டிய அவசியம் எழவில்லை. அந்த வசனத்தின் மீது அவரது பார்வை பதிந்தது. அவர் பார்த்தது கலாத்தியர் 6:14-ஆம் வசனமாகும்.

> “நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன்”.

இதை அவர் படித்தபோது, தன் இருதயத்தைக் கூர்மையான ஈட்டியைக்கொண்டு ஒருவர் குத்துவதுபோல் உணர்ந்தார். தான் ஒரு குற்றவாளி என்பதை உணர்ந்து நடுநடுங்கிவிட்டார். உலகத்தைப் படைத்த கர்த்தரே இப்பொழுது தன்னுடன் நேரடியாகப் பேசினார் என்பது அச்சமயத்தில் அவருக்கு உற்சாகமூட்டுவதாக இருந்தது. ஆயினும் அத்தகைய மகிமையின் தேவன்தாமே தன்னிடம் நேரடியாகவும், தனிப்பட்ட விதத்திலும் பேசினார் என்பது அவரைக் குலுங்க வைத்தது. தேவன் மெய்யானவர் என்றும், தனிநபர்கள் மீதும் அவர் கருத்தும் அக்கறையும் கொண்டவர் என்பதும் அவருக்கு உறுதியாயிற்று. அவருடைய உண்மை நிலையை தேவன் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார் அல்லவா!

நார்மன் தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தி சீர்படுத்திக்கொண்டு, மகிழ்ச்சியுடன் கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

# 23

# ஜப்பானிய சுவிசேஷகர் மாட்சுசாக்கி

வில்லியம் கூப்பர் என்ற இறைபண்டிதர் ஒருமுறை இவ்வாறு கூறினார்: "தேவன் தமது அற்புதங்களை நிகழ்த்த விசித்திரமான முறைகளைக் கையாளுகிறார்." இக்கூற்று மாட்சுசாக்கியின் வாழ்க்கையின் மூலம் முற்றும் உண்மை என்று உறுதியாகிறது.

மாட்சுசாக்கி ஓர் எளிய ஜப்பானிய கிறித்தவ விசுவாசி. ஆயினும் ஆத்தும வாஞ்சையில் அவர் அசாதாரண மனிதர். அவர் விடாப்பிடியாக மனிதர்களைப் பிடிக்கும் ஒரு சுவிசேஷகர். இருப்பினும் அவர் ஓர் ஆத்துமாவையாகிலும் கர்த்தரிடம் அழைத்து வந்த பாக்கியமும் மகிழ்வும் அவருக்கு இதுவரை கிடைக்கவில்லை. ஒருவேளை கர்த்தருடைய வசனத்தை விடாப்பிடியாக எடுத்துரைப்பதில் அவர் குறைவுள்ளவராக இருந்தாரா? இல்லை, இல்லை! அவ்வாறு நாம் ஒருபோதும் கூற முடியாது. அவர் விடாப்பிடியாகவே சுவிசேஷ செய்தியை அறிவித்து வந்தார். கோமாட்சு என்ற நகரத்தின் ஒரு தெருக்கோடியில் நின்று தொடர்ந்து அவர் நற்செய்தியை வழிப்போக்கர்களுக்கு அறிவித்து வந்தார். இவ்வாறு அவர் ஆயிரம் நாட்களுக்கு மேலாக பிரசங்கித்து வந்திருக்கிறார். எவரேனும் ஒருவர் அவருடைய பிரசங்கத்தைக் கேட்கும்படி நின்றிருப்பார்களேயாகில் மாட்சுசாக்கி அதிக உற்சாகம் அடைந்திருப்பார். ஆயினும் ஒருவராகிலும் நின்று கேட்கவில்லை. அல்லது அவருக்குத் துணையாக ஒரு கிறித்தவ நண்பர் வந்திருந்து அவருடன் கூட நின்றிருப்பாரேயாகில், அது அவருக்கு மெய்யா

கவே கூடுதல் தைரியத்தைக் கொடுத்திருக்கும். ஆயினும் ஒரு கிறித்தவராகிலும் அவருக்கு ஆதரவாக நின்று உற்சாகப்படுத்த வில்லை!

ஆயிரத்திற்கும் அதிகமான நாட்கள் அந்த நகரத்தின் தெரு வழியாக சென்றவர்கள் அவரை இகழ்ந்தனர். "கிறிஸ்துவின் பித்தன்" என்று பட்டம் சூட்டி ஏசினர். அந்த நகர மக்களில் பெரும் பாலானோர் புத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் வழி படுவதற்காக 48 க்கும் மேற்பட்ட புத்த ஆலயங்கள் அந்நகரில் இருந்தன.

வழக்கம்போல அன்றும், மாட்சுசாக்கி சுவிசேஷத்தை அறிவித்துக்கொண்டிருந்தார். சரியாகக் கூறுவோமானால் 1012 - ஆம் நாளாக அவர் அறிவித்துக்கொண்டிருந்தார். அதைக் கேட்க ஒருவர் நின்றார். அவர் தூரத்தில் ஒரு கம்பத்தின் நிழலில் நின்று கொண்டிருந்தார். அவருடைய சாயல் என்ன, வயது என்ன, அவர் ஆணா அல்லது ஒரு பெண்ணா போன்ற விவரங்கள் எதுவும் மாட்சுசாக்கிக்குப் புலப்படவில்லை. ஆயினும் மாட்சுசாக்கி அதிக உற்சாகம் அடைந்தார். "கடைசியாக ஒருவர் நின்று என் பிரசங்கத் தைக் கேட்கிறார்" என்று அவர் எண்ணி மகிழ்ந்தார்.

அன்று மட்டுமன்று, மறு நாளும் அதே இடத்தில் அந்த ஆள் வந்து அவருடைய செய்தியைக் கேட்டார். இது தொடர்ந்து பத்து நாட்களாக நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் அவருடைய செய் தியை கேட்ட ஆள் சற்று அருகில் வந்து நின்று கேட்கத் தொடங் கினார். இறுதியாக, அவர் கிஜூ என்ற கிராமத்தைச் சேர்ந்த ஹோகாய் என்று மாட்சுசாக்கி தெரிந்துகொண்டார். அந்த கிராமம் 10 கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது. அவர் தினமும் தனது இரு சக்கரவாகனமாகிய பைக்கில் வந்தார். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகமானார்கள். அப்பொழுது ஹோகாய் யைப் பற்றிய சில கூடுதல் விவரங்கள் கிடைத்தன.

குளிர்காலத்தில் ஹோகாய் தனது நண்பர்களுடன் மீன் பிடிக்கச் சென்றார். அன்று அவர்களுக்கு ஒன்றும் அகப்பட வில்லை. இந்நிலையில் ஹோகாய் தவிர மற்ற அனைவரும் வீடு திரும்பிவிட்டனர். இன்னும் ஒருமுறை முயன்று பார்க்கலாம் என்ற உறுதியுடன் ஹோகாய் தன் வலையை வீசினார். அவருக்கு இம்முறை மீன்கள் ஒன்றும் அகப்படவில்லை. மாறாக இரண்டு

*சிறு புத்தகங்கள் நீரில் ஊறிய நிலையில் அவருடைய வலையில் சிக்கியிருந்தன. "யோவான் எழுதிய சுவிசேஷம்" என்று அதில் தலைப்பிட்டிருந்தது. இது ஏதோ ஒரு வேடிக்கையான புத்தகம் என்று அவர் சிந்திக்கலானார். தன் படகில் இருந்த கரி நெருப்பில் அப்புத்தகங்களை உலரவைத்து, அதில் அங்கும் இங்குமாக சில பகுதிகளைப் படிக்க ஆரம்பித்தார். அப்பொழுது,*

*"நீங்கள் படவுக்கு வலது புறமாக வலையைப் போடுங்கள். அப்பொழுது உங்களுக்கு அகப்படும்" என்ற யோவான் 21:6 - ஆம் வசனம் அவர் கண்ணில் பட்டது. அதைப்படித்தபோது இந்த புத்தகம் மீன் பிடிப்பதைப் பற்றி கூறும் ஒரு புத்தகம் என்று ஹோகாய் யோசித்தார். சற்று உற்சாகமடைந்த அவர் தொடர்ந்து படிக்கத் தொடங்கினார்.*

"அப்படியே அவர்கள் (வலையைப்) போட்டு திரளான மீன்கள் அகப்பட்ட தினால் அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள்."

*"அப்படியானால் நான் படகின் வலதுபக்கமாக என் வலையைப் போட்டிருக்க வேண்டும்" எனத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டு, வலையைப் படகின் வலது பக்கமாக வீசினார். அவர் வலையை இழுத்தபோது சுமார் 20 கிலோ எடையுள்ள மீன்கள் அகப்பட்டு இருந்தன, இவ்வளவு அதிகமான மீன்களைப்பிடிக்க முடியும் என்று ஒரு மீனவன் கனவிலும் சிந்தித்திருக்கமாட்டான். ஹோகாய் வியந்து ஆச்சரியத்தில் மூழ்கினார்.*

*இப்பொழுது அவர் உள்ளத்தில் ஒரு பெரிய கேள்வி எழுந்தது. இந்த அரிய புத்தகத்தின் இரு பிரதிகள் இந்த ஏரியில் எவ்வாறு வந்திருக்கும்? இதன் காரணத்தைப் ஹோகாய் பின்னர் கண்டுபிடித்தார். ஜப்பான் நாட்டில் மெய்ஜி என்னும் அரசரின் ஆட்சிக் காலத்தில் ஜப்பானிய வேதாகம சங்கம் நாடு முழுவதும் நற்செய்தி நூல்களை வினியோகம் செய்திருந்தது. ஆயினும் அந்நாட்டு மக்கள் வெறுப்புடனேயே அதனைப் பெற்றுக்கொண்டனர். அது ஒரு "வெளிநாட்டுக் கடவுளை அறிவிக்கும் வெளிநாட்டு நூல்" என்று அதை வெறுத்தனர். இந்தச் சுவிசேஷ புத்தகங்களைப் பெற்றுக்கொண்ட சிலர் அதனைத் தீயிலிட்டு எரித்துவிட்டனர். மற்றும் சிலர் அதை ஒரு சமய நூலாகக் கருதி, மூட நம்பிக்கையுடன் தங்கள் வீட்டில் உள்ள பூஜை அறையில் மற்ற சிலைகளுடன் இதையும் வைத்துக்கொண்டனர்.*

அந்த ஆண்டு கோடைகாலம் வந்தது. எதிர்பாராதவாறு பெருமழை பெய்தது. வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. வெள்ளத்தில் கால்நடைகளும் வீடுகளும் மிதந்துச் செல்ல ஆரம்பித்தன. பெரிய தொற்று நோய் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டது. அச்சமத்தில்தான் அவர்களுடைய மெய்ஜி அரசரும் காலமானார். இத்தகைய அபசகுணங்களுக்கெல்லாம் என்ன காரணம் என்று அம்மக்கள் ஆராயலாயினர். பெரும்பாலானோர் "வெளிநாட்டு கடவுளைப்பற்றிய நூல்" தான் இதற்குக் காரணம் என்ற முடிவிற்கு வந்தனர். ஆகையால் வீடுகளில் பூஜை அறைகளில் இருந்த இந்தப் புத்தகங்களை அழிக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. சிலர் அவற்றை தீயிலிட்டுக்கொளுத்தினர். மற்றும் சிலர் மரப்பெட்டிகளில் அவற்றை வைத்து அங்கிருந்த ஏரியில் எறிந்துவிட்டனர். அவர்களுடைய அனுசாரங்களின்படி பூஜை அறைகள் சுத்திகரிக்கப்பட்டன. இதற்காகப் பல சடங்குகளையும் நிறைவேற்றினர். காலப்போக்கில் ஏரியில் போடப்பட்ட பெட்டிகள் உலுத்து சுவிசேஷ பிரதிகள் வெளியே வந்தன. அவற்றில் இரண்டு நூல்கள்தான் ஹோகாயின் வலையில் சிக்கின.

ஹோகாய் தனக்குக் கிடைத்த சுவிசேஷ நூலைத் தொடர்ந்து படிக்கலாயினார். இறைசெய்தி அவருடைய இருதயத்தைத் தொட்டது. அதன்பின் அவர் "கிறிஸ்துவின் பித்தன்" மாட்சுசாக்கியைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவருடைய பிரசங்கத்தைக் கேட்க வந்தார். தேவனுடைய அற்புதமான வழிமுறைகளை அறிந்து நமது சுவிசேஷகர் புளங்காகிதம் அடைந்தார். அவருடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இவ்வாறு அவர் ஹோகாய்யை பாவிகளின் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவிடம் வழிநடத்தினார்.

ஆயிரத்திற்கு அதிகமான பிரசங்கங்கள் செய்ததின் விளைவாக, அதன் முதற்கனியாக ஹோகாய் கிடைக்கப்பெற்றார். ஹோகாய் ஒரு நல்ல கிறித்தவ விசுவாசி ஆனார். பின்னர் கொமாட்சு என்னும் பகுதியில் இருந்த சிறிய சபைக்கு ஹோகாய் தூணாக விளங்கினார். அவர் தன் மரணம் வரை கிறிஸ்துவுக்கு உத்தம சாட்சியாகத் திகழ்ந்து, தேவனை மகிமைப்படுத்தினார்.

தேவனுடைய விசித்திரமான வழிமுறைகளைக் கண்ணுறும் நாம், இவ்வற்புத தேவனைப் புகழ்ந்து போற்றுவோமாக! MM

---

Adapted from Tanaka Hor, *Mitten under die Wolfe*, Verlag der Johannis-Druckerei, 7630 Lahr/Schwarzwald 1933, pp. 25-28.

# 24

# சொந்தமாக்கிக் கொள்ளுதல்

ஒரு மெய்க்கிறித்தவன் இவ்வுலகத்திற்கு நண்பனாக இருக்க முடியாது. இவ்வுலகம் தேவன் அருளும் கிருபையின் வரங்களை ஏற்றுக்கொள்வதில்லை. ஜியார்ஜ் பைரன் என்பார் இரட்சிக்கப்பட்ட பின்னர் அச்சத்தியத்தைக் கண்டுபிடிக்க அவருக்கு அதிக நாட்கள் ஆகவில்லை. இக்காலத்துச் சமுதாயத்தின் பண்பாடு, ஒருவன் ஆவிக்குரிய காரியங்களில் வளருவதற்குச் சற்றேனும் உதவியாக இருப்பதில்லை. இவ்வுலகம் ஒரு விசுவாசியை வீழ்த்தவே முனைந்து நிற்கிறது. விளம்பரங்கள், சுவரொட்டிகள், பத்திரிக்கைகள், தொலைக்காட்சிகள், நவநாகரிக போக்குகள் ஆகிய அனைத்தும் விசுவாசிகளின்மேல் நாளும் பொழுதும், சிற்றின்ப அம்புகளை எய்தவண்ணமாகவே இருக்கின்றன. ஆதாமின் வழி வந்தவர்கள் அனைவரும், அவன் வீழ்ந்த பாவத்திற்கு வாரிசுகளாகவே உள்ளனர். இவ்வுலகப் பாவக்கறைகள் அவர்கள்மேல் படிந்துவிடுகின்றன. மாறாக இறைமக்களோ புதிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு உரிமையாளர்களும், பாவத்தை வெறுக்கும் சுபாவமும் உடையவர்களாகவும் உள்ளனர்.

நாம் தேவசெய்திகளைக் கேட்கும்போது தேவன் எப்பொழுது நம்மிடம் நேரடியாகவும், தனிப்பட்ட வகையிலும்

*பேசுவார் என்பதை அறியமாட்டோம். இத்தகைய ஒரு அனுப வமே ஜியார்ஜ் பைரனுக்கும் ஏற்பட்டது. பிரசங்கியார் ரோமர் 6:1-ஆம் வசனத்தை விளக்கிக்கொண்டிருந்தார்.*

*“என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்கு (நாம்) பாவத்தில் நிலைநிற்கலாமா?” என்பதே அந்த வசனம். இவ்வச னத்தை விளக்கிக்காட்டுகையில், பிரசங்கியார் கூடியிருப் போரைப் பார்த்துச் சொன்னது இதுதான்: இந்தவசனத்தில் ‘நாம்’ என்ற வார்த்தைக்குப் பதிலாக ‘நான்’ என்ற வார்த்தையையும், ‘பாவம்’ என்ற சொல்லுக்குப் பதிலாக உங்களை அடிக்கடி வீழ்த் தும் பாவத்தின் பெயரையும் வைத்து இவ்வசனத்தை வாசியுங்கள் என்று கேட்டுக்கொண்டார். அவ்வாறு வாசிப்போமானால் அவ்வசனம் இவ்வாறு அமையும்:*

“நான் என்ன சொல்லுவேன்? கிருபை பெருகும்படிக்கு நான் இச்சையில் நிலை நிற்கலாமா?”.

*“இச்சை”க்குப் பதிலாக பொருளாசை, பெருமை, கோபம், பொறாமை போன்ற பாவங்களையும் இவ்வசனத்தில் பொருத்தி வைத்துப் படிக்கலாம் அல்லவா?*

*பிரசங்கியாரின் செய்தி பைரனின் இருதயத்தில் மிக ஆழ மாகப் பதிந்தது. அந்தப் பிரசங்கியார் தன் பிரசங்கத்தைத் தொடர்ந்தபோது, சில குறிப்பிட்ட வேத வசனங்களை மனனம் செய்யும்படி வந்திருந்தோரை உற்சாகப்படுத்தினார். இத்தகைய பாவ சிந்தனைகள் மனதில் தோன்றும்பொழுது மனனம் செய்த வேத வார்த்தைகளை எடுத்துரைப்பது அப்பாவங்களின்மேல் வெற்றிபெறக் காரணமாக விளங்கும் என்று ஆலோசனை கூறினார். பைரன் அவர்கள் இதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டார். இந்நிலையில் யோபு 31-ஆம் அதிகாரத்தில் காணும் கீழ்க்கண்ட வசனங்கள் அவர் உள்ளத்தில் ஆழமாகக் கிரியை செய்ய ஆரம்பித்தன:*

என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைப்பாயிருப்பதெப்படி? அப்பொழுது உன்னதங்களிலிருந்து தேவன் அளிக்கும் பங்கும், உன்னதத்திலிருந்து சர்வவல்லவர் கொடுக் கும் சுதந்தரமும் கிடைக்குமோ? மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக் கிரமச் செய்கைக்காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும். அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவா?... என் மனம் யாதொரு பெண்ணின்மேல் மயங்கி, அயலானுடைய வாசலை

நான் எட்டிப்பார்த்ததுண்டானால், அப்பொழுது என் மனைவி வேறொரு வனுக்கு மாவரைப்பாளாக; வேற்றுமனிதர் அவள்மேல் சாய்வார்களாக. அது பாதாளபரியந்தம் பட்சிக்கும் அக்கினியாய் என் சம்பத்தையெல்லாம் நிர்மூலமாக்கும் (யோபு 31:1–4, 9–12).

இவ்வாறு இந்த வேத வசனத்தைக்கொண்டு பைரன் தனது வாழ்க்கையில் தொடர்ந்து சாத்தானை விரட்டி வந்தார். தீயோன் அவரை விட்டுவிலகிவிடுவான். இவ்வாறு சாத்தானை விரட்டி அடித்த இரண்டு சம்பவங்கள் அவருடைய நினைவில் இன்றும் பசுமையாக உள்ளன.

இவருடைய அனுபவங்களில் ஒன்று அவர் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கடற்படையில் கிறித்தவ போதகராக பணியாற் றிக்கொண்டிருந்த நாட்களில் நடைபெற்றது. ஜான் கென்னடி யு. எஸ். எஸ். என்ற விமானங்களை ஏற்றிச்செல்லும் கப்பலில் அவருக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. அவர் அதில் தங்கும்படி அந்தக் கப்பலில் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென் றார். அங்கிருந்த மேசையின் பக்க அறை ஒன்றில் நிர்வாணப் படங்கள் உள்ள சில பத்திரிகைகள் இருப்பதைக் கண்டார். அவற்றை அங்கேயே விட்டு வைப்பது சரியானது அல்ல. அறைகளைச் சுத்தம் செய்ய வரும் பணி ஆட்கள் அவற்றைப் பார்க்கும்போது, இவர் எத்தகைய கிறித்தவ போதகர் என்று தவறாக நினைப்பார் களல்லவா? அதுமட்டுமின்றி, அத்தகைய பத்திரிகைகள் அந்த வேலையாட்களுக்கும் பெரும் சோதனையாக அமையுமே. அந்த பத்திரிக்கைகளை அங்கிருந்து எவ்வகையிலாகிலும் அகற்றிவிட வேண்டும். பைரன் அவர்கள் அவற்றை ஒரு பெட்டியில் போட்டு, கப்பலின் மேல்தட்டில் கடலில் குப்பையைக் கொட்டு வதற்காக வைக்கப்பட்ட இடத்திற்கு எடுத்துச்சென்றார்.

அச்சமயத்தில் சில கப்பல் படை மாலுமிகள் நகரும் பொருட் களை சுடும் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் அங்குள்ள பெட்டிகளைத் தூக்கி எறிந்து அந்த பெட்டியைக் குறிபார்த்து சுட்டுப் பழகிக்கொண்டு இருந்தனர். அவர்கள் சுடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தபோது சில மாலுமிகளிடம் பெட்டியிலுள்ள இந்தப் பத்திரிகைகள் அழிப்பதற்காக வைக்கப் பட்டிருக்கின்றனவேயொழிய படிப்பதற்கு அல்ல என்று பைரன் அவர்களிடம் கூறினார். அந்தத் தேவையற்ற பத்திரிகைகளை கட லில் தூக்கியெறிவது அந்த மாலுமிகளுக்கு ஏற்றதாகத்

தோன்றவில்லை. பைரன் தன் அறைக்குத் திரும்பினார். இவ்வாறு தான் மனனம் செய்திருந்த இறைவசனங்கள் தனது கால்களுக்குத் தீபமும், தன் பாதைகளுக்கு வெளிச்சமுமாக இருப்பதைக்கண்டு ஆண்ட வருக்கு நன்றி கூறினார்.

அடுத்த ஒரு சம்பவம், பத்து ஆண்டுகள் கழித்து இதைப் போன்றே நடைபெற்றது. அப்பொழுது பைரன் யு.எஸ்.எஸ் டிரன்டன் என்ற கப்பலில் பணியாற்றிக்கொண்டிருந்தார். நிலத்திலும் நீரிலும் திடீர் தாக்குதல் செய்யும் கப்பல் அது. அப்பொழுது வளைகுடா போர் முடிந்து, வடகலிபோர்னியாவில் உள்ள மூர்ஹெட் நகரத்திற்கு அக்கப்பல் திரும்பிக்கொண்டிருந்தது. கப்பல் சிப்பந்திகளின் உறவினர்களும் மூர்ஹெட் நகரத்திலிருந்து வர்ஜினியாவில் இருந்த தரைநீர் விமானத்தளமாகிய சின்ன கிரீக் வரை அக்கப்பலில் பயணம் செய்யலாம் என்று இராணுவம் அறிவித்திருந்தது. அந்த பயணத்திற்கு ஆயத்தம் செய்யும் வகையில் கப்பலின் பொது அறையிலும், மற்ற இடங்களிலும் வைக்கப்பட்டிருந்த ஆபாசப் படங்களெல்லாம் அகற்றப்படவேண்டும் என்று கப்பல் அதிகாரி கட்டளையிட்டிருந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின் அதிகாரிகள் உணவருந்தும் இடத்திற்கு பைரன் சென்ற போது, அங்கிருந்த சுவரில் ஒரு ஆபாசப்படம் ஒட்டி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார். தான் மனனம் செய்திருந்த வேத வசனம் அவர் நினைவுக்கு வந்தது. யோபு 31 -இல் உள்ளஅவ்வசனத்தை அவர் ஒரு தாளில் எழுதி, அதனை அந்தப் படத்தின் மேல் ஒட்டும் நாடாவின் உதவியால் ஒட்டி வைத்தார். இப்பொழுது அந்த படத்தில் இருந்த உருவத்தின் தலையும் கையின் ஒருபகுதி மட்டுமே பார்க்கக்கூடிய வகையில் இருந்தது. அதைக்கண்டு ஆச்சரியம் அடைந்த அதிகாரிகள் அருகில் சென்று அந்த தாளில் எழுதியிருக்கும் வேத வசனத்தை வாசித்தார்கள். பைரனின் இச்செயலை ஒரு சிலர் மெச்சினர். ஆயினும் வேறு சிலருக்கு இச்செயல் ஏற்றதாக இல்லை. அவர்களில் ஒருவர் வந்து அந்த வசனத்தையும் படத்தையும் சேர்த்துக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டார்.

தேவனுடைய வார்த்தை வல்லமையுடையது. அது இறை மக்களை நீதியின் பாதையில் நடத்துகிறது. மற்றவர்களுக்கோ அதே வசனம் அவர்களைக் குற்றப்படுத்திக் கடிந்துகொள்ளுகிறது. அது அத்தகையோருடைய பாவத்தை உணர்த்திக் காட்டுகிறது. MM

# 25

# அடிமையின் கோரம்

நரம்புத் தளர்ச்சி அல்லது மனமுறிவின் கோரத்தை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டுமாயின் நாமும் அத்தகைய அனுபவத்தின் ஊடாகக்கடந்துதான் செல்ல வேண்டும்.

மனக்கிளர்ச்சியின் படுகுழியில் நீங்கள் விழுந்துகிடக்கிறீர்கள்; உதவி அற்ற நிலையில் தாங்குவார் ஒருவரும் உங்களுக்கு இல்லை. அவதிப்பட்டு அலசடிக்கப்படுகிறீர்கள். தேவன் உங்களை முற்றும் கைவிட்டு விட்டார் என்று உணருகிறீர்கள். நண்பர்கள் உங்களுக்கு ஆறுதல் செய்ய முயலும் போது அவர்கள் கூறும் நல்வார்த்தைகள் செத்துத் தரையில் விழுந்து விடுகின்றன. உடனடியான பரிகாரத்தை நாடி நிற்கிறீர்கள், ஒன்றும் கிடைக்கவில்லை. உதவும்படி அன்பர்கள் அருகில் வருகின்றனர், ஆயினும் ஒருவரும் உங்களுக்கு உதவமுடியவில்லை, “இந்த மனநிலையை நீங்கள் ஏன் மாற்றிக்கொள்ளக்கூடாது?” என்று ஒருவர் ஆலோசனைக் கொடுக்கிறார். அது சரிதான். ஆனால் அந்த மனநிலையை எப்படி மாற்றிக்கொள்வது என்பதுதான் தெரியவில்லை. என்னையே மாற்றிக்கொள்ளத்தான் நான் முயலுகிறேன். அதைக்காட்டிலும் செய்யத்தக்கது வேறொன்றும் இல்லையே. ஆயினும் இத்தகைய ஆலோசனைகள் நம்மை மேலும் துக்கத்தில் ஆழ்த்துகின்றன. உங்கள் மனது மிகவும் கலக்கமுற்று இருக்கிறது, ஜெபிக்கவும் முடியவில்லை. வேதம் வாசிக்கவும் முடியவில்லை. தன்னைப் பற்றி சிந்திப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

*சுயபரிதாபம் என்னும் கடலில் மூழ்கியுள்ள நிலையில் மாற்றுக் காட்சி எதுவும் உங்கள் கண்களுக்கு முன் வருவதில்லை உங்களைப்பற்றி நினைக்கவே நேரம் போதவில்லை. தற்கொலை செய்துகொள்வது உங்கள் சிந்தையில் இல்லை, ஆயினும் சாவை விரும்பி அதை வரவேற்கிறீர்கள்.*

*இராபர்ட் கம்மிங்கு என்னும் அருட்பணியாளர் இத்தகைய சூழலில் சிக்குண்டிருந்தார். இத்தகைய உடைந்த மனநிலையுடன் கூட, சில அபாயமான எண்ணங்களும் அவருடைய சிந்தையில் அலைமோதிக்கொண்டிருந்தன. ஆபாசமான எண்ணங்களுடன் கூடிய பாவமான சிந்தனைகளும் அவருடைய உள்ளத்திலிருந்து எழுந்துகொண்டிருந்தன. அதனோடு, தான் இன்னும் இரட்சிக்கப்படவில்லை என்ற எண்ணமும் அப்போதைக்கு அப்போது எழுந்து அவரை வாட்டிக்கொண்டிருந்தது. அவர் எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளும் தோற்றுப்போன நிலையில் தன் சொந்த தேசமாகிய அமெரிக்காவுக்கு வந்து, மனநிலை மருத்துவ ஆலோசனையை நாடினார். இதற்காக அவர் இரண்டு நீண்ட ஆண்டுகள் செலவிடவேண்டியிருந்தது.*

*இவைகளுக்குப் பின்னர் ஒருநாள், ஆண்டவர் அவருடன் பேச ஆரம்பித்தார். ஆயினும் வேதாகம வசனங்களின் மூலம் அல்ல. ஒரு பாடலில் உள்ள ஒரு கவியின் மூலமாகவே இராபர்ட் கம்மிங்கு ஆண்டவரின் ஒசையைக் கேட்கலானார். அவர் வேதனையுடன் கர்த்தரிடம் ஜெபித்துக்கொண்டிருந்த வேளையில் இந்தப் பாடல் அவருடன் பேசத் தொடங்கியது:*

இருளில் அடைபட்டிருக்கிறேன்
இருதயம் இரும்பாய் உறைந்திருக்கிறது.
பார்வை இல்லை, பரிவு இல்லை!
இயேசையா தாருமே! வீசுமே ஒளி,
உயிர்தந்து உயிர்ப்பியுமே,
ஊட்டுமே என்னில் நல் நம்பிக்கை!

*நம்புவதற்கு அரியதாகத் தோன்றினும் இப்பாடலின் வரிகளை அவர் கேட்டபோது, நீண்ட நாட்களாகத் தேடிக்கொண்டிருந்த அந்தகாரக் கட்டிலிருந்து அவருக்கு விடுதலை கிடைத்தது. சமாதான அலைகள் அவருள்ளத்தில் பாய்ந்து வந்தன. பயம் அவர் இருதயத்தை விட்டு அகன்றது. மகிழ்ச்சி அவர் உள்ளத்தை நிறைத்தது. அவர் கர்த்தருக்கு நன்றி கூறினார்.*

*அவர் இவ்வாறு ஜெபித்து முழங்காலில் நின்றுகொண்டிருந்தபோதே, மற்றோரு பாடல் அவர் நினைவிற்கு வந்தது.*

இருளினின்று, துக்கத்தினின்று
அடிமையினின்று ஆண்டவர்
இயேசுவே நான் வருகிறேன்!
உந்தன் மகிழ்வின் ஒளியில்
இயேசுவே நான் வருகிறேன்!

*இதுவே அந்தப் பாடலின் அடிகளாகும். ஆயினும் இராபர்ட் அதனை சற்று மாற்றி இவ்வாறு பாடினார்:*

என் இருளில் என் துக்கத்தில்
எனது அடிமையில் ஆண்டவர்
இயேசு வந்தார், ஆம் அவர் வந்தார்!
அருளினார் மகிழ்வும் ஒளியும்
இயேசு வந்தார், என்னிடமாய் வந்தார்!

*இராபர்ட்டைச் சுற்றியிருந்த சங்கிலி முறிந்து வீழ்ந்தது. முறுக்கியிருந்த மனம் தளர்ந்து நிமிர்ந்தது. அவர் எழுந்து நின்றார். இதற்காக ஆண்டவர் ஒரு வேத வசனத்தையல்ல, இறை உண்மை பொதிந்திருந்த இரண்டு பாடல்களையே பயன்படுத்தி னார். எவ்வாறாயினும் ஆண்டவர் அவருடன் பேசினார் என்பது தெளிவு.*

*"அவருடைய தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள்; அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்" (ரோமர் 11:33).* MM

---

Adapted from ,*Our Daily Bread* Grand Rapids, MI: Radio Bible Class, December 19.

# 26

# மலர் கொள்முதலில் உதவிய தேவன்

பூவிற்கும் கடையில் ஜொயானி அம்மையார் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அக்கடையில் ஐந்து ஆண்டுகளாகப் பணியாற்றிய பின்னர், அந்தப் பூக்கடையைத் தானே சொந்தமாக வாங்கிக்கொள்ளத் தீர்மானித்தார்கள். இது அவர்களுக்கு அதிகப் பொறுப்புகள் நிறைந்த முடிவாக இருந்தது.

இதுவரை அவர்கள் அனுதின வேலையை முடித்து மாலை 5 மணிக்கு வீடு திரும்பி விடுவார்கள். கடையின் உரிமையாளர் சந்திக்க வேண்டிய பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. ஆனால் இப்பொழுதோ பணிக்கு ஆட்களை நியமிக்க வேண்டும். அவர்களைக் கண்காணிக்க வேண்டும். வாடகை மற்றும் இதர செலவினங்களைக் கணக்கிட வேண்டும். விற்பனைக்கு ஏற்ற அளவு பூ வகைகளைக் கொள்முதல் செய்யவேண்டும். இல்லையேல் போட்ட முதலீட்டிற்கு நட்டம் ஏற்பட்டுவிடும். இத்தகைய பொறுப்புகள் யாவும் முதலாளியைச் சார்ந்தவை அல்லவா?

மலர் வணிகத்தில் கொள்முதல் செய்வதில் அதிக நுட்பம் தேவை. குறிப்பாக விடுமுறை நாட்களுக்கு முன்னர் மலர்களின் சரியான அளவைக் கணிப்பது மிகவும் கடினம். அதிகமான இருப்பு இருக்குமாயின் மலர் செண்டுக் கூடைகள்தான் மிஞ்சும். கொள்முதல் குறைந்துபோகுமாயின் வருமானம் பாதிக்கும். கடந்த ஆண்டு விற்பனையின் விவரப் பட்டியல் ஜொயானி அம்மை

யாரிடம் இருந்தது. ஆயினும் அடிக்கடி மாறிக்கொண்டிருந்த பூச்சந்தை நிலவரத்தையும், மக்களின் மனப்பான்மையையும், விருப்பு வெறுப்புகளையும் கடந்த ஆண்டு விற்பனை விவரங்களைக்கொண்டு அளவிட முடியாது அல்லவா?

இந்த மலர்க் கடையின் உரிமையாளராகி மூன்று ஆண்டுகள் சென்ற பின்னர், ஜொயானி அம்மையார் இரட்சிக்கப்பட்டு கிறித்தவர் ஆனார். இது அவர்கள் எடுத்த மிகப் பெரிய தீர்மானமாகும். இப்பொழுது அவர்கள் தேவனுடைய பிள்ளையாகி விட்டார்கள்.

இயேசுவின் சீடராகிவிட்ட இவர்கள் இப்பொழுது கிறித்தவ நெறியின்படியல்லவா தன் வியாபாரத்தை நடத்த வேண்டும்? தனது ஆண்டவருக்கு ஏற்ற சாட்சியாக நின்று, தனது வாழ்க்கையின் எல்லா எல்லைகளையும் அவர்கள் காத்துக்கொள்ள வேண்டும் அல்லவா? இருப்பினும் இப்பொழுது அவர்கள் ஜெபத்தின் மூலம் தனது ஆண்டவரின் நல் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள நல்ல வாய்ப்பு பிறந்துள்ளது. தேவனுடைய வழிநடத்துதலைப் பெறமுடியும்.

இந்த அம்மையார் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைத் தன்னுடைய தொழிலில் பங்காளியாக அழைத்துக்கொண்டார்கள். இதனால் இனி தன் யூகத்தின் அடிப்படையிலும், சுய ஞானத்தின் அடிப்படையிலும் வியாபாரத்தை நடத்தவேண்டிய அவசியம் இல்லை.

அவர்களுடைய விசுவாச வாழ்க்கையைச் சோதிக்கும் ஒரு தருணம் சீக்கிரமாகவே வந்தது. அந்த ஆண்டு "வேலன்டைன் தினம்" (காதலர் தினம்) சமீபமாயிற்று. மலர் வியாபாரத்தில் இது மிகவும் முக்கியமான தினமாகும். அவர்களுடைய வாடிக்கையாளர்கள் "மலர்ச் செண்டுகள்" கொடுத்து தங்களது அன்பை வெளிப்படுத்தும் நாள் அது. அவ்வாண்டில் அத்தினம் ஒரு சனிக்கிழமையாக இருந்தது. இந்த அம்மையாருக்கும், மற்ற மலர் வியாபாரிகளுக்கும் வியாழக்கிழமை வரை அமோக விற்பனை ஆயிற்று. இப்பொழுது ஒரு வினா எழுந்தது. உடனடியாக மொத்த வியாபாரிகளிடம் சென்று தன் மலர் இருப்பைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமா? அல்லது கைவசம் இருக்கும் இருப்பு போதுமா?

*அம்மையார் தனது வியாபாரக் கூட்டாளியாகிய ஆண்டவர் இயேசுவிடம் ஆலோசனை கேட்டார்கள். இத்தகைய காரியங்களில் ஆண்டவர் இவர்களுக்கு எவ்வாறு பதில் சொல்ல முடியும்? எப்பொழுதும் போலவே தன் வேதாகமத்தின் மூலம் பதில் கூறும்படி அம்மையார் தேவனை வேண்டிக்கொண்டார்கள். மலர் வியாபாரத்தைப் பற்றி வேதாகமம் குறிப்பாகப் பேசவில்லை. ஆதலால் பதில் எவ்வாறு கிடைக்கும் என்பது ஒரு புதிராகவே இருந்தது.*

*நமது அம்மையார் அன்று வாசித்த பகுதி யாத்திராகமம் 36 - ஆம் அதிகாரம். அவர்கள் படித்த பகுதி அவர்களுக்கு அதிகப் பொருத்தமாக இருந்தது:*

> "செய்ய வேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததுமல்லாமல், அதிகமாயும் இருந்தது" (வச. 7).

*இந்த வசனத்தை வாசித்தபோது அம்மையார் தனக்குள்ளாகவே ஆனந்த புன்னகை பூத்தார்கள்.*

*இந்த வசனத்தின் அடிப்படையில் கூடுதல் மலர்கள் வாங்குவதில்லை என்று அவர்கள் தீர்மானித்துக்கொண்டார்கள். இதன் விளைவாக காதலர் தினமான அன்று சனிக்கிழமை விற்பனைக்குப் போதுமான மலர்கள் கையிருப்பு இருந்தது. ஒன்றும் மிஞ்சிப் போகவும் இல்லை, குறைந்து போகவும் இல்லை.*

*விடுமுறை நாட்கள் முடிந்து அடுத்த வாரம் அம்மையார் பூச்சந்தைக்குச் சென்றபோது மற்ற மலர் வியாபாரிகள் முணுமுணுத்துக்கொண்டு, சிடுசிடுப்பாக காட்சி அளித்தனர். வேலன்டைன் தினத்தன்று அமோக விற்பனை இருக்கும் என்ற எதிர்பார்ப்பில், அவர்கள் தங்கள் கையிருப்பைப் பெருக்கிக்கொண்டிருந்தனர். ஆயினும் அதற்கு ஈடு செய்யத்தக்க விற்பனை இல்லாமற் போயிற்று. அவர்களுடைய கடைகள் வாடிய மலர்களுடன் அழுதுகொண்டிருந்தன. ஆயிரக்கணக்கான முதலீட்டை அவர்கள் இழந்துவிட்டிருந்தனர்.*

*நமது கர்த்தர் பூக்களில் அக்கறை உள்ளவரா? ஆம்! அவர் அக்கறையுள்ளவரே! கீர்த்தி பெற்ற பேரரசன் சாலொமோன் முதற்கொண்டு அவரது மகிமையுள்ள ஆட்சியின் நாட்களிலும் இந்த மலர்களின் வண்ண அழகுக்கும் கவர்ச்சிக்கும் ஈடாக அலங்கரிப்புகள் இருந்ததில்லை. காலையில் மலர்ந்து, மாலையில் உலர்ந்துவிடும் பூக்களையும் படைப்பின் தேவன் நுணுக்கத்துடனும்*

*திறமையுடனும் அழகுடனும் சிறப்புடனும் வகைவகையாக உருவாக்கியுள்ளார் (மத்.6:29).*

*கர்த்தர் தமது மக்களின் வியாபாரத்தில் அக்கறை கொண்டிருக்கிறாரா? ஆம் மெய்யாகவே அவர் அக்கறை கொண்டுதான் இருக்கிறார். எளிய விசுவாசத்துடன் அவரிடம் ஆலோசனையைக் கேட்கும் தாசர்கள் ஒவ்வொருவருக்கும் அவர் பாசத்துடன் உதவி செய்கிறார். மிகவும் அற்பமான காரியங்களிலும் அவருடைய வழிநடத்துதலையும் ஆலோசனையையும் தேடுகிறவர்களுக்கு அவர் துணை செய்கிறவராகவே இருக்கிறார்.*

MM

# 27

# புத்திக்கு எட்டாத சமாதானம்

விண்டன் வில்லியம் என்பார் அமெரிக்க விமானப் படையில் மூத்த உயர் நிலை துணை அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். அலாஸ்கா கடற்கரைப் பகுதியில் உள்ள அல்யூடியன் செயின் என்றழைக்கப்படும் தீவில் அமைக்கப்பட்ட விமானப்படை தலத்தில் அவருடைய அலுவலகம் இருந்தது. வேவு பணிக்காக இருந்த ஜெட் விமானங்கள் இங்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றை இயக்கவேண்டியதே அவருடைய பணி. இது நல்லதொரு பொறுப்பாக இருந்தபோதிலும், தனது குடும்பம் தூரத்தில் இருந்ததால் தனிமை உணர்வு அவரை அதிகமாக வாட்டியது.

எட்டு மாதங்களுக்கு முன்னர் அவருடைய மனைவி ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். குழந்தைகளுடைய உடல்நிலை கவலைக்குரியதாகவே இருந்தது. இந்நிலையில் அவர்கள் உள்ளூர் இராணுவ மருத்துவமனை மருத்துவப் பணியாளர்கள் அனைவருடனும் நன்கு அறிமுகமாகியிருந்தனர். ஆரம்பம் முதலே கவலைக்குரியதாக இருந்த குழந்தை லின்சியின்மேல் மருத்துவமனை ஊழியர்கள் அதிக அக்கறை காட்டி வந்தனர்.

அன்று கர்னல் வில்லியத்திற்குப் பணிவிடுப்பு நாள். அவர் ஒரு முதுநிலை பட்டப்படிப்பில் ஈடுபட்டிருந்தபடியால் அன்றைய

தினத்தை தன் புத்தகங்களுடன் செலவிடுவது என்று நினைத் திருந்தார். அன்று காலை 10 மணிக்கு அவரது தொலை பேசியின் மணி ஒலித்தது. விமானப் பணிக் குழுவை ஆயத்தம் செய்யும் அவ சர கட்டளையாக இருக்கும் என அவர் கருதினார். ஆனால் அழைப் பின் குரல் புதியதாக, அதிக தொலைவிலிருந்து வந்தது. அவர் மனைவி இருந்த மருத்துவமனையின் மருத்துவரே அடுத்த முனை யில் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது வந்த அழைப்பு தன் மகள் லின்சியைப் பற்றிதாகவே இருக்கும் என வில்லியம் நினைத் தார். அவளுக்கு ஏதோ ஆபத்தாக இருக்கலாம் எனக் கருதி பேசிய மருத்துவரிடம் அவளைப் பற்றி விசாரித்தார். மாறாக “இல்லை. உங்கள் மகன் காலேப் இறந்து விட்டான்” என்ற துக்க செய்தி யையே அவர் அறிவித்தார்.

வில்லியம் திகைத்துப்போனார். குழம்பிப்போய் துக்கத்தில் ஆழ்ந்தார். வேதனையில் துடித்தார். தான் கேட்ட செய்தியை மீண்டும் யோசித்து மனம் பேதலித்துப் போனார். இது திடீர் என்று ஏற்பட்ட சிசு - மரண நோய் என்று விவரித்தார்கள். இதை நம்ப முடியாத அந்தத் தகப்பன், அப்படியே மலைத்துப்போய் நின்றார். செய்வது என்னவென்று அறியாது திகைத்தார். மருத்து வர் பேசிய பின்னர் அவருடைய மனைவியும் தொடர்ந்து பேசினார். நிலைமை தாங்கக்கூடியதாகவே இருக்கிறது என்றும், ஒன்றுக்கும் கலங்க வேண்டாம் என்றும் அவள் தன் கணவருக்கு தைரியமூட் டும் வார்த்தைகளைக் கூறினாள். இக்கட்டான இந்த வேளையில் அத்தாயாருக்கு அமைதியைக் கொடுத்த தேவனுக்கு துதி உண்டா கட்டும்! இந்தத் துக்கமான நேரத்தில் தன் மனைவியின் அருகில் இருந்தால் நலமாக இருக்குமே என்று அவர் ஏங்கினார்.

இச்செய்தி வில்லியம் பணியாற்றி வந்த விமானத் தலத்தில் விரைவாகப் பரவியது. தங்கள் துணை மூத்த உயர்நிலை அதி காரியை அவருடைய குடும்பத்துடன் சேர்ப்பதற்கான ஒழுங்குகள் மிகத் துரிதமாகச் செய்யப்பட்டன. அவர் பணித்தலத்தில் இருந்து மற்றொரு அதிகாரி அவருக்குப் பதிலாளாகப் பொறுப் பெடுத்துக் கொள்ள முன்வந்தார். வேறொரு விமானத் தலத்தில் இருந்து இவரை அழைத்துச் செல்வதற்காகப் போர் ஆயுதங்களைச் சுமக்கும் பெரிய விமானம் புறப்பட்டு வந்தது. அதை ஓட்டி வந்த விமானி, வழியில் இருந்த அபாயகரமான வானிலைப் பகுதியில் துணிவுடன் ஓட்டி வந்தார். அன்று மதியம் போர் ஆயுதம் சுமந்து

*செல்லும் அந்த விமானத்தில், தனி ஒருவராக வில்லியம் தன் வீட்டிற்கு விரைவாகப் பயணமாயினார்.*

*அந்தப் போர் விமானத்தில் ஏறிய வில்லியம், ஒரு தனிமை யான இடத்தில் உட்கார்ந்து சிந்திக்கலானார். அவர் வாய்மொழி யாகவே அந்நேரத்தில் அவருக்கு இருந்த மனநிலையை நாம் கேட்போம்:*

> "என் மகன் காலேப் எவ்வளவு பாடுபட்டு தன் முடிவைச் சந்தித்திருப்பான். சீக்கிரமாகவே அவன் சென்று விட்டான். ஏன் ஆண்டவர் அவனைக் காப் பாற்றி எங்களுடன் வைத்திருக்கக் கூடாது? இத்தகைய துக்கமான சூழலுக்குள் என் குடும்பம் ஏன் கடந்து செல்ல வேண்டும்? என் மகனைப் பறிகொடுத்து விட்டேனே? இது என் இதயத்தில் ஒருவர் வேல் பாய்ச்சுவதுபோல் இருக்கிறது. என்னை யார் ஆற்றித் தேற்றுவார்கள்?"

*அவர் இவ்வாறு சிந்தித்து, அமைதியாகத் தனித்து தேவ னோடு உறவாடிக்கொண்டிருக்கையில் தேவன் அவருடன் பேச ஆரம்பித்தார். ஒரு மனிதரும் அவருடன் பேசவில்லை. ஒரு அசரீரி சத்தத்தையும் அவர் கேட்கவில்லை. யோவான் 14:27 -ஆம் வசனமே அவருடைய சிந்தையில் எழுந்து நின்றது.*

> "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமா தானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிர காரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக"

*உடனே ஒரு விந்தையான, சொல்லிமுடியாத சமாதானம் அவருடைய உள்ளத்தை மூடிக்கொண்டது. அதை அவரால் விவ ரிக்க இயலவில்லை. ஒருவர் இத்தகைய சமாதானத்தை இவ்வித மாக விவரிக்கிறார்:*

> "தேவ சமாதானம் என்னை முழுவதுமாக ஆட்கொண்டது. இது நானாக ஏற்படுத்திக்கொண்ட ஓர் உணர்வல்ல. அது வெளியே இருந்து என்னிட மாக வந்த ஒரு சமாதானம். அது என்மேல் பொழிந்தருளப்பட்ட ஒரு சமாதானம் – அது ஓர் ஆழ்ந்த மன அமைதி. இதை என்னால் சற்றேனும் புரிந்துகொள்ள முடிய வில்லை."

*வில்லியம் தன் வீடுவந்தபோது முழு விவரங்களையும் அறிந்துகொண்டார். காலேப் நன்றாகத்தான் மூச்சு விட்டுக் கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று எவ்விதக் காரணமுமின்றி அது நின்றுபோயிற்று. அவனுடைய தாயார் அவசர உதவிக்கு*

*தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டாள். அவர்கள் வீட்டின் அருகிலிருந்த ஒரு குழந்தைகள் மருத்துவர் இவர்கள் வீட்டைச் சீக்கிரமாக வந்தடைந்தார். அவரும் அவரது குழுவினரும் செயற்கை மூச்சுவிடும் கருவியைப் பொருத்தி பத்திரமாக குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.*

*சீக்கிரமாகவே அவர்களுடைய குடும்ப சிநேகிதர்கள் மருத்துவமனையில் கூடி வந்தனர். வந்தவர்கள் தாய்க்கு ஆறுதலாக நின்றனர். மருத்துவர்களின் முயற்சிகள் யாவும் பயனளிக்கவில்லை. குழந்தை காலேப் இயேசுவின் பாதம் சேர்ந்தான். மருத்துவக் குழுவினர் அனைவரும் இக்குழந்தைக்காக மிகவும் வருந்திக் கண்கலங்கினர்.*

*"இது ஏன் இவ்விதமாக நடக்கிறது?" என்ற கேள்வி நம் இருதயங்களில் எழுகிறது. அத்தகைய தருணங்களில் நமது அருமை இரட்சகர் தரும் பதில் இதுவே: "நான் செய்கிறதை இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்" (யோவான் 13:7).*

*சில ஆண்டுகளுக்குப் பின்னர், நிகழ்ந்த இந்நிகழ்ச்சியை வில்லியம் பின்நோக்கிப் பார்த்தார். கர்த்தர் எவ்வாறு இந்தக் குழந்தை காலேபின் குறுகிய கால வாழ்க்கையை உபயோகித்துத் தம்மிடம் அழைத்துக்கொண்டார் என்பதை எண்ணிப்பார்த்து அதை குறித்து இவ்வாறு எழுதிவைத்தார்:*

"எங்களுக்கு காலேப்பினுடைய வாழ்க்கை ஒரு மூச்சு போன்றே தோன்றுகிறது. அதற்குள் அவன் கடந்து போய்விட்டான். மருத்துவமனையிலும், எங்கள் சபையிலும் இருந்த அநேகரை காலேப் தன் குறுகிய வாழ்க்கையால் தொட்டிருக்கிறான். அவன் தன் வாழ்க்கைக்காக போராடிய காலங்கள் சற்றேனும் வீணாகவில்லை. அவனுடைய மரணம் அவனுடைய பாட்டனாரை அதிகமாகத் தாக்கியது. இதன் மூலம் அவர் ஆண்டவரிடம் வந்தார். காலேபின் வாழ்க்கையை எடுத்துகூறி, இவ்வித வியாதியுடைய குழந்தைகளின் பெற்றோர் அநேகருக்கு ஆறுதல் கூறும் அரிய வாய்ப்பு எங்களுக்கும் கிட்டியது. அவனுடைய வாழ்க்கை ஒரு மூச்சு விடும் கால அளவாக மட்டும் இருப்பினும், அவனுடைய தகப்பனாகிய நானும் என் இருதயத்தை ஆண்டவருக்கு முற்றுமாக ஒப்புவித்திருக்கிறேன்."

*தேவன் ஒருபோதும் தவறு செய்கிறவர் அல்லர்!* MM

---

Adapted from Colonel Jeff O'Leary, *Taking the High Ground*, Colorado Springs, CO: Cook Communications Ministries, pp. 126-127.

28

# திரும்பி வா!

விசுவாசிகளின் வாழ்க்கையில் இருபெரும் புதிர்கள் உள்ளன. ஒன்று ஒருவன் கிறித்தவனாக இருக்கையில் எவ்வளவு அதிகமாக கிறிஸ்துவை விட்டு விலகிச் செல்லமுடியும்? மற்றொன்று ஒருவன் கிறிஸ்துவிடம் மிக நெருங்கிய தொடர்பு உடையவனாக இருந்தும், தன் ஆத்துமாவை இழந்துவிடக் கூடியவனாக இருக்கக்கூடுமா? பின்வாங்கிச் சென்ற பேதுரு முதல் மனிதனுக்கும், காட்டிக் கொடுத்த யூதாஸ் இரண்டாம் மனிதனுக்கும் ஏற்ற உதாரணங்களாக இருக்கின்றனர்.

ஹக்ஃ (Hugh) என்பாருடைய அனுபவத்தையே இங்கு நாம் காணப்போகிறோம். ஹக்ஃ ஒரு மறுபடியும் பிறந்த விசுவாசி. அவர் கர்த்தருடைய மந்தையை விட்டு விலகி வெகுதூரம் சென்று அலைந்து, மீண்டும் சமாதானமும் பரிசுத்தமுமான திருப்தியுள்ள வாழ்க்கைக்கு மீட்கப்பட்டார்.

ஹக்ஃ ஒரு நல்ல கிறித்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்க்கப் பட்டவர். அவர் தனது 16 -ஆம் வயதில் இரட்சிக்கப்பட்டார். திருமறையைப் பற்றிய நல்ல அறிவு அவருக்கு இருந்தது. கர்த்தருடைய ஊழியங்களில் அவர் பங்கு கொண்டு வந்தார். அவரை அறிந்தவர்கள் எல்லோரும் அவரை மதித்து அன்பு செலுத்திவந்தனர். ஏற்ற சமயத்தில் அவருக்குத் திருமணம் நடந்தது. அவர் ஒரு நல்ல

கிறித்தவ விசுவாசியாகிய பெண்ணைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தனர். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்று அவருக்கு இருந்த வாஞ்சை, அவர் ஒரு சீடத்துவ பயிற்சி கொடுக்கும் பள்ளியில் சேரும்படி செய்தது.

அந்தச் சீடத்துவ பயிற்சி முடிவுபெற்ற பின்னர், தான் ஐக்கியங்கொண்டிருக்கும் உள்ளூர் சபையில் அவர் ஒரு முழு நேர ஊழியராகப் பணியாற்ற விரும்பினார். இருப்பினும் அச்சபையின் மூப்பர்களுக்கு அத்தகைய சிந்தை உண்டாகவில்லை. சபையில் ஓர் ஆள் ஊழியமும், குருத்துவ முறைமையும் நுழைவதற்கு இது ஏதுவாக்கிவிடும் என்று அவர்கள் அஞ்சினார்கள் போலும். இவ்வாறு அவர்கள் ஒப்புதல் தெரிவிக்காததனால் ஹக்ஃ மிகவும் சோர்வுற்று ஏமாற்றம் அடைந்தார்.

எங்கெல்லாம் வாசல் திறந்திருக்கிறதோ அங்கெல்லாம் ஹக்ஃ வேத வசனத்தைப் போதிக்கலானார். ஆயினும் தன் உழைப்பில் பலன் ஏதும் உண்டாகவில்லை என்பதைக் கண்டபோது எதிர்மாறான சிந்தனைகள் அவருடைய மனதில் உதித்தன. அவர் அதிக மனச்சோர்வு அடைந்தார்.

அவருடைய நண்பரில் ஒருவர் மிகக் கடினமான ஒரு சூழலில் சிக்கியிருக்கிறார் என்று கேள்விப்பட்டு, ஹக்ஃ அவரைச் சந்திக்கும்படி சென்றார். கூடுமானால் அவருக்கு உதவலாம் என்பதே அவரது நோக்கம். ஆயினும் அந்த நண்பர் மதக்கொள்கைகளைக் குறித்தும், வாழ்க்கையைக் குறித்தும் பல சந்தேகங்கள் கொண்டிருந்தார். பொதுவாக தேவனைக் குறித்தும், மனித வாழ்க்கையைக் குறித்தும் பல குழப்பமான எண்ணங்கள் அவருடைய மனதில் தோன்றி அவரைக் கலங்கடித்துக் கொண்டிருந்தன. இந்நிலையில் அவர் கோக்கேய்ன் போன்ற போதை மருந்துகளை உபயோகிக்கத் தொடங்கினார். இந்தச் சூழலில் ஹக்ஃகின் விசுவாசமும் ஆட்டங்கண்டது. அந்த நண்பர் இவரையும் தம்முடைய வழிக்குத் திருப்பிவிட்டு, போதை பொருட்களை உபயோகிக்கத் தூண்டிவிட்டார். படிப்படியாக ஹக்ஃ அத்தீயபழக்கத்தில் ஈடுபடலானார். இவ்வாறு பொழுதுபோக்காக மற்ற நண்பர்களுடன் சேர்ந்து குடித்தது, பின்னர் இதுவே இவர்கள் இருவருக்கும் பழக்கமாயிற்று. இறுதியில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் முழுவதிலும் ஹக்ஃ குடி போதையிலேயே செலவிடலானார்.

*தான் வாழ்ந்துகொண்டிருந்த இடத்திலிருந்து 20 மைலுக்கு அப்பால் ஹக்ஃ ஒரு வீட்டை வாங்கியபோது, அவர் முதல்முதலாக ஒரு தொலைக்காட்சிப் பெட்டியையும் வாங்கி வீட்டில் வைத்தார். இப்படிப்பட்ட காரியங்களை அவரும் அவருடைய மனைவி மரியாமும் பின்னர் திரும்பிப் பார்த்து சிந்திக்கையில், ஹக்ஃகின் வீழ்ச்சிக்கு இதுவே முக்கிய காரணமாக இருந்திருக்கிறது என்பதை உணரலாயினர்.*

*இச்சூழலில் ஹக்ஃ சபையின் எந்த ஊழியத்திலும் பங்கெடுப்பதை அவருடைய சபையார் தடைசெய்தனர். அவர் பணியாற்றிக்கொண்டிருந்த அருட்பணி நிறுவனமும் அவரை வேலை நீக்கம் செய்தது. இது ஹக்ஃகைப் பின்னும் ஆழமான படுகுழியில் விழத் தள்ளியது.*

*மற்றொரு காரியமும் அவருடைய வீழ்ச்சிக்குச் துணை செய்தது. திருமணமாகி ஐந்து பிள்ளைகளையுடைய அவருடைய மற்ற நண்பரில் ஒருவர் தன் மனைவியை விட்டுப்பிரிந்தார். அந்த மனிதனும் போதை மருந்து அருந்துபவராக இருந்தார். இந்நிலையில் தன்னை எவ்விதத்திலும் பாதுகாத்துக் கொள்ளும் சக்தியும், மன உறுதியும் இல்லாத இவரும் போதை மருந்துக்கு அடிமையானார்.*

*அடுத்த ஆண்டு இவர் மரிஜுவானா, கொக்கேய்ன், ஹெராயின், மது ஆகியவற்றையும் அப்போதைக்கு அப்போது பருகலானார். இறுதியில் இத்தகைய லாகிரி பொருட்களுக்காக ஒரே இரவில் 200 முதல் 600 டாலர்கள் செலவிடும் ஒருவராக மாறிவிட்டார். இந்தப் போதைப் பழக்கத்தைத் தொடர்வதற்காக, போதைப் பொருட்களை வாங்கி விற்கவும் ஆரம்பித்தார். இவ்வாறு நகரத்தில் இருந்த பல குற்றவாளிகளின் கும்பல்களோடு இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. தன் வசமிருந்த கிறித்தவப் புத்தகங்களை விற்றும், தான் அதிகமாக மதித்துவந்த ‘கிட்டார்’ இசைக்கருவியை அடகு வைத்தும், தன் போதைப் பழக்கத்தை வளர்க்கலானார். அவர் தன் தலைமுடியை நீளமாக வளரவிட்டு, அவருடைய நண்பர்கள் அவரைக் காணும்போது, “இவர் ஒரு கிறித்தவரா?” என்று கேள்வி கேட்கும்படி விகாரமாகக் காணப்பட்டார்.*

*முதலில் அவருடைய மனைவி மரியாம் இவற்றை நம்ப முடியாதபடி அதிர்ச்சியுற்று அதிகமாகக் கலங்கினாள். இரவு நேரங்களில் அவள் அடைந்த வியாகுலத்தையும், சிந்திய கண்ணீரையும்*

*கர்த்தர் ஒருவரே அறிவார். அவள் தொடர்ந்து தன் கணவர் மேல் வைத்திருந்த அன்பை தனது பலவித செயல்களினால் உறுதி செய் தாள். தன் கணவர் மனந்திரும்பி வருவார் என்ற நம்பிக்கையை அவள் ஒருபோதும் இழக்கவில்லை. கைகூடி வராத ஒரு எல்லைக்கு அவள் தள்ளப்பட்டபோது, தன் கணவருக்கு முடிவாக ஒரு கோரிக்கையை விடுத்தாள். "உங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளுங்கள், அல்லது என்னை விட்டுப் போய்விடுங்கள்." அவரோ அவளைவிட்டுப் பிரிந்து சென்றார்.*

*ஹக்ஃ தான் ஒரு தைரியசாலிபோல் தன்னைக் காண்பித்துக் கொண்டார். ஆயினும் உண்மையில் அவர் தனது இரவு நேரங் களில் தூக்கமின்றி அவதியுற்றார். வேதாகம வசனங்கள் அவரு டைய மனதில் திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்து உறுத்திக் கொண்டும், அவரை வருத்திக்கொண்டுமிருந்தன.*

*தான் எப்பொழுதோ மறந்துவிட்டதாக அவர் கருதிக் கொண்டிருந்த சில வேத வசனங்கள் அவருடைய நினைவுக்கு வந்தன. எலியா தீர்க்கனிடம் கர்த்தர் பேசியது போலவே, "நீ இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று ஆண்டவர் அவரிடமும் கேட்டுக்கொண்டிருந்தார். வேதாகமம் சத்தியமே என்று ஹக்ஃ ஒப்புக்கொண்டார். "துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது" (நீதி. 13:15) என்று தூய ஆவியானவர் அவரி டம் பேசி உணர்த்திக்கொண்டிருந்தார்.*

*அச்சமயத்தில் ஒரு கதை அவருடைய நினைவுக்கு வந்தது. ஒரு கடற்போரில் இரு படைத்தலைவர்கள் மோதிக்கொண்டனர். அதில் தோல்வியுற்ற கப்பல் தலைவன் தன்னை வென்ற கப்பலில் காலெடுத்து வைத்து, அதன் தலைவனின் கையைக் குலுக்க தன் கரத்தை நீட்டினான். அப்பொழுது வெற்றி பெற்ற தலைவன், "முதலில் உன் வாளை எனக்குக் கொடு" என்று கூறினான். பின் மாற்றமடைந்து, தீயவழிகளுக்குச் சென்று தோற்றுப்போயிருந்த ஹக்ஃ இப்பொழுது இதையே செய்ய வேண்டும். தன் பொல்லாத தீய ஆயுதங்களை முதலாவதாகக் கர்த்தரிடம் ஒப்படைக்கவேண்டும்.*

*இதைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் ஓடிச் சென்ற பின்னரும் தேவன் இவரைத் தனியே விட்டுவிடவில்லை. தம்மு டைய திருமறை வசனங்களால் அவரை வாட்டிக்கொண்டே இருந் தார். ஒருமுறை சங்கீதம் 28:1 -அவர் நினைவுக்கு வந்தது. "நீர்*

கேளாதவர்போல மவுனமாயிராதேயும்; நீர் மவுனமாயிருந்தால் நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாவேன்.'' இவ்வசனத்தின் வாயிலாகத் தூய ஆவியானவர் அவரோடு பேசினார். ''நரகக் குழிக்கு செல்லுகிறவர்களுக்கு ஒப்பாகவே உன் வாழ்க்கையும் இருக்கிறது'' என்று அவ்வசனம் அவரை எச்சரித்தது.

தற்கொலை செய்துகொள்வது சரியல்ல என்று ஹக்ஃ அறிவார். தான் ஓர் இக்கட்டான எல்லைக்கு வந்துவிட்டதாக உணர்ந்தார். அவர் இப்பொழுது மீளமுடியாத குழியில் விழுந்து அவதியுற்றுக் கொண்டிருந்தார். அவர் இனி செய்யக்கூடியது ஏதுமில்லை. எல்லாவற்றையும் விட்டு மரித்து விடுவதா? தான் பருகி வந்த கொடிய போதைப் பொருட்கள் தன் கல்லீரரைப் பாதித்த நிலையில் எப்படியும் ஒருநாள் மரிக்கத்தானே வேண்டும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

அவருடைய அருமை மனைவி மரியாம் தன் நம்பிக்கையைக் கைவிட்டுவிடவில்லை. அப்போதைக்கப்போது ஞாயிறு இரவு நேரங்களில் தன் வீட்டிற்கு வந்து உணவு அருந்திச் செல்லும்படி தன் கணவரை அழைப்பார். ஒருவேளை இச்செயல் அவர் ஒரு நேர்மையான தூய வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற ஒரு உந்துதலைக் கொடுத்திருக்க வேண்டும். இறுதியாக ஹக்ஃ தன் குடும்பத்துடன் சேர்ந்து இருக்க சம்மதித்தார். ஆயினும் அவர் மனந்திரும்பி தன் தேவனோடு அதுவரை ஒப்புரவாகவில்லை.

ஒருநாள் அவர் தனது பணித்தலத்திலிருந்து காரில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அவர் ஒரு லுத்தரன் சபை ஆலயத்தைத் தாண்டி வந்தபோது, அக்கட்டடத்தில் ஒரு பெரிய வாசகப் பலகை வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார். ''தீய வழியில் நீண்ட தூரம் விலகிச் சென்றிருப்பினும் பரவாயில்லை, **நீ திரும்பி வா**.'' இந்த வாசகம் அவருடன் உரக்கப் பேசிற்று. அவர் திரும்பி வரவேண்டிய நேரம் நெருங்கிவிட்டது.

மறுநாள் காலை அவர் வாசித்த வேத பகுதி சங்கீதம் 51 ஆகும். தூய ஆவியானவர் அவரைப் பலமாக அழுத்தினார். அவர் படுக்கையில் தன் தலையைப் புதைத்துக்கொண்டார்.

''தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்''

*என்ற வசனம் அவரை அழுத்தியது. தான் தேவனுக்கு விரோத மாக முரட்டாட்டம் செய்து, வெட்கமில்லாமல் அவருக்கு விரோத மாகவே பாவம் செய்துகொண்டிருக்கிறேனே என்று அதிகமாக உணர்ந்து வேதனைப்பட்டார். அவர் தன் பாவத்தை அறிக்கை யிட்டு மனந்திரும்பிய வேளையில்,* ***தன் முகத்தைப் படுக்கையிலிருந்து உயர்த்தினார்****. அவ்வமையம் சங்கீதம்* ***3:3*** *-ஆம் வசனம் அவருடைய நினைவுக்கு கொண்டுவரப்பட்டது.*

> "கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாக இருந்தீர்."

*இதைத் தொடர்ந்து நடைபெற்ற காரியங்கள் எல்லாம், மனந் திரும்பிய கெட்டகுமாரன் உவமையில் நடைபெற்ற காரியங்களே ஆகும். அவர் மனதார தன் பாவ அறிக்கையைச் செய்தார். விண் ணகத் தந்தை அவரை மன்னித்தார். நல்ல ஆடைகளை உடுத்தி, மோதிரம் அணிந்து, நல்ல காலணிகளைக் கொடுத்தார். நல்ல தொரு விருந்தும் ஆயத்தமாக்கப்பட்டது.*

*இதைத் தொடர்ந்து ஒரு நாளில், ஹக்ஃ அவர் மனைவி மாரியாமும், மற்றும் பிள்ளைகளும் தங்கள் சபைக் கூடத்தில் முதல் வரிசையில் அமர்ந்திருந்தனர். ஹக்ஃ எழுந்து நின்றார். அவர் தனது பாவங்களைச் சபையாருக்கு முன்னதாக வெளியரங்கமாக அறிக்கை செய்து, தனது உடன் விசுவாசிகளின் மன்னிப்பைக் கோரினார். விசுவாசிகளும் கர்த்தருடைய நாமத்தில் அவரை மன்னித்து ஏற்றுக்கொண்டனர்.*

*காணாமற்போன ஆடு மீண்டும் தன் மந்தையுடன் சேர்க்கப்பட்டது!*

# 29

# தவறாகப் புரிந்துகொள்ளுதல்

இன்றைய வாலிப உள்ளங்கள் இவ்வுலகை வலம்வரும் காலமாக இருக்கிறது. தாங்கள் ஏதோ ஒன்றை அடைந்து தீரவேண்டும் என்ற வாஞ்சையில் உலக நாடுகளைச் சுற்றுப் பயணம் செய்யும் காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

பெனடிக்ஃ என்ற வாலிபரும் இத்தகைய பயணத்தில் இறங்கினார். ஆயினும் அவரது நோக்கம் கடவுளைக் கண்டடைய வேண்டும் என்பதாகவே இருந்தது. உலகைச் சுற்றும் தன் பயணத்தில் அவர் பாகிஸ்தானை அடைந்தார். அங்கு ஏற்கனவே சுவிட்சர்லாந்தில் அறிமுகமாயிருந்த தன் நண்பர் ஒருவரைத் 'தற்செயலாக' சந்திக்க நேர்ந்தது. உண்மையில் இந்த நண்பர் ஒரு கிறித்தவர் அல்லர். ஆயினும் அவர் பெனடிக்குக்கு ஒரு புதிய ஏற்பாட்டை பரிசாகக் கொடுத்திருந்தார். இப்பொழுது இவ்விருவரும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இருதயத்தில் அறிந்துகொள்ள வேண்டும் என்ற தீவிர நோக்கமுடையவர்களாக இருந்தனர். அவர்கள் தங்கள் குருவாகக் கருதும் கிறிஸ்துவுக்கு முற்போக்கு சீடர்களாக விளங்கவேண்டும் என்பதில் ஒருமனப்பட்டு முனைந்திருந்தனர்.

சில பாகிஸ்தானிய கிறித்தவர்களுடன் இவர்கள் இருவரும் தங்கியிருந்தனர். இருவரும் சேர்ந்து வேதாகமத்தை உன்னிப்பாகப் படிக்கலாயினர். அதில் கூறப்பட்டவற்றிக்கு அப்பட்டமாகக் கீழ்ப்

படிய வேண்டும் என்றும், எவ்விதத்திலும் மாற்றமில்லாமல் அதில் கூறியுள்ளவற்றை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர்கள் உறுதிபூண்டனர். ஒருநாள் மாலை அவர்கள் மத்தேயு 10:9–10 ஆகிய வசனங்களை வாசித்தனர்.

"உங்கள் கச்சைகளில் பொன்னையாவது வெள்ளியையாவது, செம்பையாவது, வழிக்குப் பையையாவது, இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது தேடிவைக்க வேண்டாம்; வேலையாள் தன் ஆகாரத்துப் பாத்திரனாயிருக்கிறான்."

இவ்வசனங்கள் மிகத் தெளிவாகவே இருந்தன. இதைப் புரிந்துகொள்ள எவ்வித விளக்கமும் அவசியமாக இல்லை. உடனே இவர்கள் இருவரும் தங்களிடம் இருந்த பொருட்கள் என்ன, என்னவென்பதை கணக்கிடலாயினர். தாங்கள் உடுத்தும் ஆடை ஒன்றை மட்டுமே உடையவர்களாக இருக்க வேண்டும். காலணிகள் இருக்கக்கூடாது. முதல் காரியத்தை அவர்கள் நிறைவேற்றுவது மிக எளிமையானதாக இருந்தது. தாங்கள் அணிந்திருந்த ஆடையைத் தவிர அவர்களிடம் வேறு ஒன்றும் இல்லாதிருந்தது. ஆனால் அவர்களிடம் ஒரு ஜோடி காலணிகளே இருந்தது. கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும் சிந்தையில் அவற்றை அவர்கள் தூக்கி எறிந்துவிட்டனர். மேலும் அவர்களிடம் வங்கி பயண வரைவோலையாக 100 டாலர் பணம் இருந்தது. இதை என்ன செய்வது? மறுநாள் அதை பாக்கிஸ்தான் ரூபாயாக மாற்றி ஏழைகளுக்குக் கொடுத்து விடத் தீர்மானித்தனர்.

அன்று அவர்கள் இங்கும் அங்குமாகச் சுற்றி வந்த பின்னர், ஒரு இஸ்லாமியத் தொழுகை மண்டபம் ஒன்றில் தங்கி இரவில் இளைப்பாறினர். தரையில் விரிக்க பாயும், தங்களைப் பாதுகாக்க மேலே கூரையும் அவர்களுக்குக் கிடைத்ததைக் கண்டு அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் உறங்கிவிட்டனர். அன்று இரவு அவர்கள் அயர்ந்து தூங்கியிருக்க வேண்டும். ஏனெனில் விடியற்காலையில் தங்களிடமிருந்த பாஸ்போர்ட்டு, பணம், வங்கி பயண வரைவோலை ஆகியவை யாவும் களவு போயிருப்பதைக் கண்டனர். அவர்கள் அந்த ஊரில் இருந்த காவல் நிலையத்தை அடைந்தபோது அவர்களுடைய பாஸ்போர்ட்டு அவர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. தங்களிடமிருந்த பணம் காணாமற்போனதைக் குறித்து அவர்கள் கவலை கொள்ளவில்லை. அது அவர்களுக்கு பளுவாக இல்லாதபடி கர்த்தரே அதை எடுத்துக் கொண்டார் போலும்.

இப்பொழுது பணம், ஆகாரம், காலணி ஆகியவை ஏது மின்றி அவர்கள் நடக்க ஆரம்பித்தனர். இதையல்லவா அவர்கள் செய்யவேண்டும் என்று இறைவசனத்தில் வாசித்திருந்தார்கள். அன்று இரவு ஒரு தோட்டத்தில் படுத்து உறங்கினர். காலை உணவு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மதியம் ஒரு மரத்தின் நிழலில் இளைப்பாறினர். மாலை 4 மணி ஆனபோது பசியினா லும், களைப்பினாலும் நடக்கக் கூடாதிருந்தனர். அவ்வமையம் ஒரு மனிதன் தோன்றி, தன்னைத் தொடர்ந்து வரும்படி சைகை காட்டினான். அவன் ஆகாரம் நிறைந்திருந்த ஒரு மேஜைக்கு அருகில் அவர்களை அழைத்துச் சென்று அவர்களை உண்ணும் படிச் செய்தான். பின்னர் அவன் வணக்கம் கூறி சென்று விட் டான். ஆண்டவர் மெய்யாகவே தங்கள் தேவைகள் அனைத்தை யும் சந்தித்தார் என்று நண்பர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

இவர்களுடைய இந்த அனுபவத்தைக் குறித்து வாசகர்களே நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? மத்தேயு 10 -ஆம் அதிகாரத்தில் உள்ள இந்த வசனங்களை இவர்கள் எழுத்தளவில் பொருள் கொண்டது சரியானதுதானா? அவர்கள் தாங்கள் அணிந்திருந்த ஆடைகள் தவிர மற்ற யாவற்றையும் இவ்வாறு களைந்துவிட்டது சரியா? தேவன் இவ்வாறாகத்தான் இவர்களுடன் பேசினாரா?

இவ்விருவரும் தாங்கள் திருமறையிலிருந்து படித்த பகுதியை உன்னிப்பாகப் படித்திருப்பார்களேயாகில், இந்தக் கட்டளை கிறிஸ்துவின் சீடர்களாக உள்ள விசுவாச மக்களுக்கே உரியது என்பதையும், அவர்மேல் நம்பிக்கை வைக்காதவர்களுக்கு இது பொருந்துவது அல்ல என்பதையும் அவர்கள் கண்டிருப்பார்கள். இவ்விருவரும் கிறிஸ்துவை இதுவரை தங்கள் வாழ்க்கையில் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளவில்லையே.

மற்றும், இந்தக் கட்டளை ஒரு தற்காலிகமான கட்டளை என் றும், அது தங்கள் ஆண்டவரின் இவ்வுலக ஊழியத்தில் சரீரப்பிர காரமாகக் கூடவே இருந்த அவருடைய சீடர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும் என்பதையும் இந்த நண்பர்கள் அறிந் திருக்க வேண்டும். ஆண்டவர்தாமே அவர்களுடன் கூடவே இருந்து அவர்களுடைய தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றியிருப்பார்.

இந்தத் தற்காலிகக் கட்டளையை ஆண்டவர்தாமே மாற்றி விட்டிருப்பதை லூக்கா 22:25–36 ஆகிய வசனங்களின் மூலமாக நாம் அறிந்திருக்கிறோம்.

“நான் உங்களைப் பணப்பையும் சாமான் பையும் பாதரட்சைகளும் இல்லா மல் அனுப்பினபோது, ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா என்றார். அவர்கள், ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்றார்கள். அதற்கு அவர்: இப்பொழுதோ பணப்பையும் சாமான் பையையும் உடைய வன் அவைகளை எடுத்துக் கொள்ளக்கடவன். பட்டயம் இல்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்.”

*ஆயினும் பெனடிக்ஃகும் அவருடைய நண்பரும் நாம் அறிய வேண்டிய நல்லதொரு பாடத்தைக் கற்றுக்கொடுக்கின்றனர். தம்முடைய கட்டளைகளையும், ஒழுங்குகளையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அவற்றை அவ்வாறே தங்கள் வாழ்க்கையில் கீழ்ப்படிய நாடுகிறார்கள் என்பதை ஆண்டவர் அறிந்திருந்தார். இவ்விருவரும் கர்த்தருடைய வார்த்தைகளை எழுத்தளவாகப் புரிந்துகொண்டிருந்தனர். கர்த்தருக்கும் இது மிகவும் ஏற்புடைய தாக இருந்திருக்கிறது. இந்நிலையில் வேத வசனங்களை விளங்கிக் கொள்ளவேண்டிய தெளிவான முறையைச் சற்று நேரம் தள்ளி வைத்து, உண்மையான முறையில் தம்மைத்தேடிய இந்நண்பர் களுக்குத் தம்மையே வெளிப்படுத்தியிருக்கிறார்.* MM

---

Adapted from Sehnsucht der Betrogenen, Bielefeld, Germany: Christliche LIteratur-Verbreitung, 1986.




ஸ்டீவ் தன் குடும்பத்தாருடன் கனடா நாட்டில் உள்ள ஒன்டோரியோ மாநிலத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். அத்தருணத்தில் அவர் நோய்வாய்ப்பட்டார். அவருடைய வலது கையிலும், மணிக்கட்டிலும் சற்று உணர்வற்ற நிலை உண்டாயிற்று. இதினிமித்தம் அவர் எழுதவும் கணிணியைப் பயன்படுத்தவும் அதிகச் சிரமப்பட்டார். இதை அவர் முதலில் பெரிதாகக் கருதவில்லை. பின்னர் அவருடைய வலது கை கட்டை விரலிலும், ஆள் காட்டி விரலிலும் ஒருவித நடுக்கம் ஏற்பட ஆரம்பித்தது. அவ்வமையம் அவருடைய மனைவி கிம் உடனடியாக மருத்துவ ஆலோசனைப் பெறும்படி வற்புறுத்தினார்.

தங்கள் குடும்ப மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை கேட்பதற்கு ஏற்ற பார்வை நேரம் கிடைக்கவே சில மாதங்களாகி விட்டன. அதற்குள் அவருடைய விரலில் அடிக்கடி நடுக்கம் வர ஆரம்பித்தது. இது மணிக்கட்டு நரம்புடன் சம்பந்தப்பட்ட வியாதியாக இருக்கும் என்று மருத்துவர்கள் சந்தேகப்பட்டார்கள். பலவித பரிசோதனைகளைச் செய்யும்படியாகவும், நரம்பியல் நிபுணரைச் சந்திக்கும்படியாகவும் ஆலோசனைக் கூறினர். பரிசோதனையின் முடிவுகள் வந்தன. நரம்பியல் நிபுணரோ இது பரம்பரை வியாதி என்றும், வேலைசெய்யும்போது ஏற்படும் சாதாரண நடுக்கம்தான் என்றும் கூறினார். ஆயினும் இதை

ஸ்டீவினால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஏனெனில் அவருடைய மூதாதையர் ஒருவருக்காகிலும் இந்த வியாதி இருந்ததில்லை. மேலும் அவர் எந்த வேலையும் செய்யாமல் ஓய்ந்திருந்த சமயங்களிலும் இந்த நடுக்கம் உண்டாயிற்று.

இச்சூழலில், வான்கூவர் நகரில் வசித்து வந்த தனது தாயாரைச் சந்திக்கும்படி ஸ்டீவ் அங்குச் சென்றார். அச்சமயத்தில் அந்த நகரில் இயங்கிக் கொண்டிருந்த "பிரிட்டிஷ் கொலம்பியா பர்க்கின்சன்ஸ் நோய் மையம்" சென்று, அங்கு ஆலோசனை கேட்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. இவ்வித நடுக்கம் உண்டுபண்ணும் பர்க்கின்சன்ஸ் நோய் பொதுவாக வயதானவர்களுக்கு மட்டுமே வரும் என்றும், 40 வயதுக்குக் கீழானோருக்கு இவ் வியாதி வருவது அரிது என்றும் அங்குள்ள அம்மையார் கூறினார். ஸ்டீவ்வுக்கு அச்சமயத்தில் வயது 36 மட்டுமே. மற்றும் இந்த பர்கின்சன்ஸ் வியாதியைப்பற்றிய பல விவரங்கள் அடங்கிய தாள்களையும், சிற்றேடுகளையும் அவருக்குக் கொடுத்தார்கள். ஓய்வாக இருக்கும் போது நடுக்கம், விறைப்புத்தன்மை, தளர்ச்சி, சிறிய கையெழுத்து, நடக்கும் போது குறைந்த அளவே கைகளை வீசுதல் ஆகிய அறிகுறிகள் ஸ்டீவிடமும் இருந்தன. மற்றும் அந்த அம்மையார் நரம்பியல் மருத்துவ நிபுணர் ஒருவரை அறிமுகப்படுத்தினார்கள். டொரன்டோவில் இருந்த அவரைச் சந்தித்த போது, இவையாவும் பர்கின்சன்ஸ் நோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் என்று கூறினார்.

அவ்வமையம் ஸ்டீவின் மனைவி கிம், நாம் வான்கூவர் நகரத்திற்கே குடிபெயர்வது நல்லது என்று ஆலோசனை கூறினார்கள். ஆயினும் இது நடைமுறைக்கு ஒத்ததாக இல்லை. ஸ்டீவுக்கு வந்துள்ள இந்த வியாதியினிமித்தம் புதியதொரு இடத்தில் எவரும் வேலை கொடுக்க மாட்டார்கள். அவர்கள் தற்சமயம் வசித்து வந்த புறநகர்ப் பகுதியைவிட வன்கூவர் நகரில் விலைவாசி மிக அதிகமாகவே இருந்தது. வன்கூவரில் வசித்துக் கொண்டு தான் இப்பொழுது செய்யும் அலுவலில் நீடிப்பது என்பதும் சாத்தியமானதாக இல்லை.

காரியங்கள் இவ்வாறு இருப்பினும், அவர்கள் ஏறெடுத்த ஜெபத்தின் பயனாக, தவிர்க்கமுடியாததாகத் தோன்றின இடையூறுகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக மறைய ஆரம்பித்தன. தன்னுடைய நோயினிமித்தம், குறைவுகள் இருந்தபோதிலும், தேவ தயவால் அவருக்கு ஒரு புதிய வேலை வான்கூவர் நகரத்திலேயே

*கிடைத் தது. காப்பீட்டுத்துறையில் அவருக்கு எவ்வித அனுபவம் இல்லாதிருந்தும், அந்தக் காப்பீட்டு நிறுவனத்தார் அவரை வேலைக்கு அமர்த்திக்கொண்டனர். மேலும் ஸ்டீவ் எதிர்பார்த்த தற்கு அதிகமாகவே சம்பளம் கொடுக்க முன்வந்தனர். அவர்கள் அப்போது குடியிருந்த இடத்திலிருந்து புதிய இடத்திற்கு குடிபெயர் வதற்கு ஆகும் செலவுத் தொகை 20,000 டாலர் கொடுக்கவும் அவர்கள் சம்மதித்தனர். அந்த நிறுவனத்தின் பணியாளர்களுக்கு உதவும்படி நீண்டகால சேமிப்பு நல நிதி உதவித்திட்டமும் அமலில் இருந்தது. அந்நலத் திட்டத்தில் சேருவதற்குமுன் நிபந்தனைகளோ, கட்டுப்பாடுகளோ ஏதும்இல்லை.*

*கர்த்தருடைய வழி நடத்தும் கரமாகிய பகலின் மேக நிழல் அவர்களை வான்கூவர் நகரத்திற்குப் படிப்படியாக அழைத்துச் சென்றது. அவ்வமையம் ஸ்டீவின் தாயார் இரத்த சோகை வியாதி யினால் பீடிக்கப்பட்டிருந்தார்கள்.*

*இவ்வாறு அவர்களுடைய குடும்பச் சூழல்களுக்கும், சரீர சுகவீனங்களுக்கும் இடையில் அனைத்தும் நேர்த்தியாகக் கைகூடிவந்தன. இதைப்பற்றி ஸ்டீவ் இவ்வாறு எழுதி பதிவு செய்துள்ளார்:*

“எனது தாயாரின் வியாதி முற்றி வருகையில், எங்களுக்கிருந்த பாரம், அவர்களுடைய ஆத்துமாவைப் பற்றினதாகவே இருந்தது. கடந்த ஆண்டு களில் இதைக்குறித்து அவர்களிடம் அநேகமுறை பேசியிருக்கிறோம். பலமுறை அவர்கள் தன் ஆத்துமாவைக்குறித்து தூய ஆவியானவரால் உணர்த்தப்பட்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன். ஆயினும் இறுதித் தருணங்களில் அவர்கள் இதைக்குறித்து பேசுவதைத் தவிர்க்க ஆரம் பித்தார்கள். “கதறி அழுவதை” அவர்கள் விரும்பவில்லை போலும். ஆயினும் விசுவாசியாக இருந்த அவர்களுடைய தங்கை, அவர்களது அடக்கத்தைப் பற்றிய விவரங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது, அத்தகைய அடக்க நிகழ்வை ஸ்டீவ், கிம் ஐக்கியமாயிருக்கும் சபையாரே நடத்தவேண்டும் என்ற தங்களது விருப்பத்தைத் தெரிவித்தார்கள், அப்பொழுது எங்கள் சபையில் அதிக உதவியாக இருந்த ஒரு சகோ தரியைத் தாயாருடன் பேசும்படி கேட்டுக் கொண்டோம். கிறிஸ்துவானவர் எங்கள் தாயார்மேல் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பை அச்சகோதரி அவர் களுக்கு விளக்கிக்காட்டினார்கள். மற்றும், இயேசு கிறிஸ்து மரணப்படுக் கையிலும் அவர்களுடனிருந்து பரலோகம் நடத்திச்செல்ல முடியும் என்பதையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தினார்கள். அப்பொழுது எங்கள் தாயார், அத்தகைய உயர்பதவிக்குத் தான் எவ்விதத்திலும் தகுதி

அற்றவர்கள் என்பதை அறிக்கைச்செய்து, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட தேவ கிருபையை ஏற்றுக்கொள்ள சம்மதித்தார்கள். மிகவும் மேட்டிமை சிந்தைக் கொண்டிருந்த எங்கள் தாயார் இவ்வாறு வெளிப்படுத்தியது எங்களுக்கு உண்மையில் ஓர் அற்புதமாகவே இருந்தது. இவ்வாறு அவர்கள் இரட்சகர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். இவை நடந்து ஒருமாதத்திற்குப் பின்னர் அவர்கள் இவ்வுலகை விட்டு கர்த்தரிடம் மகிழ்வுடன் கடந்து சென்றார்கள்.

*இத்தகைய சூழலில் தங்களை ஆண்டவர் வான்கூவர் நகரத்திற்கு அழைத்து வந்தது, தாயாருக்கு உதவியாக அருகில் இருப்பதற்காகவே என்று ஸ்டீவ் உறுதியாக நம்பினார்.*

*இக்கட்டத்தில் ஸ்டீவ், கிம் ஆகிய தம்பதிகள் எவ்வாறு அவர்களுடைய திருமணமான நாள் முதற்கொண்டு கர்த்தருடைய ஊழியத்தில் உற்சாகத்துடன் ஈடுபட்டிருந்தனர் என்பதை எடுத்துக் கூற வேண்டியது அவசியமாக இருக்கிறது. முன்பு அவர்கள் குடியிருந்த கிச்சென்னா என்ற இடத்தில் ஒரு கிறித்தவ சபை உருவாக இவர்கள் கருவிகளாக இருந்துள்ளனர். கர்த்தரில் ஆழமாக ஊன்றிக் கட்டப்பட்டிருந்த இத்தம்பதிகள், தங்களது விசுவாச வாழ்க்கையில் கர்த்தர் முற்றும் உண்மை உள்ளவராக இருந்ததை உறுதி செய்துள்ளனர். லூக்கா 6:48 -ஆம் வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள மனிதனைப் போன்று இவர்களும் இருந்தனர்.*

"ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரம் போட்டு, வீடுகட்டுகிற மனிதனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெரு வெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற் போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது".

*ஸ்டீவிற்கு வந்த வியாதியின் அறிகுறிகள் முற்றிவருகையில், அவர் பணியாற்றிய வார நாட்களை நான்கு நாட்களாகக் குறைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆச்சரியப்படத்தக்க வகையில் அவருடைய புதிய நிறுவனம் எந்தச் சலுகைக் குறைவுமின்றி இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டது. அவர்களுடைய பணத்தேவை அனைத்தையும் ஆண்டவர் சந்தித்து வந்தார். இந்நிலையில் எதிர்பாராத நல்லதொரு மாற்றுச் சூழல் ஸ்டீவ் பணியாற்றி வந்த நிறுவனத்தில் உருவாயிற்று. சில சலுகைகளுடன் பணி ஓய்வுபெறும் வாய்ப்பை அந்நிறுவனம் அவர் முன்வைத்தது. நமது தம்பதிகள் ஆண்டவரிடம் ஆலோசனையைக் கேட்டனர். முதல் கொரிந்தியர் 7:21 -ஆம் வசனம் அவர்கள் கண் முன்*

*வந்து பளிச்சிட்டு நின்றது:*

"அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், கவலைப்படாதே; நீ சுயாதீனனாகக் கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக்கொள்."

*மற்றொரு வேதப் பகுதியின் மூலமாகவும் ஆண்டவர் அவர்களுடன் பேசினார்.*

"மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி" (லூக்கா 9:60).

*அத்தருணத்தில், வேதாகம விளக்க உரை ஒன்றில் இவ்வசனத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த விளக்கத்தைப் இவர்கள் படிக்கலாயினர்:*

"ஆவிக்குரிய நிலையில் மரித்தவர்களும் விசுவாசிகளைப் போலவே சில காரியங்களை நிறைவேற்ற முடியும். ஆயினும் மெய்யான விசுவாசி மட்டுமே நிறைவேற்றக்கூடிய சில காரியங்களும் உண்டு. மனந்திரும்பி கிறிஸ்துவிடம் வராத ஒருவன் செய்யக்கூடியதைச் செய்வதில் நீ உன் காலத்தை வீணாக்காதே. ஆவியில் மரித்துள்ளவர்கள், உடலில் மரித்தவர்களை அடக்கம் செய்யட்டும். ஆனால் நீயோ மிகவும் தேவையுள்ளவனாக, பயனுள்ளவனாக இருக்கிறாய். இவ்வுலகில் கர்த்தரின் காரியமாக முனைந்து ஈடுபடுவதே உனது குறிக்கோளாக அமையட்டும்".

*இத்தம்பதிகள் கர்த்தருக்காக ஒரு தீர்மானம் எடுப்பதற்கு இது மிகவும் உதவியாக இருந்தது. பணியிடத்தில் தனக்குள்ள கட்டுப்பாட்டு எல்லைகளில் இருந்தும், நெருக்கங்களிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளத்தகுந்த வாய்ப்பு தனக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை ஸ்டீவ் உணரலானார். அவர் இவ்வாறு கூறினார்:*

*"நான் விசுவாசத்துடன் கால் எடுத்து வைத்து முன்னேற, என்னுடைய வாழ்க்கையின் திட்டங்களில் ஆண்டவரே என்னை வழிநடத்திச் செல்வாராக. என் வருங்காலம் என்னவாக இருக்கும் என்பதை நான் அறியேன். ஆனால் கர்த்தர் நம்பத் தகுந்தவராக இருக்கிறார். அவர் மெய்யாகவே உண்மையுள்ளவர். என்னுடைய எஞ்சிய வாழ்க்கையை நான் ஆண்டவருக்காகவே வாழ நாடுகிறேன். ஏனெனில் அவர் முற்றிலும் நம்பத்தக்கவராக இருக்கிறார்".*

"பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" ( 2 கொரி 5:15). MM

## 31

# நற்செய்தி நவின்ற பொருத்தமற்ற இறைவாக்கு

ரவி சகரியா உலகப் பிரசித்திப்பெற்ற கிறித்தவக் கொள்கைக் காப்பாளர். இறைமக்களுக்கு ஒருமுறை ஒப்புவிக்கப்பட்டிருக்கிற விசுவாசத்திற்கு (யூதா 3). எதிராக எழும் அனைத்து வாதங்களையும் துணிவுடன் எதிர்த்து, விசுவாசத்தைப் பேணி, தற்காத்து வருபவர். உலகளாவிய அளவில் இவர் கிறித்தவத் திருப்பணியை நிறைவேற்றி வருகிறார். கல்லூரி வளாகங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் கிறித்தவத்திற்கு எதிராக எழும் தாக்குதல்களை ஏற்றவகையில் பதில் கொடுத்துத் தடுத்து நிறுத்துவதிலும், தத்துவ ரீதியாக வாதிடுவதிலும் அவர் வல்லவராகத் திகழ்கிறார். பன்னாட்டு ஆட்சித் தலைவர்கள் கூடும் கூட்டங்களிலும் அவர் கிறிஸ்துவைப் பறை சாற்றி வருகிறார்.

ரவி சகரியா தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்தவர். அவருடைய தகப்பனார் ஒரு அரசு அலுவலகத்தில் பணியாற்றியவர். இதனிமித்தம், பற்றாக்குறையும், தேவையும் அற்ற திருப்தியான வாழ்க்கையே அவருக்கு இருந்திருக்க வேண்டும். ஆயினும் அவர் வாலிபனாக இருக்கையில் பலவித மன குழப்பங்களையும் போரட்டங்களையும் சந்தித்து வந்தார்.

கல்வித்துறையில் அடுக்கடுக்காக எழும் அறிவுப் போராட்டங்கள் நிறைந்துள்ள கலாச்சாரம் அவருடைய மனநிலையைத் தாக்கி வந்தது.

*அவர் 17 வயதுடையவராக இருந்தபோது தனது பெற்றோருடன் புதுடெல்லியில் வசித்து வந்தார். அவ்வமையம் தனது வாழ்க்கையில் சற்றேனும் திருப்தி இன்றி, பொருளற்ற நிலையில் இருப்பதை உணர்ந்து, விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொள்ள முயன்றார். ஆயினும் தீவிரமாக மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு, அவருக்கு ஏற்றநேரத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது. தகுந்த விஷமுறிவு மருந்து கொடுத்து அவர் காப்பாற்றப்பட்டார்.*

*இவ்வாறு அவர் மருத்துவமனையில் தேறிவந்த சமயத்தில், இறைச்செயலாக அவருடைய நண்பர் ஒருவர் ஒரு புதிய ஏற்பாட்டை அன்பளிப்பாக அவருக்குக் கொடுத்தார். உடல் தோய்ந்து, பெலவீனமான நிலையில் இருந்த அவருக்கு சத்துள்ள நீர் இரத்தக் குழாய்கள் மூலம் செலுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. தான் பெற்ற அந்த புதிய ஏற்பாட்டைத் தன் கரத்தில் எடுத்துப் படிக்கவும் அவருக்குப் பெலன் இல்லாதிருந்தது. அதினிமித்தம் அருகில் இருந்த ஒருவர் அந் நூலிருந்து படித்துக்காட்டிக் கொண்டிருந்தார்.*

*“நான் பிழைத்திருக்கிறபடியால் நீங்களும் பிழைப்பீர்கள்” (யோவான் 14:19) என்ற வசனம், அவருக்கு வாசிக்கப்பட்டது. அந்த அனுபவத்தைக்குறித்து அவர் இவ்வாறு எழுதுகிறார்:*

> “இவ்வசனம் சரீர உயிரைக்காட்டிலும், சிறப்பான ஏதோ ஒன்றைக் குறித்துப் பேசுகிறது என்பதை நான் அறிந்துகொண்டேன். இத்தகைய ஒரு வாழ்வைப் பெறவேண்டும் என்றல்லவா நான் ஏங்கிக் கொண்டிருந்தேன்? உடனடியாகவே நான் என்னை முற்றுமாக கிறிஸ்துவுக்கு ஒப்படைத் தேன். அந்நிலையிலிருந்து நான் ஒருபோதும் பின்வாங்கியதில்லை. அன்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து என்னைக் காப்பாற்றி, மீட்டு, என் இருதயத்தில் ஒரு புதிய பாடலை நல்கினார். அன்று தேவன் எனக்கு ஒரு புதிய தாகத்தைக் கொடுத்து, புதிய விருப்பத்தையும், புதியதொரு வாழ்வையும் அருளினார் என்பதை இப்பொழுது மகிழ்வுடன் திரும்பிப் பார்த்து நினைவுகூருகிறேன்”.

*இதைப் படிக்கும் நமது வாசகர்கள் சிலருக்கு சில கேள்விகள் எழக்கூடும். வினோதமான மனமாற்றமாக அல்லவா இஃது இருக்கிறது! இந்த யோவான் 14:19 -ஆம் வசனத்தில் மறுபிறப்பைப் பற்றி எடுத்துரைக்கும் சத்தியங்கள் ஏதும் இல்லையே? கிருபை, விசுவாசம், நம்பிக்கை, சிலுவை மரணம், கிறிஸ்துவின் இரத்தம், அவருடைய ஒப்பற்ற பலிமரணம் இவை ஒன்றைப் பற்றியும் இவ்வசனம் ஏதும் கூறவில்லையே? ஆத்தும இரட்சிப்*

*புக்காக நாம் பொதுவாகப் பயன்படுத்தும் வசனங்கள் யோவான் 3:16,3:36,5:24, ரோமர் 10:9 ஆகியவை அல்லவா? பொதுவான நம்முடைய சிந்தனைகளுக்கு இது முற்றிலும் மாறுபட்டிருக்கிறதே என்ற ஐயம் எழக்கூடும்.*

*தேவன் இறையாண்மை உடையவர். அவர் எவ்வசனத்தைக் கொண்டும் வாஞ்சையுள்ள ஆத்துமாவிடம் பேசி, திருப்தி செய்யக்கூடியவர். அவர் சர்வ ஏகாதிபத்தியமுடையவராக ஒரு ஆத்துமாவை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றின விசுவாசத்திற்குள் அழைத்து வருகிறார். தேவன் சுயேட்சையாக செயலாற்ற நாம் இடம் கொடுக்க வேண்டும். நாம் சற்றேனும் எதிர்பார்க்காத வசனங்களைக் கொண்டும், நமது சிந்தனைக்கு ஒவ்வாதிருக்கும் அவருடைய வாக்கைக் கொண்டும், மனிதர்களைச் செம்மையான வழிக்குத் திருப்பிவரச் செய்யும்படி தூய ஆவியானவருக்கு நாம் இடம் கொடுக்க வேண்டும்.*

*இதோ ரவி சகரியாவின் சாட்சியைத் தொடர்ந்து கேளுங்கள்:*

“தேவனைப்பற்றிய ஒரு நூதன தாகத்தை அவர் அன்று என் உள்ளத்தில் வைத்தார். அது அவரைப் பற்றிய தாகமாகவே இருந்தது. இதற்கு முன்னதாக நான் வெற்றியடைவதைக் குறித்தும், புதிய வேலை வாய்ப்புகளைப் பெறுவதைக் குறித்தும் கருத்துடையவனாக இருந்தேன். பிறர் என்னைப் பற்றி என்ன கருதுகிறார்கள் என்பதே இதுவரை என் நினைவாக இருந்தது. தேவன் என் விருப்பங்களை மறுபக்கமாக – அவர் பக்கமாகத் திருப்பி விட்டார். இது ஏதோ ஓர் உந்துதல் தரும் சக்தி அல்லவென்றும், மாறாக இது ஒரு புதிய உறவு என்றும் நான் அறியலானேன். அன்புக்காக ஏங்கித் தாகத்தோடிருக்கும் ஒருவருக்கும், அந்த அன்பைக் கண்டடைவதற்கும் இடையே பெரிய வேற்றுமை உண்டல்லவா? தம்மைப் பற்றிய ஒரு பெரிய வாஞ்சையைத் தேவன் என் உள்ளத்தில் வைத்திருப்பதை நான் உணர்ந்தேன். அதை அவர் ஏற்கனவே என்னில் துவக்கிவிட்டிருக்கிறார் என்பதை அன்று அறிந்துகொண்டேன். இதற்கு முன்னதாக அத்தகைய வேதாகம வசனங்களை நான் கேட்டிருக்கிறேன். ஆயினும் அவை வெறும் வார்த்தைகளாக மட்டுமே இருந்துள்ளன. இப்பொழுதோ இயேசு கிறிஸ்துவாகிய அவருக்குள், நான் எவ்வாறு தேவனால் நிரப்பப்படமுடியும் என்பதை அறிந்துகொண்டேன்.”

*கிறிஸ்துவுக்காக மக்களை எவ்வாறு ஆதாயப்படுத்த முடியும் என்று இறைபக்தர்கள் எழுதிவைத்துள்ள பாடப்புத்தகங்கள் பல நம்மிடையே உண்டு. அவற்றில் விவரிக்கப்பட்டிருக்கும் பற்பல வழி முறைகளையும் நாம் அறிந்திருக்கிறோம். தேவன்*

தனது ஆதீனமாகிய அநாதித் தீர்மானத்தில், தமது திருவசனங்களின் மூலம் எவ்வாறு மனிதனுடன் பேசமுடியும் என்பதற்கு ரவி சகரியாவின் அனுபவம் நமக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக உள்ளது. MM

---

Ravi Zacharias, *Just Thinking*, Norcross, GA: RZIM Spring-Summer, 2002.

# 32

# மகிழ்ச்சியுடன் கர்த்தரைச் சேவியுங்கள்

*இறைப் பணியாற்றி வந்த மார்ட்டின், கிரேசியா பார்ன்ஹம்ஸ் தம்பதிகள் தங்களது 18 -ஆம் ஆண்டு திருமண நாளைக் கொண்டாடுவதற்காக தெற்கு பிலிப்பைன்ஸ் தீவுக்குச் சென்றிருந்தனர். தங்களது மூன்று பிள்ளைகளையும் தாங்கள் பணியாற்றி வந்த இடத்தில் இருந்த மற்ற அருட்பணியாளர்களின் கண்காணிப்பில் விட்டுவந்திருந்தனர். கடந்த 16 ஆண்டுகளாக மார்ட்டின் தன் மனைவி கிரேசியாவுடன் பழங்குடி மக்களிடம் பணியாற்றும் மிஷனரி நிறுவனத்துடன் இணைந்து உழைத்து வந்தார்.*

*மார்ட்டின் அந்தப் பணித்தலத்தில் விமான ஓட்டியாக இருந்தார். பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள அருட்பணியாளர்களுக்கும், பிற பொதுமக்களுக்கும் தேவையான அவசர உதவிகளை அளிக்கும் போக்குவரத்துக்கு மிகவும் தேவையாக இருந்த இணைப்பாளராக இவர் இயங்கி வந்தார்.*

*அவர்களுடைய திருமணநாள் கொண்டாட்டம் எதிர்பாராத வகையில் துண்டிக்கப்பட்டது. அவர்களும் மற்றும் சில மக்களும் "அபு சாயப்" என்று அழைக்கப்பட்ட இஸ்லாமிய பயங்கரவாத இயக்கத்தாரால் சிறை பிடிக்கப்பட்டனர். இந்த இயக்கத்தாரின் நோக்கம் பிலிப்பைன்ஸ் நாட்டை முதலாவது தங்களது ஆளுகையின்கீழ் கொண்டு வருவதும், அதைத் தொடர்ந்து பிற*

உலக நாடுகளை மேற்கொள்வதுமாக இருந்தது. ஒசாமா-பின்-லாடனின் "அல்கொய்தா" என்ற இயக்கத்துடன் "அபு சாயப்" இயக்கத்திற்குத் தொர்பு உண்டு என்று பொதுவாக அறியப்பட்டிருந்தது.

இந்தத் தீவிரவாத இயக்கம் தாங்கள் சிறைபிடித்த எல்லா அமெரிக்கர்களையும் கொலை செய்தனர். ஒரு சிலரை விடுதலை செய்து விட்டுவிட்டனர்.தெபோரா எப் என்ற ஒருதாதி பெண்ணுடன் பார்ன்ஹம்ஸ் தம்பதிகளையும் கைதிகளாகவே வைத்திருந்தனர். ஆறு மாதங்களாக இவர்கள் மூவரும் கைதிகளாக இருந்தனர்.

தீவிரவாதிகளினால் பிடிப்பட்ட நாள் முதல் இவர்களுக்கு இடம் விட்டு இடம் பயணம் செய்யும் கடினமான வாழ்க்கையாகவே இருந்தது. சதுப்பு நிலப்பரப்பில், போதுமான உணவின்றி, இங்குமங்குமாக இவர்கள் இழுத்துச் செல்லப்பட்டனர். பிலிப்பைன்ஸ் அரசு இராணுவத்திடம் சிக்காதவாறு அந்தத் தீவிரவாதிகள் இவர்களைக் காடுகளில் இழுத்தடித்துத் துன்பப்படுத்தினர். இத்தகைய கடின பயணத்திற்குப் பின்னர், ஒவ்வொரு நாள் இரவிலும் மார்ட்டின் தப்பி ஓடிவிடாதபடி ஒரு மரத்துடன் சங்கலிகளால் கட்டி வைக்கப்படுவார். உண்மையில் இத்தகைய சங்கிலிக் கட்டு மார்ட்டினுக்கு தேவையற்றதாகவே இருந்தது. ஏனெனில் அவர் ஏற்கனவே தன் மனைவியாகிய கிரேசியாவுடன் அன்பின் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தார். இருவரும் சேர்ந்து தப்பும் வழி கிடைக்குமாயின் ஒருவேளை அது சாத்தியமாகலாம்.

பல மாதங்கள் கடினமான பாதை வழியாக இவர்கள் கடந்து சென்றனர். இந்த இரு இறைப்பணியாளர்களும் ஒருபக்கம் நம்பிக்கை உணர்வின் சிகர உச்சியையும், மறுபக்கம் அதன் மடுவையும் எட்டிப் பிடித்தவர்களாக அலைக்களிக்கப்பட்டனர். ஒரு நாளில் விடுதலையடைவதற்குரிய வாய்ப்பு இருப்பது போல் தோன்றும். மறுநாளில் அந்த நம்பிக்கை சிதறிப்போகும். தீவிரவாதிகளுக்கும் பிலிப்பைன்ஸ் அரசுப் படைக்கும் இடையில் 17 முறை தீவிர துப்பாக்கிப்போர் இக்கால கட்டத்தில் நடைபெற்றது. ஒவ்வொரு முறையும் இவர்களுடைய நம்பிக்கை வலுப்படும். ஆயினும் ஒவ்வொரு முறையும் அது வெறும் எதிர்பார்ப்பாகவே முடிவுறும். தீவிரவாதிகள் தாங்கள் கொடுத்த வாக்கை ஒரு போதும் நிறைவேற்றவும் இல்லை.

உலகில் பல பாகங்களில் இருந்த கிறித்தவ அன்பர்கள், இவர்களுக்காக ஜெபித்தவண்ணமாக இருந்தனர். இவர்களைப் பற்றிய தகவல்களை அறியும்படி, பல விசுவாசிகள் அந்தப் பழங்குடி மிஷனரி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். ஒரு முறை சில பத்திரிக்கை நிருபர்கள், கைதிகளாக வைக்கப்பட்டிருந்த இவர்களைச் சந்தித்துச் சில செய்திகளைத் திரட்டிச் சென்றனர். இஃது உண்மையில் வியப்புக்குரிய தொன்றாகவே இருக்கிறது. நாட்டுப்படை வன்முறையாளர்களுடன் தொடர்புகொள்ள கூடாதிருக்கையில், எவ்வாறு பத்திரிக்கை நிருபர்களுக்கு இது கைகூடி வந்தது? அந்தநேர்முகச்சந்திப்புமுடிந்தவுடன், பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர் விரைவில் இந்த அருட்பணியாளர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று அறிவித்தார். ஆயினும் வாரங்கள் பல கடந்து சென்ற பின்னரும் அது கைகூடி வரவில்லை. மற்றொரு முறை, இத்தம்பதிகளை விடுவிக்கும்படி ஒரு பெரிய மீட்புத் தொகை வன்முறையாளர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகவும் வதந்தி எழுந்தது. ஆயினும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. காலம் நீண்டுகொண்டே சென்றது.

அபு சாயப் தீவிரவாதிகள் இந்த அருட்பணி தம்பதிகளைக் குறித்து ஆச்சரியமடையலாயினர். அகதிகளாக இருந்த இவர்கள் வன்முறையாளர்களை எதிர்க்கவில்லை. அவர்களுடைய பயமுறுத்தலுக்கு மார்ட்டினும் கிரேசியாவும் சற்றேனும் அஞ்சவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடம் இவர்கள் வைத்திருந்த நம்பிக்கையைக் குறித்து தீவிரவாதிகள் பெரிதும் ஆச்சரியப்பட்டனர்.

மார்ட்டினின் குழந்தைத் தன்மை வாய்ந்த விசுவாசத்தைக் குறித்து அவருடைய மணைவி கிரேசியா பின்னர் இவ்வாறு கூறினார்:

தீவிரவாதிகளுக்கும், மற்றவர்களுக்கும் அவர்களுடைய சாமான்களைச் சுமந்துச் செல்ல மார்ட்டின் எப்பொழுதும் ஆயத்தமாக இருந்தார். ஒவ்வொரு நாள் இரவிலும் அவர்கள் அவரைச் சங்கிலியிடும்போது, அதற்கு நன்றி கூறி, "நல் இரவு" வாழ்த்துக்கள் கூறுவார். அந்நாட்களிலெல்லாம் அந்தத் தீவிரவாதிகளோடு இயேசு கிறிஸ்துவைப் பற்றி தெளிவாக எடுத்து கூறி, பேசிவந்தார். ஒருமுறை அபுசாயப் ஆள் ஒருவரிடம் பாவிகள் எவ்வாறு தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பெறுவார்கள் என்றும், தேவன் எவ்வாறு பாவத்தை நியாயம் தீர்ப்பார் என்றும் தீவிரமாகப் பேசிக் கொண்டிருக்கையில், பின்புறமாக இருந்த கிரேசியா அப்

*பேச்சை நிறுத்தும்படி சைகை காட்டினார். ஆனாலும் மார்ட்டின் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய உண்மைகளை அந்த மனிதனுக்கு அமைதியாகத் தொடர்ந்து கூறிக்கொண்டேயிருந்தார்.*

*இவர்கள் கைதியாகி ஓர் ஆண்டும் பதினோரு நாட்களும் ஆனபின்னர், மார்ட்டின் மகிமைக்கு எடுத்துக் கொள்ளப்படு வார் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று, அதே விதமாக அவர் கொல்லப்பட்டார். அந்த மிஷனரி இணைய தளத்தில் இதைப்பற்றி எழுதியிருந்த விவரங்களாவன:*

இந்தக் கடினமான சூழலில் ஆண்டவர் கிருபையாக அவர்களுடன் இருந்து அவர்களைத் தேற்றிவந்தார். அன்று நாள் முழுவதும் சாமான்களைத்தூக்கி வந்த களைப்புடன் மாலையில் அதை இறக்கி வைத்து, அவர்கள் அதின்மேல் அமர்ந்தனர். அப்பொழுது மார்ட்டின் இவ்வாறு கூறினார். ''இவ்வாண்டு நமக்கு மிகக் கடினமான ஒரு ஆண்டாக இருந்திருக்கிறது, ஆயினும் இது நல்லதோர் ஆண்டாகவும் இருந்துள்ளது.'' அவர்கள் எவை எவைகளுக்காக நன்றி கூறமுடியுமோ அவைகளுக்காகத் தேவனுக்கு நன்றி கூறினர்.

*இதைக் குறித்து கிரேசியா இவ்வாறு கூறினாள்:*

''நாங்கள் ஆண்டவருக்காக நன்றி கூறினோம். எங்களிடமிருந்த வலைத் தொட்டில் படுக்கைக்காக, அணிந்திருந்த காலணிகளுக்காகவும் நன்றி கூறினோம். (எங்களுடன் வந்த செவிலி தெபோரா எப் கடந்த இரண்டு மாதங்களாக வெறும் கால்களுடன் பயணித்துக் கொண்டிருந்தார்கள்). நாங்கள் நினைவுகூரக் கூடிய அத்தனை விசுவாச மக்களுக்காகவும் நாங்கள் நன்றி கூறினோம். அவர்கள் அனைவரும் எங்களுக்காக ஜெபித்து வருகிறார்கள் என்ற நிச்சயம் உடையவர்களாக நாங்கள் இருந்தோம்''.

*அத்தருணத்தில் தூய ஆவியானவர் ஒரு தேவ வசனத்தை மார்ட்டினுடைய நினைவுக்குக் கொண்டுவந்தார். அந்த வசனம் அவர்கள் நன்றாக அறிந்திருந்த ஒரு வசனமேயாகும்.*

''மகிழ்ச்சியுடன் கர்த்தரைச் சேவித்து (ஆராதித்து) ஆனந்த சத்தத் தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள்'' (சங்கீதம் 100:2).

*மார்ட்டின் இவ்வாறு கூறினார்:*

''நாம் இந்தக் காட்டைவிட்டு உயிரோடு செல்ல முடியாமலிருக்கலாம்; ஆயினும் நாம் மகிழ்ச்சியுடன் கர்த்தரைச் சேவித்து இவ்வுலகை விட்டுக் கடந்து செல்லலாம். ஆம், இந்த இடத்திலிருந்து கொண்டே நாம்

கர்த்தரைச் சேவிக்க முடியும்; அதை நாம் மனநிறைவோடு மகிழ்ச்சியுடன் செய்வோம்''.

*மார்ட்டினுடைய மரணத்திற்கு முந்தின இரவில் அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஜெபித்தனர். கர்த்தருடைய உண்மைக்காக தேவனைத் துதித்தனர். பின்னர் படுத்து உறங்கினர். தீடீரென்று துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டு அவர்கள் விழித்துக் கொண்டனர். ஆபு சாயப் குழுவினருக்கும் பிலிப்பிய நாட்டு வேவு படையின ருக்கும் கடும் துப்பாக்கித் தாக்குதல் நடந்து கொண்டிருந்தது. அதில் காயப்பட்ட மார்ட்டின் தான் நேசித்து மகிழ்வுடன் சேவித்து வந்த ஆண்டவரண்டைச் சென்றார். அச்சமயத்தில் தெபோரா எப் அம்மையாரும் மரித்தார்கள். இந்தத் துப்பாக்கிப் போர் இரண்டு மணி நேரம் நீடித்தது.*

*மார்ட்டின் இவ்வுலகில் கர்த்தரை மகிழ்வுடன் சேவித்துக் கொண்டிருந்தார். அடுத்த கனம் அவர் கீதங்களுடன் ஆண்டவர் சந்நிதியில் காணப்பட்டார்.*

*அவருடைய மனைவி கிரேசியா தொடையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருந்த போதிலும், உயிரோடு காக்கப்பட்டார்கள். அவர் உண்மையும் உத்தமமுமான கணவரைப் பற்றி தனது பிள்ளைகளுக்கும், நண்பர்களுக்கும் அறிவிக்க மீண்டும் பணித்தலத்திற்கு வந்தார்கள்.* MM

---

As quoted in the New Tribes Mission website.

# 33

# முடிவுரை

இறையாண்மையுடைய இறைவன் எவ்வாறு தமது திருவசனத்தின் மூலம் மனிதர்களிடம் பேச முடியும் என்பதையும், பேசி வருகிறார் என்பதையும் இதுவரை தெளிவாகக் கண்டோம். வெறுமனே ஆர்வத்தைத் தூண்டும்படி இறை வசனத்தைச் கையாளுவதை நாம் விலக்கி விடுவோமாக. அல்லது நமது சொந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக இறை வசனங்களைப் பயன்படுத்தும் முறைகளையும் நாம் தள்ளிவைத்து விடுவோமாக. உள்ளான இருதய ஆழத்திலிருந்து எழும் வாஞ்சையுள்ள ஆத்துமாக்களுடன் பேசி உரையாட, தேவன் மனிதர்களிடம் இறங்கி வருகிறார் என்னும் உண்மையை நாம் ஒருபோதும் மறக்காதிருப்போமாக.

அவர் இவ்வாறு மனிதர்களுடன் பேசும்போது அதில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அவருடைய சத்தம் மிகவும் தெளிவாக இருக்கிறது. ஆயினும் மற்றவர்கள், அவர்களுடைய பின்னணியை அறியாதவர்களாகையால் அதை ஏதோ விகர்ப்பமாகக் கருதுவார்கள்.

ஒரு வேத வசனம், அது எழுதப்பட்ட காலத்திற்கும், சந்தர்ப்ப சூழலுக்கும் ஏற்ற ஒரு பொருளைக் கொடுக்கக்கூடியதாக இருக்க, சில சமயங்களில் அதன் பின்னணியிலிருந்து அதைப் பிடுங்கி

எடுக்கப்பட்ட ஒன்றாகவும் நம்முடைய பார்வைக்குத் தோன்றலாம். ஆயினும் தனிப்பட்டவர்களின் தேவைக்கு ஏற்ப அதன் பொருள் நீண்டு, அருமையாகப் பொருந்தி வருவதையும் நாம் காணமுடியும்.

சில சமயங்களில் அத்தகைய ஒரு வசனம் திருமறையில் இருந்துள்ளது என்பதை இறை சத்தம் கேட்போர் அறியாமலே இருந்திருக்கக்கூடும். அல்லது அந்த வார்த்தையில் சற்றேனும் கருத்து செலுத்தாமலும் அவர்கள் இருந்திருக்கலாம். ஆயினும் தேவன் அவ்வசனத்தின் மூலம் நம்மிடம் உரையாடும்போது, அவ்வார்த்தைகள் பல வர்ணங்களில் நமது கண்களுக்கு முன்பாக மிளிர்கின்றன. நமது தனிப்பட்டத் தேவைகளுக்கு ஏற்ற இறை வாக்காக அவை பொருந்தி அமைகின்றன.

ஒவ்வொரு தனிப்பட்ட கிறித்தவ விசுவாசியுடனும் தேவன் இவ்வாறு பேசுகிறாரா? இல்லையென்று பலரும் கூறலாம். தேவன் வேறு சில வழிகள் மூலமாகவும் பேச முடியும். உண்மை யாகவே தேவன் தமது பிள்ளைகளுடன் தமது வேத வசனத்தின் மூலம் பேசி, பொதுவான முறையில் தமது திருவுள்ள சித்தத்தையும், வழிமுறைகளையும் தெரிவிக்கிறார். இது உண்மையே.

அவ்வாறு இருப்பினும், தனியொரு நபரின் தனிப்பட்ட தேவைகளைச் சந்திக்க, சிலரிடம் அவர் மிகவும் பொருத்தமான சில வசனங்களைச் சுட்டிக்காட்டி, தேவைகளைச் சந்தித்து, உற்சாகமூட்டி, அவ்வாறு தம்மைத் தேடுகிறவர்களை ஆசீர்வாத மான பாதையில் வழி நடத்துகிறவராகவும் இருக்கிறார்.

நாம் நம் வேதாகமத்தை ஒழுங்கான முறையில் வாசிப்பத னால் இந்த நல் ஈவைப் பெறுகிறேம். இங்குமங்குமாக, ஏனோ தானோ என்ற முறையில் படிப்பதினால் அல்ல, நமக்கு பிரிய மாய் இருக்கும் ஒரு சில பகுதிகளை மட்டும் படிப்பதினாலும் அல்ல, முழு வேதாகமத்தையும் கிரமமாகப் படிப்பதினால் இத்த கைய ஆசீர்வாதத்தை நாம் அடைகிறேம். பழைய புதிய ஏற்பாடு கள் இரண்டையும் நாம் ஒழுங்காகப் படிக்க வேண்டும்.

தேவன் தமது திருவார்த்தைகளின் மூலம் பேசவேண்டும் என்று அவரிடம் கேட்பதினால் நாம் ஏற்ற பதிலைப் பெறு கிறோம். இறையாண்மையுடைய இறைவனை நாம் பெற்றிருக் கிறோம். சர்வ ஞானமுள்ள அவர் தமது இறையாண்மையில் நமது தனி ஒருவரின் விலாசத்திற்கே தனிப்பட்ட கடிதம் எழுதி

அனுப்பக்கூடியவராக இருக்கிறார். அவர் நமக்குத் தேவையான ஆவிக்குரிய செய்தியை நேரடியாக அனுப்பித்தர வல்லவராக வும் இருக்கிறார்.

அவர் நமக்கு வெளிப்படுத்திக் காட்டும் ஒவ்வொரு செய்திக்கும் நாம் உண்மையான இருதயத்துடன் கீழ்ப்படிவதில் உறுதியாக இருக்கவேண்டும். கீழ்ப்படிதலுள்ளப் பிள்ளைகளி டத்தில் அவர் அன்புகூருகிறார். அவர்களுடன் உரையாடி, ஆற்றித்தேற்றுகிறார். MM




தமிழ் நாட்டின் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் கிறித்தவ குடும்பத்தில் ஜான்சன் பிறந்து வளர்ந்தார். அவர் தன்னைப்பற்றி கூறுகையில், தான் இரட்சிக்கப்படு வதற்கு முன் இருந்த வாழ்க்கை அதிக வெட்கத்திற் குரிய வாழ்க்கையாக இருந்தது என்று கூறுகிறார். அவர் ஒரு கிறித்தவப் பெயரைத் தரித்துக் கொண்டி ருந்தபோதிலும் அவருடைய வாழ்க்கை முறை கிறிஸ்து அற்றதும், பாவம் நிறைந்த கொடூரமான வாழ்க்கை யாகவே இருந்தது. இரட்சிக்கப்படாத நாட்களில் அவர் தம்முடைய பகைவர்களைக் கொல்லவும் ஆயத்தமுடையவராக இருந்தார். அவர் தனது ஊரில் இருந்த தேவாலயத்திற்கு ஆண்டுக்கு இருமுறை, பண்டிகை நாட்களில் மட்டும் செல்லும் பழக்க முடையவராயிருந்தார். இந்துக்களின் தொழுகை முறை களிலும், சடங்குகளிலும் அவர் நாட்டமுடையவராக இருந்தார். இதனிமித்தம் இந்துக்களின் ஆலயங் களுக்குச் செல்லும் பழக்கமும் அவருக்கு இருந்தது.

ஒரு எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஜான்சன் அதிக மாகப் படித்தவர் அல்ல. இவ்வாறு வாழ்ந்து கொண்டிருந்த வாலிபரான ஜான்சன், வேலை வாய்ப்பை நாடினவராக, 1969-ஆம் ஆண்டு சென்னை நகரம் வந்தடைந்தார். சென்னை வந்த

அவர், மோட்டார் கம்பனி ஒன்றில் உதவியாளராக வேலையில் அமர்ந்தார். சற்று நாளாக அவர் வேலை செய்த பட்டறையில் அனைத்தும் சமாதானமாகவே நிறைவேறிக்கொண்டிருந்தது. ஆயினும் நாட்கள் செல்லச் செல்ல, அவருக்கும் அவருடைய உடன் தொழிலாளர்களுக்கும் இடையில் போட்டியும், பூசலும், பகையும் உருவாகத் தொடங்கின.

ஜான்சன் பெருமை உள்ளம் படைத்தவர். ஒருவரும் அவருக்கு விரோதமாகப் பேசக்கூடாது; அவருடைய வேலையில் தவறுகளைச் சுட்டிக்காட்டவும் கூடாது. அதுமட்டுமன்றி தான் செய்ததுதான் சரி என்று வாதிடுபவராக அவர் இருந்தார். இது அவருக்கும் உடன் தொழிலாளர்களுக்கும் இடையில் பகையை யும், வாக்குவாதத்தையும் உருவாக்கியது. ஒருவருக்கொருவர் வசைச் சொற்களைப் பரிமாறிக்கொள்வதும், வாய்ச் சண்டை யிடுவதும் அன்றாடப் பழக்கமாகி விட்டது. சில சமயங்களில் இது பூசல்களிலும் முடிவுறும். சில நாட்களாக இச்சூழல் நீடித்தது. காலப்போக்கில் இது பகையாக முற்றி, முடிவில் அடக்க முடியாத கோபமும், வெறியுமாக மாறிவிட்டது.

ஜான்சன் தன் சொந்த ஊரை விட்டு வந்திருந்தபடியால் சென்னையில் அவர் தனித்தவராகவே இருந்தார். அவருக்குச் சாதகமான நண்பர்கள் இங்கு ஒருவரும் இல்லை. பணி செய்யும் மோட்டார் பட்டறையில் நான்கு உடன் தொழிலாளிகள் ஒன்றா கக் கூடிக்கொண்டனர். மற்ற தொழிலாளர்களும் அவர்களையே ஆதரித்தனர். ஜான்சன் பக்கம் நிற்க ஒருவருமில்லை.

அந்த நான்கு நண்பர்களும் சேர்ந்து ஜான்சனைக் கொன்று, சரீரத்தை ஒரு பெட்டியில் வைத்து ஒருவரும் அறியாத இடத்திற்கு அனுப்பிவிட சதித் திட்டம் தீட்டினர். இதைப் பற்றிய துப்பு அவருக்குக் கிடைத்தது. இதனை ஜான்சன் ஒரு சவாலாக எடுத்துக்கொண்டார். உடனே தனது சொந்த ஊரிலிருந்த நண்பர் ஒருவர் மூலம் ஒரு கத்தியை வரவழைத்தார். அதுமுதல் ஜான்சன் எப்பொழுதும் அக்கத்தியை தன் இடுப்பில் மறைத்து வைத்து, ஏற்ற சமயம் கிடைக்கக் காத்துக்கொண்டிருந்தார். அவருடைய பகைவர்களும் இவரைக் கொல்லுவதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டிருந்தனர். இந்நிலை அநேக நாட்களாக நீடித்தது. சில சமயங்களில் இடுப்பில் கத்தியுடன் ஜான்சன் தனது பகை வர்களின் வீடுவரை செல்வார். ஆயினும் அவரது எண்ணத்தை

*நிறைவேற்ற சாதகமான சமயமும், வாய்ப்பும் கிடைக்கவில்லை. எவ்வகையிலாவது பழிவாங்க வேண்டும் என்று அவர் முனைந் திருந்தார்.*

*இவ்வாறு இருக்கையில், ஒரு ஞாயிறு மாலை அவருடைய பகைவர்கள் சென்னை மெரினா கடற்கரைக்குச் சென்றிருக் கிறார்கள் என்று ஜான்சன் கேள்விப்பட்டார். அப்பொழுது இடுப்பில் தன் கத்தியுடன், அவரும் கடற்கரைக்குச் சென்று அவர் களைத் தேடினார். ஆயினும் அவர்களை அங்கு கண்டு பிடிக்க முடியவில்லை. ஏமாற்றம் அடைந்தவராகத் திருவல்லிக்கேணி யில் உள்ள பெல்ஸ் சாலை வழியாக தன் இருப்பிடம் திரும்பிக் கொண்டிருந்தார்.*

*அச்சாலையில் 5 -ஆம் எண் இட்டிருந்த இடத்தில் திருவல் லிக்கேணி சுவிசேஷக் கூடம் இயங்கிக் கொண்டிருந்தது. ஒவ் வொரு ஞாயிறு மாலையிலும் கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக் கும் கூட்டம் அங்கு நடைபெறும். அவ்வமையம் அச்சாலை வழி யாகப் போகிறவர்களையும் கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட் கும்படி அழைப்பார்கள். இது பல ஆண்டுகளாக அச்சபையார் செய்துவந்த ஊழியமாகும்.*

*சுவிசேஷக் கூட்டம் ஆரம்பித்த வேளையில் ஜான்சன் அதன் வழியாகச் சென்று கொண்டிருந்தார். அங்குள்ள சகோதரர்கள் அவரையும் அழைத்தார்கள். இதை அவர் காதில் போட்டுக் கொள்ளாமல் செல்ல முயன்றார். ஆயினும் அச்சகோதரரில் ஒருவர் அவர் பின்புறமாக வந்து, வருந்தி அழைத்தார். தனக்கு எவ்வித விருப்பம் இல்லாதிருந்தும் ஜான்சன் உள்ளே சென்றார்.*

*அச்சமயத்தில் உள்ளே கூடத்தில் ஒரு பிரசங்கியார் கிறிஸ்து வைப்பற்றிய சுபசெய்தியைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அவர் அன்று தனது செய்திக்காக எடுத்துக் கொண்ட வசனம் மத்தேயு 26:52 -ஆம் வசனமாகும்.*

"உன் பட்டயத்தைத் திரும்ப அதன் உறையிலே போடு; பட்டயத்தை எடுக் கிற யாவரும் பட்டயத்தால் மடிந்துபோவார்கள்"

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையான அன்பின் சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கிப்போர் திருமறையில் உள்ள பல பழைய, புதிய ஏற்பாட்டு வசனங்களைத் தெரிந்தெடுப்பர். சுவிசேஷச் செய்தியை அறிமுகப்படுத்த ஏராளமான வசனங்கள்*

*திருமறையில் உள்ளன. கர்த்தரும் இழந்துபோன ஆத்துமாக்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் வாஞ்சையுடையவராக இருக்கிறார். ஆயினும் "உன் வாளைத் திரும்ப உன் உறையில் போடு" என்ற வசனத்தைக் கருப்பொருளாகக் கொண்டு, கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதைக் குறித்து நாம் ஒருபோதும் கேள்விப்பட்டதே இல்லை. இறையாண்மையுள்ள கர்த்தர் ஆத்துமாக்களின் இருதயத்திற்கு ஏற்றபடியும், அவர்களுடைய மனப்பான்மைகளுக்கு ஏற்ற விதமாகவும் அவர்களுடன் தமது திருவசனத்தின் மூலம் ஈடுபடுகிறார். அவ்வமையம் நடந்த விவரங்களை ஜான்சன் வாய்ச்சொல்லாகவே கேட்போம்:*

மேடையில் இருந்து பேசிக்கொண்டிருந்தவர் பட்டயத்தைப் பற்றி பேச ஆரம்பித்தவுடன் என் கவனம் அவர்மேல் பதிந்தது. ஏனென்றால் அவர் என்னைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார். என் விரோதிகள் அவரிடம் என்னைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும், நான் ஒரு கத்தியுடன் வந்திருக்கிறேன் என்பதையும் அவரிடம் கூறியிருப்பார்களோ என்று நினைத்தேன். அவர் பேசின எல்லா விவரங்களும் என்னைப் பற்றியதாகவே இருந்தன. அவர் கூறிய ஒன்றையும் நான் மறுத்துக் கூற முடியாதவாறு இருந்தன. தூய ஆவியானவர் என்னுடன் ஈடுபட்டுக் கொண்டு இருந்தார். "உன் வாளைத் திரும்ப உன் உறையில் போடு" என்ற வார்த்தை என் இருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. நீதியுள்ள தூய தேவனுக்கு முன்பாக நான் எவ்வளவு பெரிய பாவியாக இருக்கிறேன் என்பதை உணர்ந்து நடுங்கிப்போனேன். பாவமன்னிப்பின் அவசியத்தையும் நான் உணரலானேன். அந்தப் பொழுதே நான் என் இருதயத்தைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்படைத்தேன்.

செய்தி முடிந்த உடன், கர்த்தர் இயேசுவைக்குறித்து கூடுதலாக அறிய விரும்புகிறவர்கள் தங்கள் கரத்தை உயர்த்திக் காட்டும்படி அறிவிக்கப்பட்டது. நான் என் கரத்தை உயர்த்தினேன். பின்னர் அங்குள்ள சகோதரர்கள் இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைக் குறித்த மற்றும் சில விவரங்களை எனக்குத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். நான் ஆண்டவரிடம் என் நிலையை அறிக்கை செய்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். நானும் அவ்வாறே ஆண்டவர் இயேசுவிடம் ஜெபித்து, என்னை அவருக்கு ஒப்படைத்தேன். இதன் பின்பு என் இருதயத்தில் அமைதி நிலவியது. ஒருவித புதிய மகிழ்ச்சி உண்டாயிற்று.

*கூட்டம் முடிந்து வந்திருந்த அனைவரும் கலைந்து செல்ல, ஜான்சனும் தன் இருப்பிடம் திரும்பினார். அப்பொழுது அவருடைய இருதயத்தில் ஒரு புதிய பயம் உருவெடுக்க ஆரம்பித்தது.*

“நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் என் இரட்சகரும் ஆண்டவருமாக ஏற்றுக்கொண்டு விட்டேன். இனி நான் முன்போல் மற்றவர்களுடன் சண்டை போடமுடி யாது. என் விரோதிகள் என்னைக் கொலை செய்ய வருவார்களாகில் நான் அவர்களுடன் எதிர்த்துப் போரிட முடியாது. என்ன செய்வேன்? இத்தகைய சிந்தை என் இருதயத்தில் வந்தபோது பெரியதொரு பயம் என்னைக் கவ்விக்கொண்டது. என் கைகளும் கால்களும் நடுங்க ஆரம் பித்தன. இத்தகைய ஒரு பயத்தை இதற்கு முன்னர் நான் ஒருபோதும் அனுபவித்ததில்லை. இரவு முழுவதும் பயத்திலும் அழுகையிலும் செல விட்டேன். எப்படி ஜெபிப்பது, என்ன ஜெபிப்பது என்றும் நான் அறியாத வனாக இருந்தேன்.”

*இவ்வாறு அதிக பயத்துடன் ஒரு வழியாக அவர் இரவைக் கழித்தார். காலை புலர்ந்தது; அன்று அவருடைய வாழ்க்கையிலும் ஒரு புதிய நாள் மலர்ந்தது. அன்று காலை ஆச்சரியமான ஒரு சம்பவம் நடைபெற்றது. இதையும் அவர் வாய்ச்சொல்லாகவே கேட்போம்:*

“என்னைக் கொல்ல வேண்டும் என்று இருந்த என்னுடைய விரோதிகள் காலையில் என்னைத் தேடி வந்தனர். அவர்கள் என் முன் விழுந்து, இனி நாங்கள் உங்களுக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டோம். நீங்களும் எங்க ளுக்கு ஒரு தீங்கையும் செய்யக் கூடாது, என்று கூறி என்னிடம் மன்னிப்பு கேட்டனர். சற்று நேரம், செய்வது இன்னதென்று அறியாமல் நான் மலைத்து நின்றேன். பின்னர் அவர்களிடம் மன்னிப்புக்கேட்டு, நானும் அவர்களை மன்னிப்பதாகக் கூறினேன். நடந்த இவ்விவரங்கள் முற்றிலும் அற்புதமாகவும், ஆச்சரியப்படும் வகையிலும் இருந்தன. கர்த்தருடைய கரம் இச்சம்பவங்களுக்குப் பின்னாக இருந்திருக்கிறது என்பதை நான் பின்னர் அறிந்துகொண்டேன்”.

*இதற்குப் பின்னர் ஜான்சனுக்குத் திருமணம் நடைபெற்றது. அவருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் அனைவரும் இப்பொழுது இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய மக்களாக தங்களு டைய குடும்பங்களுடன் சாட்சியாக வாழ்ந்து வருகின்றனர். அவரும் அவருடைய மனைவியும் இப்பொழுது சென்னையில் உள்ள ஒரு கிறித்தவ சபையில் ஐக்கியமாக இருந்து வருகிறார்கள்.*

*தேவன் அருளிய திருமறை வசனங்கள் இருபுறமும் கூர்மை யாக்கப்பட்ட வாளுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆண்டவர் ஒரு ஆத்துமாவை இரட்சிக்க பேதுருவின் பட்டயத்தையும், அவனு*

டைய செயலையும் பயன்படுத்தியுள்ளார். கிறிஸ்துவின் விரோதிகளின் மேல் தனக்குள்ள கோபத்தை வெளிப்படுத்த பேதுரு தனது வாளைப் பயன்படுத்தினான். ஆயினும் அவனுடைய பாவ இயல்பைச்சுட்டிக் காட்டி, அந்த வாளைக் கொண்டே மற்றொரு ஆத்துமா ஈடேற்றம் பெற ஆண்டவர் செயல்பட்டதை இச்சம்பவம் விவரிக்கிறது. இத்தகைய கர்த்தரின் அநாதிச் செயலைக் கண்டு வியந்து அவரைப் பணிவோமாக!

அவர் புகழ் எங்கும் ஓங்குக! MM